நமது இரண்டாவது ஐந்து வருஷத் திட்டம்

सत्यमेव जयते

ளிகேஷன்ஸ் டிவிஷன்
தி, ஒலிபரப்பு மந்திரி-இலாகா
டில்லி-8

September, 1956

Price As. 6

விலை அணா 6

OUR SECOND FIVE YEAR PLAN

(Tamil)

பொருளடக்கம்

அத்தியாயம்			பக்கம்
	முன்னுரை	....	1
1.	சாதனைகளும் குறிக்கோள்களும்	....	4
2.	இரண்டாவது திட்டத்தின் கண்ணோட்டம்	....	10
3.	திட்டத்தின் சாரம்	....	17
4.	வேலை வசதி	....	31
5.	நிர்வாக ஏற்பாடுகளும் ஸ்தாபன அமைப்பும்	....	35
6.	விவசாயம்	....	43
7.	நீர்ப்பாசனமும் விசையும்	....	52
8.	தொழில்களும் சுரங்கங்களும்	....	55
9.	கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும்	....	63
10.	போக்குவரத்தும் செய்தித் தொடர்பும்	....	69
11.	கல்வியும் விஞ்ஞான ஆராய்ச்சியும்	....	76
12.	சமூக வசதிகள்	....	80

முன்னுரை

"நமது யாத்திரையின் முதல் கட்டத்தை முடித்து விட்டோம்; உடனடியாக அடுத்த கட்டத்தையும் ஆரம்பிக்க வேண்டும். ஓய்வு ஒழிச்சலின்றி வாழ்க்கைப் பிரவாகம் சென்று கொண்டிருக்கிறது. அதேபோல் ஒரு தேசத்தின் வாழ்க்கைப் பிரவாகத்தை ஒழுங்குபடுத்துகிற திட்டமும் அபி விருத்தி வேலையும் இடையருமல் நடந்துவர வேண்டியவையே. ஆகவே, நாம் தொடங்கியுள்ள யாத்திரையில் இடைத்தங்கல்கள் கிடையா."—சமீபத்தில் புது டில்லியில் நடந்த தேசிய அபிவிருத்திக் கவுன்சில் கூட்டத்துக்குத் தலைமைவகித்துப் பேசியபோது ஜவாஹர்லால் நேரு இவ்வாறு குறிப்பிட்டார்.

முதல் ஐந்து வருஷத் திட்டம் 1956 மார்ச் 31-ம் தேதி பூர்த்திப்பெற்றது. ஆனால் முதல் திட்டம் முடிவதற்குள்ளேயே யாத்திரையின் இரண்டாவது கட்டத்துக்கு ஆயத்தங்கள் ஆரம்பமாகிவிட்டன என்பதை நமது பிரதம மந்திரி எடுத்துக்காட்டியிருக்கிருர்.

கிராமங்கள், தாலுகாக்கள், ஜில்லாக்கள் ஆகியவற்றுக்கு ஐந்து வருஷ அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்குமாறு ராஜ்ய சர்க்கார்களை 1954 ஏப்ரல் மாதத்திலேயே திட்டக் கமிஷன் கேட்டுக்கொண்டது. குறிப்பாக, விவசாய உற்பத்தி, கிராமத் தொழில்கள், கூட்டுறவுத் துறை ஆகியவை சம்பந்தமாக இத்தகைய ஸ்தலவாரித் திட்டங்களைத் தயாரிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. மக்களைக் கலந்தாலோசித்து ஸ்தல வாரித் திட்டங்களைத் தயாரித்தால் சுயமுயற்சியில் மக்கள் இறங்கவும் தேசிய முயற்சியில் அதிகமாகப் பங்கெடுத்துக் கொள்ளவும் ஊக்கம் ஏற்படும் என்று கருதப்பட்டது. அதே சமயத்தில் தேச வியாபகமாகத் திட்டமிடுவதன் விரிவான அம்சங்களையும் கமிஷன் ஆராய ஆரம்பித்தது. சில தொழில் நுணுக்கப் பிரச்னைகள் சம்பந்தமாகவும், புள்ளிவிவரப்

பிரச்னைகள் சம்பந்தமாகவும் ஆராய்வதற்கு மத்திய மந்திரி - இலாகாக்கள், இந்திய புள்ளிவிவரக் கழகம் (கல்கத்தா) ஆகிய வற்றின் ஒத்துழைப்பைக் கமிஷன் பெற்றது. இந்த ஆராய்ச்சி முடிபுகளைத் தொகுத்து "ஆதார நகல்" என்ற தஸ்தாவேஜி யைப் பேராசிரியர் பி. சி. மகாலனபிஸ் 1955 மார்ச் மாதத்தில் தயாரித்தார். அதோடு நிதி மந்திரி - இலாகா, திட்டக் கமிஷன் ஆகியவற்றின் பொருளாதார டிவிஷன்கள், மத்திய புள்ளி விவர ஸ்தாபனத்தைக் கலந்தாலோசித்து "இரண்டாவது ஐந்து வருஷத் திட்டத்துக்கான தற்காலிக ஆதார நகல்" என்ற தஸ்தாவேஜியைத் தயாரித்தன. இந்த ஆதார நகல் தஸ்தாவேஜிகளைப் 'பொருளாதார நிபுணர்களின் குழு' 1955 ஏப்ரலில் ஆராய்ந்து ஒரு 'யாதாஸ்தை' தயாரித்தது. 'ஆதார நகல் தஸ்தாவேஜிகளின்' அடிப்படைக் கண்ணோட்டத்தை 1955 மே மாதத்தில் தேசிய அபிவிருத்திக் கவுன்சில் அங்கீ கரித்தது.

இரண்டாவது ஐந்து வருஷத் திட்டம் சம்பந்தமாக விவர மான பிரேரணைகளை இறுதியாக வகுப்பதற்காக மத்திய சர்க்கார், ராஜ்ய சர்க்கார்களின் பிரதிநிதிகளுடன் 1955 பிற் பகுதியில் திட்டக் கமிஷன் விவாதித்தது. இந்த விவாதங் களின் விளைவாக உருவான "ஒரு நகல் திட்டம்" 1956 பிப்ர வரியில் பிரசுரிக்கப்பட்டது. பொதுஜனங்கள் விவாதிப்பதற் காக அது பரவலாக வினியோகிக்கப்பட்டது. இந்த நகல் திட்டம் சம்பந்தமாகப் பலரும் தெரிவித்த அபிப்பிராயங் களைக் கருத்தில் கொண்டு இறுதித் திட்டத்தைத் திட்டக் கமிஷன் தயாரித்து 1956 மே மாதத்தில் பிரசுரித்தது.

இரண்டாவது திட்டம் சம்பந்தமாக இரு முக்கிய விஷ யங்களை நினைவில் கொள்ளவேண்டும்: (1) அது நெளிவு சுளிவு உள்ள திட்டமே தவிர, விறைப்பான திட்டம் அல்ல. ஐந்து வருஷத் திட்டத்தைவிடவும் அதிகமான காலகட்டத் தில் நடத்தவேண்டிய அபிவிருத்தி வேலைகளின் ஒரு பகுதி யாகவே இரண்டாவது திட்டத்தைக் கவனிக்கவேண்டும். வருஷவாரித் திட்டங்களை ஆதாரமாகக்கொண்டு ஐந்து வருஷத் திட்டகால வேலைகள் நடத்தப்படும். அவ்வப்போது உள்ள பொருளாதார, நிதி நிலைமைகள்; பல்வேறு துறை

களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் ஆகியவற்றை அனுசரித்து திட்டத்தில் உசிதமான மாறுதல்கள் செய்யப்படும். (2) துரிதமாக அபிவிருத்தி நடக்கும் ஒரு காலகட்டத்தில் பணவீக்க நிர்ப்பந்தங்கள் உருவாகக்கூடும். விவசாய உற்பத்தி சம்பந்தமாகத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள லட்சிய அளவுகளை உயர்த்துவதன் மூலம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்.

இந்திய கிராமங்களைப் புனர்நிர்மாணம் செய்வது; தொழில் முன்னேற்றத்துக்கு அஸ்திவாரம் போடுவது; உரிமை குறைந்து நலிந்து கிடக்கும் மக்கள்-பிரிவினர்கள் முன்னேறுவதற்கு அதிகமான வாய்ப்புகளை அளிப்பது ஆகியவைகளே இரண்டாவது திட்டத்தின் குறிக்கோள்கள் என்று சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

அத்தியாயம் 1

சாதனைகளும் குறிக்கோள்களும்

முதல் திட்டம்

இந்தியாவின் பொருளாதார அஸ்திவாரத்தைப் பலப்படுத்தி ஸ்திரப்படுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு முதலாவது ஐந்து வருஷத் திட்டம் வகுக்கப்பட்டது. உலக யுத்தத்தினாலும் தேசப் பிரிவினையாலும் சீர்குலைவுகள் ஏற்பட்ட சமயத்தில் அத்திட்டம் வகுக்கப்பட்டது. அதோடு, அச்சமயத்தில் கொரியாப் போரினால் பணவீக்க நிர்ப்பந்தங்களும்; உணவு, அத்தியாவசிய கச்சாப் பொருட்கள் ஆகியவற்றுக்குப் பற்றாக்குறையும் எழுந்தன. இந்தச் சீர்குலைவுகளைச் சீர்படுத்தி, தேக்கமுற்ற பொருளாதாரத்துக்குத் தெம்பூட்டுவதில் முதல் திட்டம் முனைந்தது.

சாதனைகள்

முதல் ஐந்து வருஷத் திட்ட காலத்தில் பல துறைகளில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டது. செய்ய வேண்டிய பணிகளுடன் ஒப்பிட்டால் நாம் செய்துள்ள சாதனைகள் சிறியவையே. ஆயினும் கடந்த காலத்துடன் ஒப்பிட்டால் அவை பெரிய சாதனைகளே.

முதல் திட்ட காலத்தில் தேசிய யதார்த்த வருமானம் 18 சதவிகிதம் அதிகரித்தது. 1950-51-ல் ரூ. 9,110 கோடியாக இருந்த தேசிய வருமானம், 1955-56-ல் ரூ. 10,800 கோடியாக அதிகரித்தது. 1952-53 விலைவாசிப்படி உள்ள மதிப்பீடு இது. முதல் திட்ட காலத்தில் சராசரி தனிநபரின் வருமானம் 11 சதவிகிதமும், பண்ட உபயோகச் செலவு 9 சதவிகிதமும் அதிகரித்தன. விவசாய உற்பத்தியில்தான் மிக அதிகமான முன்னேற்றம் ஏற்பட்டது. உணவு தானியங்கள் 20 சதவிகிதம் அதிகமாகவும், பருத்தி 45 சதவிகிதம் அதிகமாகவும்,

முக்கியமான எண்ணெய் வித்துக்கள் 8 சதவிகிதம் அதிகமாக வும் உற்பத்தியாயின. பெரிய, சிறிய பாசனத் திட்டங்களின் மூலம் 160 லட்சம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் புதிதாகப் பாசன வசதி பெற்றன. 1950-51-ஆம் வருஷத்தில் 677·5 கோடி கிலோ வாட்டாக இருந்த மின்சார உற்பத்தி, 1955-56-ல் 1,100 கோடி கிலோ வாட்டாக அதிகரித்தது. 1950-ல் 105 ஆக இருந்த தொழில் உற்பத்திக் குறியீட்டெண் (இண்டெக்ஸ்) 1955-ல் 161 ஆக—அதாவது 56 புள்ளிகள்— உயர்ந்தது.

அரசாங்கத் துறையிலும் தனியார் துறையிலும் பல புதிய தொழில் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. சிந்திரி ரசாயன உரத் தொழிற்சாலை, சித்தரஞ்சன் ரயில் என்ஜின் தொழிற்சாலை, ஹிந்துஸ்தான் கேபிள் தொழிற்சாலை (துர்காபூர்), ஹிந்துஸ்தான் கப்பல் துறை (விசாகப்பட்டினம்), ரயில் பெட்டித் தொழிற்சாலை (சென்னை - பெரம்பூர்), ஹிந்துஸ்தான் இயந்திரக் கருவித்தொழிற்சாலை (மைசூர்), தேசியக் கருவித் தொழிற்சாலை (கல்கத்தா), டெலிபோன் தொழிற்சாலை (பெங்களூர்), முதலியவை அரசாங்கத் தொழில் முயற்சிகளில் குறிப்பிடத்தக்கவை. அதோடு தனியார் துறையைச் சேர்ந்த இயந்திர நிர்மாணத் தொழில்களிலும் பண்ட உற்பத்தித் தொழில்களிலும் கணிசமான முதலீடு செய்யப்பட்டது. முதல் திட்ட காலத்தில் தேசப் பொருளாதாரத்தில் மொத்தம் ரூ. 3,100 கோடி நிகர விடுமுதல் போடப்பட்டதாக மதிப்பிடப்படுகிறது. 1950-51-ல் தேசிய வருமானத்தில் சுமார் 5 சதவிகிதமாக இருந்த முதலீடு 1955-56-ல் 7·3 சதவிகிதமாக அதிகரித்தது. இவ்விதம் முதலீடு அதிகரித்த போதிலும் பணவீக்க நிர்ப்பந்தங்கள் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதற்கு மாறாகத் திட்டகால ஆரம்பத்தில் இருந்ததைவிடத் திட்டகால இறுதியில் விலைவாசிகள் சுமார் 13 சதவிகிதம் குறைந்தன. வெளிநாட்டு வர்த்தகம் சம்பந்தமான பணப் பட்டுவாடா நிலைமையிலும் இந்தியாவுக்குச் சாதகமான போக்கு காணப்பட்டது. 1954-55-ல் வெளி வர்த்தக வரவும் செலவும் சமமாக இருந்தன; 1955-56-ல் செலவைவிட வருமானம் சிறிது அதிகரித்தது

தேவைகள்

மேற்கண்டவை பிரமாதமான சாதனைகளே. எனினும், நாம் இன்னும் வெகுதூரம் முன்னேற வேண்டியிருக்கிறது. இன்னும் பிரம்மாண்டமான காரியங்களை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. ஏனெனில் உலகிலேயே மிகக் குறைந்த வாழ்க்கைத் தரத்தைக் கொண்ட நாடுகளில் ஒன்றாகத்தான் இந்தியா இன்னமும் இருந்து வருகிறது. போஷாக்குத் தரத்துக்குக் குறைவான உணவையே சராசரி இந்தியர் உட்கொள்கிறார்; யுத்த காலத்துக்கு முந்திய அளவு துணியையே (16 கெஜம்) உபயோகிக்கிறார். ஜாகை வசதி படுமோசம்; கல்வி வசதிகள் பற்றாக்குறை. இந்தியாவில் சராசரி நபர் உபயோகிக்கும் மின்சாரத்தின் அளவு அமெரிக்காவில் உள்ளதில் $\frac{1}{73}$ பங்குதான்; எஃகு உபயோகம் அமெரிக்காவில் உள்ள $\frac{1}{122}$ பங்குதான். நாட்டில் பெருத்த அளவில் வேலையில்லாத் திண்டாட்டமும் முழுநேர வேலையின்மையும் காணப்படுகின்றன. வருஷத்துக்கு $1\frac{1}{4}$ சதவிகிதமாக ஜனத்தொகை வேறு அதிகரித்து வருகிறது. ஜனத்தொகை அதிகரிப்பு காரணமாகத் துரிதமான பொருளாதார அபிவிருத்திக்கு இடையூறு ஏற்படுகிறது.

அபிவிருத்தியின் அடிப்படை

மேற்கண்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்து துரிதமாக முன்னேறுவது எங்ஙனம்? பல்வேறு விஷயங்களைப் பொறுத்தே ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தின் வேகம் அமையும். முன்னேறுவதற்குச் சமுதாயத்தின் உறுதி; அதற்காக அமைப்புமுறை மாறுதல்களைச் செய்யும் சக்தி; திருந்திய உற்பத்தி முறைகளைக் கையாளும் திறமை முதலிய மனோபாவ விஷயங்களும் சமுதாய விஷயங்களும் இவற்றில் சில. சரியான சூழ்நிலைகள் இருப்பதாக வைத்துக் கொண்டாலும் பின்கண்ட அடிப்படை விஷயங்களைப் பொறுத்தே அபிவிருத்தி சாத்தியமாகும்:

1. ஜனத்தொகை அதிகரிப்பு விகிதம்.

2. தேசிய வருமானத்தில் எவ்வளவு விகிதம் முதலீடு செய்யப்படுகிறது என்ற விஷயம்.

3. முதலீட்டினால் கிடைக்கும் பலன். அதாவது முதலீடு - உற்பத்தி விகிதாச்சாரம்.

வருஷத்திற்கு $1\frac{1}{4}$ சதவிகிதமாக ஜனத்தொகை அதிகரிக்கும் என்றும்; 1950-51-ல் 5 சதவிகிதமாக இருந்த முதலீடு 1968-69-ல் 20 சதவிகிதமாக அதிகரிக்கும் என்றும்; முதலீடு உற்பத்தி விகிதாச்சாரம் 3 : 1 ஆக இருக்கும் என்றும், முதல் திட்டம் தயாரிக்கப்பட்ட போது மதிப்பிடப்பட்டது. இந்த மதிப்பீடுகளை ஆதாரமாகக் கொண்டு இந்தியாவின் தேசிய வருமானம் 1971-72-ல் இரட்டிக்கும் என்றும்; சராசரி தனி நபர் வருமானம் 1977-78-ல் இரட்டிக்கும் என்றும் ஊகிக்கப்பட்டது.

முதல் திட்ட கால அனுபவத்தின் பேரில் இந்த மதிப்பீடுகள் இப்போது மாற்றப்பட்டுள்ளன. உதாரணமாக 1951- 60 தசாப்தத்தில் (பத்தாண்டுகள்) 12·5 சதவிகிதமும்; 1961-70 தசாப்தத்தில் 13·3 சதவிகிதமும்; 1971-80 தசாப்தத்தில் 14 சதவிகிதமும் ஜனத்தொகை அதிகரிக்கலாம் என்று இப்போது மதிப்பிடப்படுகிறது. இதே போல் முதலீடு-உற்பத்தி விகிதாச்சாரம், வருஷாந்தர முதலீட்டு அளவு ஆகியவை சம்பந்தமான மதிப்பீடுகளும் இப்போது மாறியுள்ளன. புதிய மதிப்பீடுகளைப் பின்கண்ட அட்டவணை காட்டுகிறது:

வருமானம், முதலீடு அதிகரிப்பு—1951–76

(1952–53 விலைவாசிப்படி)

	திட்டம்–1 (1951–56)	திட்டம்–2 (1956–61)	திட்டம்–3 (1961–66)	திட்டம்–4 (1966–71)	திட்டம்–5 (1971–76)
1. திட்ட முடிவில் தேசிய வருமானம் (ரூ. கோடிகள்)	10,800	13,480	17,260	21,680	27,270
2. மொத்த நிகர முதலீடு (ரூ. கோடிகள்)	3,100	6,200	9,900	14,800	20,700

3. திட்ட முடிவில், தேசிய வருமானத்தில் முதலீட்டின் சதவிகிதம்	7·3	10·7	13·7	16·0	17·0
4. திட்ட முடிவில் ஜனத்தொகை (கோடிகள்)	38·4	40·8	43·4	46·5	50·0
5. முதலீடு, உற்பத்தி அதிகரிப்பு விகிதம்	1·8:1	2·3:1	2·6:1	3·4:1	3·7:1
6. திட்ட முடிவில் சராசரி நபர் வருமானம் (ரூபாய்கள்)	281	331	396	466	545

புதிய மதிப்பீடுகளின்படி, இந்தியாவின் தேசிய வருமானம் 1967-68 வாக்கிலும், சராசரி நபர் வருமானம் 1973-74 வாக்கிலும் இரட்டிக்கக்கூடும். அதாவது முந்திய மதிப்பீட்டை விட நான்கு ஆண்டுகள் முன்கூட்டியே தேசிய வருமானமும் சராசரி நபர் வருமானமும் இரட்டிக்கலாம் என்று இப்போது மதிப்பிடப்படுகிறது.

பொருளாதார அமைப்பில் மாறுதல்கள்

பல ஐந்தாண்டுத் திட்டங்களின் விளைவாகத் தேசிய வருமானம் அதிகரிக்கும். அதன் பலனாக ஜீவனோபாய அமைப்பு முறையிலும் தீட்சண்யமான மாறுதல்கள் ஏற்படும். பலவகை ஜீவனோபாய மார்க்கங்கள் தோன்றவேண்டும்; குறைவான உற்பத்தி சக்தியுள்ள துறைகளிலிருந்து அதிக உற்பத்தி சக்தி உள்ள துறைகளுக்கு உழைப்பாளர்களில் ஒரு பகுதியினர் மாறவேண்டும். பொருளாதார வளர்ச்சிக்கு இது அத்தியாவசியமானது. பிறநாடுகளில் இத்தகைய மாறுதல்கள் ஏற்பட்டிருப்பது கண்கூடு. அதாவது, அந்நாடுகளில் தேசிய வருமானம் அதிகரித்து, தொழிற்சாலைகளிலும் சர்வீஸ்களிலும் (உத்தியோகங்கள் முதலியவை) வேலை வசதி அதிகரிக்கவே, விவசாயத் துறையில் ஈடுபடுவோரின் தொகை குறைந்துவந்திருக்கிறது. இந்நாட்டில் இப்போது விவசாயத்திலும் அதைச் சார்ந்த துறைகளிலும் உழைப்பாளரில் 70 சதவிகிதம் பேர் ஈடுபட்டிருக்கிறார்கள். 1975-76 வாக்கில் இந்தத் தொகை 60 சதவிகிதமாகக் குறையும் என்றும்; அந்தக் குறைவுக்கு ஈடாகத் தொழில்கள், போக்குவரத்து,

செய்தித் தொடர்பு, கட்டட-மராமத்துத் துறைகளில் வேலை வசதி அதிகரிக்கும் என்றும் நம்பப்படுகிறது. இதற்கு ஏற்ற முறையில் இரண்டாவது ஐந்து வருஷத் திட்ட காலத்தில் முதலீடுகளைப் பயன்படுத்த உத்தேசிக்கப்படுகிறது.

ஸ்தூல முறையும் நிதி முறையும்

நாட்டின் யதார்த்த வசதிகளை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதைப் பொறுத்தே ஜீவனோபாய அமைப்பு முறையில் மாறுதல் ஏற்படும். திட்டமிடுவதில் உள்ள நிதி அம்சங்களையும் ஸ்தூல அம்சங்களையும் சரியாக நிர்ணயித்தால் தான் யதார்த்த வசதிகளைச் சரிவரப் பயன்படுத்தலாம். ஸ்தூல அம்சங்களும் நிதி அம்சங்களும் பரஸ்பரச் சார்பு உள்ளவையே. இவை இரண்டும் இணைந்து இயங்கவேண்டும். அதனால், நுகர்பொருட்கள் சம்பந்தமான தேவை - சப்ளைக்கு இடையேயும்; சேமிப்புக்கும் முதலீட்டுக்கும் இடையேயும்; வெளிநாட்டு வருமானங்களுக்கும் செலவுகளுக்கும் இடையேயும் சமநிலையை ஏற்படுத்த 2-வது திட்டம் முயற்சிக்கிறது.

(தொழிலாளர்களும், தளவாடங்கள் முதலியவையும் 'யதார்த்த வசதிகள்'. இந்த யதார்த்த வசதிகளை எவ்வாறு உபயோகித்தால் நாம் விரும்புகிற பலன் கிடைக்கும் என்பதைக் கணக்கிடுவது "ஸ்தூல முறை"யாகும். ஒரு அபிவிருத்தித் திட்டத்தை நிறைவேற்ற எவ்வளவு நிதி தேவைப்படும் என்று கணக்கிடுவது 'நிதி முறை'யாகும்.)

அபிவிருத்தி வேலை இடையறுமல் நடந்துவர வேண்டும். அதனுல்தான் ஐந்தாண்டை விடவும் நீண்டகாலத் திருஷ்டியுடன் இரண்டாவது திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது: இத்தகைய தூரதிருஷ்டியுடன் நெளிவுசுளிவையும் கொண்ட திட்டம் இது. ஐந்தாண்டுத் திட்டத்திற்கு உட்பட்டு வருஷவாரித் திட்டங்கள் தயாரிக்கப்படும். ஏற்கெனவே ஏற்பட்ட முன்னேற்றம், ஆதார வசதிகள் சம்பந்தமான மாறுதல்கள், புதிய தேவைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டே வருஷவாரித் திட்டங்கள் தயாரிக்கப்படும். இவ்விதம் ஐந்தாண்டுத் திட்டத்தில் அவ்வப்போது உசிதமான மாறுதல்களைச் செய்து கொள்ள வசதி இருக்கும்.

அத்தியாயம் 2

இரண்டாவது திட்டத்தின் கண்ணோட்டம்

சோஷலிச சமுதாயம்

"சோஷலிசப் பாணி சமுதாயத்தை" குறிக்கோளாகக் கொண்டு இரண்டாவது திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. அதாவது தனியார் லாபத்தை யல்லாமல் சமுதாய நலனையே அடிப்படையாகக் கொண்டு அபிவிருத்தி மார்க்கங்கள் நிர்ணயிக்கப்படும். தேசிய வருமானத்தையும் வேலை வசதியையும் மாத்திரம் அதிகரிப்பதோடு திட்டம் நின்றுவிடாது. சமுதாயத்தில் உரிமை குறைந்த வகுப்பினர்களுக்குப் பொருளாதார அபிவிருத்தியின் பலன்கள் மேன்மேலும் கிடைப்பதற்கு வழி செய்யப்படும். தவிர, வருமானங்களிலும் செல்வத்திலும் நபர்களிடையே உள்ள ஏற்றத்தாழ்வுகள் படிப்படியாகக் குறைக்கப்படும்.

குறிக்கோள்கள்

மேற்கண்ட பொதுவான கண்ணோட்டத்துடன், சில குறிப்பிட்ட குறிக்கோள்களும் இரண்டாவது திட்டத்துக்கு உண்டு. அவை வருமாறு:

1. நாட்டின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் விதத்தில் தேசிய வருமானத்தைக் கணிசமாக அதிகரிப்பது.
2. நாட்டைத் துரிதமாகத் தொழில்மயமாக்குவது—குறிப்பாக, ஆதாரத் தொழில்களையும், கனரகத் தொழில்களையும் அபிவிருத்தி செய்வது.
3. வேலை வாய்ப்புகளைப் பெரிய அளவில் விஸ்தரித்தல்.
4. வருமானம், செல்வம் சம்பந்தமான ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்து பொருளாதார சக்தியை இப்போதைவிடச் சமமாக வினியோகித்தல்.

இந்தக் குறிக்கோள்கள் எல்லாம் பரஸ்பரச் சார்பு உள்ளவையே. உதாரணமாக, உற்பத்தி பெருகினால்தான் வாழ்க்கைத் தரம் உயரும். நாடு துரிதமாகத் தொழில்மயமானால்தான் உற்பத்தி பெருகும். ஆதாரத் தொழில்களை நிறுவினால்தான் நாட்டைத் தொழில்மயமாக்க முடியும். ஆதாரத் தொழில்களை வளர்ப்பதால் நுகர்பொருட்களுக்குத் தேவை அதிகரிக்கிறது. இயந்திரங்களைவிடத் தொழிலாளர்களை அதிகமாக உபயோகித்து நுகர்பொருட்களை உற்பத்தி செய்தால் வேலையில்லாத் திண்டாட்டம் குறையும். வேலையில்லாத் திண்டாட்டம் குறைந்தால் நபர்களின் வருமானம் அதிகரிக்கும்.

தொழில் கொள்கை

திட்டத்தின் குறிக்கோள்கள் சித்தியாவதற்காக, நாட்டின் பொருளாதார வாழ்வில் அரசாங்கம் மேன்மேலும் அதிகமான பொறுப்பை ஏற்பது அவசியம். இவ்வாறு அரசாங்கம் பொறுப்பு ஏற்பதற்குப் புதிய தொழில் கொள்கைத் தீர்மானம் வழி செய்கிறது. (1956, ஏப்ரல் மாதம் இத் தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டது). அரசாங்கத் துறையைப் பெரிதும் விஸ்தரிக்க இத்தீர்மானம் வசதி அளிக்கிறது. இதன்படி மூலாதாரமான, கேந்திரமான எல்லாத் தொழில்களும், பொதுநல உபயோக சர்வீஸ்கள் எல்லாமும் அரசாங்கத் துறையில் சேர்க்கப்பட்டுள்ளன. அத்தியாவசியமானவையும், அதிகமான முதலீடு தேவைப்படுபவையுமான தொழில்கள் அரசாங்கத் துறையில் ஸ்தாபிக்கப்படும். ஏனெனில் அதிக அளவு முதலீடு செய்வதற்கு அரசாங்கத்தால்தான் இயலும்.

புதிய தொழில் கொள்கைத் தீர்மானத்தில் இரு ஜாபிதாக்கள் உள்ளன. ஒரு ஜாபிதாவில் (ஏ-ஜாபிதா) 17 தொழில்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. வருங்காலத்தில் இவற்றை அமைத்து வளர்ப்பது அரசாங்கத்தின் தனிப் பொறுப்பாக இருக்கும். மற்றொரு ஜாபிதாவில் (பி-ஜாபிதா) சமூக முக்கியத்துவம் வாய்ந்த 12 தொழில்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவை படிப்படியாக அரசாங்க உடைமையாக்கப்படும். பி-ஜாபிதா தொழில் பிரிவில் புதிய தொழிற்சாலைகளை

பொதுவாக, அரசாங்கமே அமைக்கும். ஆயினும் அரசாங்கத்துக்கு அனுசரணையாகத் தனியார்களும் இத்தொழில்களை அபிவிருத்தி செய்யலாம். இரு ஜாபிதாக்களிலும் சேராத மற்றத் தொழில்களெல்லாம் தனியார் துறைக்கே விடப்பட்டுள்ளன. எனினும் அவசியமானால் எந்தத் தொழிலிலும் அரசாங்கம் பிரவேசிக்க முடியும்.

அந்த இருவகை ஜாபிதாக்கள் வருமாறு :

ஏ-ஜாபிதா

1. ஆயுதங்களும், பாதுகாப்புச் சாதனம் சம்பந்தப்பட்ட மற்றப் பொருட்களும்.
2. அணுசக்தி.
3. இரும்பு, எஃகு.
4. கனரக இரும்பு, எஃகு வார்ப்படங்களும் இணைப்புகளும்.
5. இரும்பு-எஃகு உற்பத்தி, சுரங்கவேலை, இயந்திரக் கருவி உற்பத்தி ஆகியவற்றுக்கும்; மத்திய சர்க்கார் குறிப்பிடக்கூடிய வேறு ஆதாரத் தொழில்களுக்கும் தேவைப்படுகிற கனரக இயந்திர சாதனங்கள்.
6. பெரிய ஹைட்ராலிக் டர்பைன்கள், நீராவி டர்பைன்கள் உட்பட கனரக மின்சார இயந்திரங்கள்.
7. நிலக்கரியும், பழுப்பு நிலக்கரியும் (லிக்னைட்).
8. கனிஜ எண்ணெய்கள்.
9. இரும்புத்தாது, மாங்கனீஸ் தாது, குரோம் தாது சுண்ணும்பு, கந்தகம், தங்கம், வைரம் ஆகியவற்றை வெட்டியெடுத்தல்.
10. செம்பு, ஈயம், துத்தநாகம், வெள்ளீயம், மாலிப்டெனம், உல்பிரம் ஆகியவற்றை வெட்டியெடுத்துப் பக்குவப்படுத்துதல்.

11. 1953-ம் வருஷ அணுசக்தி (உற்பத்தி, உபயோகக் கட்டுப்பாடு) உத்தரவின் தப்சிலில் குறிப்பிடப் பட்டுள்ள கனிப் பொருட்கள்.

12. விமானங்கள்.

13. விமானப் போக்குவரத்து

14. ரயில்வே போக்குவரத்து

15. கப்பல் கட்டுதல்.

16. டெலிபோன்கள், டெலிபோன் கம்பிகள், தந்தி, வயர்லஸ் சாதனங்கள் (ரேடியோ ரிசீவிங் செட்டுகள் நீங்கலாக).

17. மின்சார உற்பத்தியும் வினியோகமும்.

பி-ஜாபிதா

1. 1949-ம் வருஷ கனிப்பொருள் மானிய விதிகளின் 3-வது பிரிவில் விளக்கப்பட்டுள்ள "சிறு கனிப் பொருட்கள்" நீங்கலாக உள்ள மற்ற எல்லாக் கனிப்பொருட்களும்.

2. அலுமினியமும், ஏ-ஜாபிதாவில் சேராத மற்ற இரும்புக் கலப்பற்ற உலோகங்களும்.

3. இயந்திரக் கருவிகள்.

4. இரும்புக் கலப்பு உலோகங்களும், கருவி எஃகுகளும்.

5. மருந்துகள், சாயங்கள், பிளாஸ்டிக்குகள் முதலியவற்றை உற்பத்தி செய்யும் ரசாயனத் தொழில்களுக்குத் தேவைப்படுகிற ஆதார, மற்றும் உப மூலப் பண்டங்கள்.

6. ஆண்டிபயாட்டிக் மருந்துகளும், மற்ற அத்தியாவசிய மருந்துகளும்.

7. ரசாயன உரங்கள்.

8. செயற்கை ரப்பர்.

9. நிலக்கரியைப் கார்பனாக மாற்றுதல்.

10. ரசாயனக் கூழ்.
11. ரஸ்தாப் போக்குவரத்து.
12. கடல் போக்குவரத்து.

இந்தப் பாகுபாடுகள் நெளிவுசுளிவற்ற பிரிவினைகள் அல்ல. ஏ-ஜாபிதா தொழில்களில்கூட தனியாரின் ஒத்துழைப்பை அரசாங்கம் நாடலாம். ஆனால் துரிதமான பொருளாதார அபிவிருத்திக்கும், தேசியக் கொள்கையின் குறிக்கோள்களுக்கும் உகந்த முறையில்தான் தனியாரின் ஒத்துழைப்பை இவ்வாறு நாடலாம்.

சிறு தொழில்களும் குடிசைத் தொழில்களும்

சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தைப் புதிய தொழில் கொள்கைத் தீர்மானம் வலியுறுத்துகிறது. இத்தொழில்கள் ஏராளமான பேருக்கு உடனடியாகப் பிழைப்பு அளிக்க வல்லவை. முடங்கிக் கிடக்கும் விடுமுதலையும் உழைப்புத் திறனையும் பயன்படுத்துவதற்கு இத்தொழில்கள் உதவுகின்றன. தவிர, நாடெங்கும் பரவலாக உள்ள ஏழை மக்கள் வருமானம் பெறுவதற்கு இந்தத் தொழில்கள் உதவுகின்றன. தேசப் பொருளாதார அமைப்பில் இத்தொழில்கள் அதிக அளவில் செயல்படுவதற்கு ஊக்கமும் உதவியும் அளிக்கப்படும்.

ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல்

முற்போக்குச் சமூக-பொருளாதாரத் தத்துவத்தை மூச்சாகக் கொண்டது இரண்டாவது திட்டம். பொருளாதார நிலைமையை அபிவிருத்தி செய்வதுடன் சமூக - பொருளாதார ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கும் அது முயற்சிக்கும்.

இந்தக் குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக நிதி ஏற்பாடுகளும், அமைப்புமுறை மாறுதல்களும், வேறு பல ஏற்பாடுகளும் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. அதிக வருமானக்காரர்கள் சம்பந்தப்பட்டவரை, வருமானத்துக்குப் பதில் செலவை அடிப்படையாகக் கொண்டு வரி விதிப்பது; சொத்துக்கு வருஷாந்தர வரி விதிப்பது; சொத்து நன்கொடை

களுக்கு வரி விதிப்பது ; முதலீட்டு லாபங்களுக்கு வரி விதிப்பது முதலிய யோசனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. தனிநபர் வருமானத்துக்கு உயர்ந்தபட்ச வரம்பு நிர்ணயிக்கும் யோசனையைத் திட்டம் சிலாகிக்கவில்லை. ஆயினும் பணக்காரர்களுக்கு மேன்மேலும் வரி விதிப்பதன் மூலமும், அமைப்புமுறை மாறுதல்கள் மூலமும், ஒருசிலர் கையில் செல்வம் குவியாமல் தடுக்கலாம் என்று திட்டம் சுட்டிக்காட்டுகிறது. முதல் திட்ட காலத்தில் ஏற்படுத்தப்பட்ட அமைப்புமுறை மாறுதல்கள் சம்பந்தமாகத் திட்டக் கமிஷன் திருப்தி தெரிவித்திருக்கிறது. விவசாயச் சீர்திருத்தங்கள், மானேஜிங் ஏஜன்ஸி முறையில் சீர்திருத்தம், ஜாயிண்ட் ஸ்டாக் கம்பனிச் சட்டத் திருத்தம், இம்பீரியல் பாங்கைத் தேசியமயமாக்கியது, கூட்டுறவுத் துறையின் அபிவிருத்தி ஆகியவை இத்தகைய அமைப்புமுறை மாறுதல்களுக்கு உதாரணங்கள். மேலே உள்ள ஒருசிலர் கையில் உரிமையும் உடைமையும் குவிவதைக் குறைப்பதற்காக முன்னைவிடத் தீவிரமான அமைப்புமுறை மாறுதல்களை ஏற்படுத்த வேண்டுமென்று கமிஷன் வலியுறுத்தியுள்ளது.

பொருளாதாரக் கோள்கையும் வழிமுறைகளும்

திட்டத்திற்கு வேண்டிய நிதி வசதிகளைத் திரட்டுவது மாத்திரம் பொருளாதாரக் கொள்கையின் நோக்கமன்று. திட்டத்துக்கு உகந்த முறையில் பண்ட உபயோகத்தை ஒழுங்குபடுத்துவது, யதார்த்த வசதிகளைப் பயன்படுத்துவது என்ற பொறுப்புகளும்பொருளாதாரக் கொள்கைக்கு உண்டு. கோரிய குறிக்கோள்களை அடைவதற்குப் பொதுவாக இரு வழிமுறைகள் உண்டு: (1) நிதி, பணம் சம்பந்தமான கொள்கையின் மூலம் பொருளாதார நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல்; (2) ஏற்றுமதி-இறக்குமதிக் கட்டுப்பாடுகள்; தொழில், வர்த்தகங்களுக்கு லைசன்ஸ் முறையை ஏற்படுத்துதல், விலைக் கட்டுப்பாடுகள், பற்றாக்குறையான மூலப்பொருட்களைப் பங்கிடுதல் முதலிய வழிகளில் பொருளாதாரத்தின் குறிப்பிட்ட பிரிவுகளை ஒழுங்குபடுத்துதல். சர்வ வியாபகமான ஒரு திட்டத்தில் இந்த இருவகைக் கட்டுப்பாடு

களையும் உபயோகிக்கவேண்டியிருக்கும். அதனால்தான் இவற்றைக் கையாளுமாறு திட்டக் கமிஷன் சிபாரிசு செய்திருக்கிறது. பணவீக்கம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக உணவு தானியங்கள் போன்ற கேந்திரமான பண்டங்களைச் சேமித்து வைக்கவேண்டும் என்றும் கமிஷன் சிபாரிசு செய்திருக்கிறது. விலைவாசிகளில் திடீர் மாறுதல்களைத் தடுப்பதற்கு இந்தச் சேமிப்புகளைச் சர்க்கார் பயன்படுத்தலாம்.

அத்தியாயம் 3

திட்டத்தின் சாரம்

முதல் திட்ட கால அபிவிருத்தி வேலையைத் தொடர்ந்து நடத்துவதற்கு இரண்டாவது திட்டம் வழிசெய்கிறது. ஆனால் எந்தெந்தத் துறைகளுக்குப் பிரதான்யம் அளிப்பது என்பது சம்பந்தமாக முதலாவது திட்டத்துக்கும் இரண்டாவது திட்டத்துக்கும் இடையே வித்தியாசம் உண்டு.

திட்டச் செலவும் அதன் பங்கீடும்

முதல் திட்டத்திற்கு மொத்தம் ரூ. 2,069 கோடி ஒதுக்கப்பட்டது. (இது பின்னர் ரூ. 2,356 கோடியாக உயர்த்தப்பட்டது). இரண்டாவது திட்ட காலத்தில் மத்திய சர்க்காரும் ராஜ்ய சர்க்கார்களும், அபிவிருத்தி வேலைகளுக்காக மொத்தம் ரூ. 4,800 கோடி செலவு செய்வர். முதலாவது திட்டத்திலும் இரண்டாவது திட்டத்திலும் முக்கிய இனங்களுக்கான செலவு தொகை பற்றிய விவரங்களைப் பின்வரும் அட்டவணையில் காணலாம்:

முக்கிய அபிவிருத்தி இனங்களுக்குச் செலவுப் பங்கீடு

	முதல் 5 வருஷத் திட்டம்		2-வது 5 வருஷத்திட்டம்	
	மொத்த முதலீடு (ரூ. கோடிகள்)	சதவிகிதம்	மொத்த முதலீடு (ரூ. கோடிகள்)	சதவிகிதம்
(1)	(2)	(3)	(4)	(5)
I. விவசாயமும், சமுதாய அபிவிருத்தியும்	357	15·1	568	11·8
(அ) விவசாயம்	241	10·2	341	7·1
விவசாய வேலைத் திட்டங்கள் ...	197	8·3	170	3·5
கால்நடைப் பராமரிப்பு ...	22	1·0	56	1·1
வனவளம்	10	0·4	47	1·0
மீன்வளம்	4	0·2	12	0·3
கூட்டுறவு	7	0·3	47	1·0
நாணுவிதம்	1	....	9	0·2

(1)	(2)	(3)	(4)	(5)
(ஆ) தேசிய விஸ்தரிப்பு, சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் ...	90	3·8	200	4·1
(இ) மற்ற வேலைத் திட்டங்கள் ...	26	1·1	27	0·6
கிராமப் பஞ்சாயத்துக்கள் ...	11	0·5	12	0·3
ஸ்தல அபிவிருத்தி வேலைகள் ...	15	0·6	15	0·3
II. நீர்ப்பாசனமும் மின்சாரமும்	661	28·1	913	19·0
நீர்ப்பாசனம்	384	16·3	381	7·9
மின்சாரம்	260	11·1	427	8·9
வெள்ளத் தடுப்பும் மற்ற வேலைகளும், பரிசோதனைகள், இத்யாதி	17	0·7	105	2·2
III. தொழில்துறை, கனிவளம்	179	7·6	890	18·5
பெரிய, நடுத்தரத் தொழில்கள்	148	6·3	617	12·9
கனிவள அபிவிருத்தி ...	1	....	73	1·5
கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள்	30	1·3	200	4·1
IV. போக்குவரத்து, செய்தித் தொடர்பு	557	23·6	1,385	28·9
ரயில்வே	268	11·4	900	18·8
ரஸ்தாக்கள்	130	5·5	246	5·1
ரஸ்தாப் போக்குவரத்து ...	12	0·5	17	0·4
துறைமுகங்கள், துறைகள் ...	34	1·4	45	0·9
கப்பல் போக்குவரத்து ...	26	1·1	48	1·0
உள்நாட்டு நீர்ப் போக்குவரத்து ...	....	....	3	0·1
ஸிவில் விமானப் போக்குவரத்து ...	24	1·0	43	0·9
மற்றப் போக்குவரத்து ...	3	0·1	7	0·1
தபால்-தந்தி	50	2·2	63	1·3
மற்றச் செய்தித்தொடர்புகள் ...	5	0·2	4	0·1
ரேடியோ ஒலிபரப்பு	5	0·2	9	0·2
V. சமூக வசதிகள்	553	22·6	945	19·7
கல்வி	164	7·0	307	6·4
சுகாதாரம்	140	5·9	274	5·7
ஜாகை	49	2·1	120	2·5
பின் தங்கிய வகுப்புகள் க்ஷேமம் ...	32	1·3	91	1·9
சமூக க்ஷேமம்	5	0·2	29	0·6
தொழிலாளர், அவர்களது க்ஷேமம்	7	0·3	29	0·6
குடிபெயர்ந்தோர் குடியமைப்பு ...	136	5·8	90	1·9
படித்து வேலையற்றோருக்கு விசேஷத் திட்டங்கள்		....	5	0·1
VI. நாணுவிதத் திட்டங்கள்	69	3·0	99	2·1
மொத்தம்	2,356	100·0	4,800	100·0

..முதலாவது திட்டத்தைவிட இரண்டாவது திட்டத்தில் தொழில்கள், சுரங்கங்கள், போக்குவரத்து, செய்தித்தொடர்பு வசதிகள் ஆகியவற்றுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. இதை மேற்கண்ட அட்டவணை எடுத்துக்காட்டுகிறது. இரண்டாவது திட்டத்தின் மொத்தத் தொகையில் பாதி இத்துறைகளுக்குச் செலவிடப்படும். முன்பு முதல் திட்டத் தொகையில் மூன்றில் ஒரு பங்குதான் இவற்றுக்குச் செலவிடப்பட்டது. மின்சார அபிவிருத்தியையும் தொழில் அபிவிருத்தியின் ஒரு பகுதியாகக் கொண்டால், இரண்டாவது திட்டச் செலவில் தொழில்களின் பங்கு 56 சதவிகிதமாகும். ரூபாய்க் கணக்கில் பார்த்தால், தொழில்கள், சுரங்கங்களுக்கான செலவு, முதல் திட்டத்தைவிடச் சுமார் 400 சதவிகிதம் அதிகம். விவசாயம், சமுதாய அபிவிருத்தி ஆகியவற்றுக்கு முதல் திட்டத்தில் 15 சதவிகிதம் ஒதுக்கப்பட்டது; இரண்டாவது திட்டத்தில் 12 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சமூக வசதிகளுக்கு முதல் திட்டத்தைவிடச் சிறிது குறைவான "விகிதத்தில்" இரண்டாவது திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ரூபாய்க் கணக்கில் ஒப்பிட்டால், இந்த இனத்துக்கு முதல் திட்டத்தைவிட இரண்டாவது திட்டத்தில் அதிகமான நிதி கிடைக்கிறது.

ராஜ்யத் திட்டங்கள்

மொத்த அபிவிருத்திச் செலவு ரூ. 4,800 கோடியில், ராஜ்ய சர்க்கார்களின் திட்டங்களுக்கான செலவு ரூ. 2,241 கோடியாகும். பல்வேறு ராஜ்யங்களின் திட்டச்செலவு பற்றிய விவரம் வருமாறு:

ராஜ்யங்களின் திட்டச் செலவு

(ரூ. கோடிகள்)

		முதல் திட்டம்	இரண்டாவது திட்டம்
ஆந்திரா	...	75·9	119·0
அஸ்ஸாம்	...	28·1	57·9
பீஹார்	...	104·4	194·2
பம்பாய்	...	181·3	266·2
மத்தியப் பிரதேசம்	...	57·5	123·7

		1	
சென்னை	...	97·0	173·1
ஒரிஸா	...	85·2	100·0
பஞ்சாப்	...	124·0	126·3
உத்தரப் பிரதேசம்	...	165·9	253·1
மேற்கு வங்காளம்	...	151·9	153·7
மொத்த "ஏ" ராஜ்யங்கள்	...	1,071·2	1,567·2
ஹைதராபாத்	...	57·0	100·2
மத்திய பாரத்	...	36·1	67·3
மைசூர்	...	53·2	80·6
பெப்சு	...	39·2	36·3
ராஜஸ்தான்	...	62·8	97·4
சௌராஷ்டிரா	...	29·8	47·7
திருவாங்கூர் - கொச்சி	...	35·4	72·0
ஜம்மு-காஷ்மீர்	...	13·2	33·9
மொத்த "பி" ராஜ்யங்கள்	...	326·7	535·4
ஆஜ்மீர்	...	3·6	7·9
போபால் *	...	9·3	14·3
குடகு	...	2·0	3·8
டில்லி	...	10·5	17·0
ஹிமாசலப் பிரதேசம்	...	7·5	14·7
கட்ச்	...	4·8	7·9
மணிப்புரி	...	2·2	6·2
திரிபுரா	...	3·0	8·5
விந்தியப் பிரதேசம்	...	9·3	24·9
மொத்தம் "ஸி" ராஜ்யங்கள்	...	52·2	103·2
அந்தமான், நிக்கோபார் தீவுகள்	...	1·5	5·9
வடகிழக்கு எல்லை ஏஜன்ஸி ('நேபா')	...	4·4	9·5
புதுச்சேரி	...	0·8	4·8
ஷை மொத்தம்	...	6·7	20·2
தாமோதர் அணைத் திட்டத்தில் மத்திய சர்க்கார் பங்கு	...	—	12·2
தேசிய விஸ்தரிப்பு, சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள்	...	—	0·7
ஆகமொத்தம்	...	1,456·8	2,240·9

* தனிப்பட்ட ராஜ்யங்களுக்காகத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 187 கோடிக்கு அதிகப்படியான தொகை இது. தேசிய விஸ்தரிப்பு, சமுதாய அபிவிருத்தித் வேலைகளுக்கு 5 வருஷத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 200 கோடியில் மத்திய சர்க்கார் பங்கு ரூ. 12 கோடி. ராஜ்ய சர்க்கார்களின் திட்டங்கள் வகுக்கப்பட்டபோது இந்த இனத்தின்கீழ் தனிப்பட்ட ராஜ்யங்களுக்குத் தற்காலிகமாகவே நிதிகள் ஒதுக்கப்பட்டன. தனிப்பட்ட திட்டங்கள் பற்றிய விவரங்கள் நிர்ணயிக்கப்பட்டபின் இப் பங்கீடுகள் மறுபரிசீலனை செய்யப்படும்.

இரண்டாவது திட்டத்தில் முதலீடு

அரசாங்கத்துறையின் மொத்தச் செலவு ரூ. 4,800 கோடியில், 'முதலீட்டுச் செலவு' (அதாவது உற்பத்திச் சர்தனங்களை நிர்மாணிக்கும் செலவு) ரூ. 3,800 கோடியாகும். பாக்கி ரூ. 1,000 கோடியை அபிவிருத்தி சம்பந்தமான 'நடப்புச் செலவு' என்று பொதுவாகக் கூறலாம். முக்கிய அபிவிருத்தி இனங்களில் இந்த இருவகைச் செலவுகள் பற்றிய குத்து மதிப்பான கணக்கைப் பின்வரும் அட்டவணையில் காணலாம்:

(ரூ. கோடிகள்)

		முதலீட்டுச் செலவு	நடப்புச் செலவு	மொத்தச் செலவு
1		2	3	4
I. விவசாயம், சமுதாய அபிவிருத்தி	...	338	230	568
(i) விவசாயம்	...	181	160	341
(ii) தேசிய விஸ்தரிப்பு, சமுதாய அபிவிருத்தி*	...	157	70	227
II. நீர்ப்பாசனம், மின்சாரம்	...	863	50	913
(i) நீர்ப்பாசனம், வெள்ளத்தடுப்பு	...	456	30	486
(ii) மின்சாரம்	...	407	20	427
III. தொழில்கள், கனிவளம்	...	790	100	890
(i) பெரிய, நடுத்தரத் தொழில்களும் கனிவளமும்	...	670	20	690
(ii) கிராம, மற்றும் சிறு தொழில்கள்	...	120	80	200
IV. போக்குவரத்து, செய்தித் தொடர்பு	...	1,335	50	1,385
V. சமூக வசதிகள்	...	455	490	945
VI. நானாவிதம்	...	19	80	99
மொத்தம்	...	3,800	1,000	4,800

தனியார் துறை

அரசாங்கத் துறை முதலீட்டுத் திட்டங்களைத் தனியார் துறையின் முதலீட்டுத் திட்டங்களுடன் சேர்த்துப் பார்க்க வேண்டும். தனியார் துறையில் பின்வருமாறு முதலீடுகள் செய்யப்படலாம்:

* கிராமப் பஞ்சாயத்துக்கள், ஸ்தல அபிவிருத்தி வேலைகள் உட்பட.

		(ரூ. கோடிகள்)
1.	பெருந்தொழில்கள், கனிவளம்	575
2.	மலைத் தோட்டங்களும், மின்சார வேலைத் திட்டங்களும்; ரயில்வே நீங்கலாக உள்ள போக்குவரத்து சாதனங்களும்	125
3.	கட்டடம் முதலிய நிர்மாண வேலைகள்	1,000
4.	விவசாயம், கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள்	300
5.	ஸ்டாக்குகள்	400
		2,400

இரண்டாவது திட்டகாலத்தில் அரசாங்கத் துறை, தனியார் துறை இரண்டிலும் சேர்த்து மொத்தம் சுமார் ரூ 6,200 கோடி முதலீடு செய்யப்படலாம். முதல் திட்டகாலத்தில் இரு துறைகளிலும் சம அளவு முதலீடு செய்யப்பட்டது. ஆனால் இரண்டாவது திட்டத்தில் அரசாங்கத் துறை, தனியார் துறை ஆகியவற்றில் முதலீடுகள் 61 : 39 என்ற விகிதத்தில் இருக்கும். அதாவது அரசாங்க முதலீட்டின் பங்கு அதிகரிக்கும்.

லட்சிய உற்பத்தி அளவுகளும் அபிவிருத்தி அளவுகளும்

இரண்டாவது திட்ட காலத்தில் அரசாங்கத் துறை, தனியார் துறை இரண்டிலும் போடப்படும் விடுமுதலின் விளைவாக எவ்வளவு உற்பத்தியும் அபிவிருத்தியும் ஏற்பட வேண்டும் என்பதற்கு லட்சிய அளவுகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. முக்கிய இனங்களுக்கான லட்சிய அளவுகள் வருமாறு:

முக்கிய பிரிவுகளில் உற்பத்தி, அபிவிருத்தி லட்சிய அளவுகள்

பிரிவும் இனமும்	யூனிட்டுகள் (அளவுகோல்)	1950-51	1955-56	1960-61	1955-56ஐ விட 1960-61-ல் அதிகரிப்புச் சதவிகிதம்
1	2	3	4	5	6
I. விவசாயமும் சமுதாய அபிவிருத்தியும்					
1. உணவு தானியங்கள்	(லட்சம் டன்கள்) ...	540*	650	750	15
2. பருத்தி	(லட்சம் பேல்கள்) ...	29	42	55	31
3. கரும்புக் கச்சா வெல்லம்	(லட்சம் டன்கள்) ...	56	58	71	22

* 1949-50 வருஷ நிலைமை

1	2	3	4	5	6
4.	எண்ணெய் வித்துக்கள் (லட்சம் டன்கள்)	51	55	70	27
5.	சணல் (லட்சம் பேல்கள்)	33	40	50	25
6.	தேயிலை (லட்சம் ராத்தல்கள்)	6,130	6,440	7,000	9
7.	தேசிய விஸ்தரிப்பு வட்டாரங்கள் (எண்கள்)	இல்லை	500	3,800	660
8.	சமுதாய அபிவிருத்தி வட்டாரங்கள் (எண்கள்)	இல்லை	622	1,120	80
9.	தேசிய விஸ்தரிப்பு, சமுதாய அபிவிருத்தித் திட்டங்களால் பலன் பெறும் ஜனத்தொகை (லட்சம் நபர்கள்)	இல்லை	800	3,250	306
10.	கிராமப் பஞ்சாயத்துக்கள் (ஆயிரங்கள்)	83	118	200	70
II.	நீர்ப்பாசனமும் மின்சாரமும்				
1.	பாசனம் பெறும் பரப்பு (லட்சம் ஏக்கர்கள்)	510	670	880	31
2.	மின்சாரம்-(நிலைய உற்பத்தி சக்தி)(லட்சம் கி.வா.)	23	34	69	103
III.	கனிகள்				
1.	இரும்புத்தாது (லட்சம் டன்கள்)	30	43*	125	191
2.	நிலக்கரி (லட்சம் டன்கள்)	323	380†	600	58
IV.	பெருந்தொழில்கள்				
1.	பூர்த்தியான எஃகு (லட்சம் டன்கள்)	11	13	43	231
2.	வார்ப்படசாலைகளுக்கு விற்பதற்கான தேனிரும்பு (லட்சம் டன்கள்)	...	3·8	7·5	97
3.	அலுமினியம் (ஆயிரம் டன்கள்)	3·7	7·5	25·0	233
4.	விற்பனைக்கான கனரக எஃகு இணைப்புகள் (ஆயிரம் டன்கள்)	இல்லை	இல்லை	12	...
5.	விற்பனைக்கான கனரக எஃகு வார்ப்புகள் (ஆயிரம் டன்கள்)	இல்லை	இல்லை	15	...
6.	எஃகுக் கட்டுமானங்கள் (ஆயிரம் டன்கள்)	தகவல் இல்லை	180	500	178
7.	இயந்திரக் கருவிகள் (கிரேடட்) (மதிப்பு-லட்ச ரூபாய்களில்)	31·8	75	300	300
8.	சிமின்ட் இயந்திரங்கள் ,, ,,	தகவல் இல்லை	56*	200	257
9.	சர்க்கரை இயந்திரங்கள் ,, ,,	தகவல் இல்லை	28*	250	779
10.	பருத்தி, சணல், ஜவுளி இயந்திரங்கள் ,,	தகவல் இல்லை	412	1,950	373
11.	காகித இயந்திரங்கள் (மதிப்பு-லட்ச ரூபாய்கள்)	சொற்பம்	சொற்பம்	400	...
12.	சென்ட்ரிபியூகல் விசைப் பம்புகள் (ஆயிரங்கள்)	34	40	86	115

* 1954 காலண்டர் வருஷ நிலைமை

† காலண்டர் வருஷங்களில் நிலைமை

1	2	3	4	5	6
13.	டீசல் என்ஜின்கள் (ஆயிரம் எச். பி)	... த. இ.	100	205	105
14.	ஆட்டமோபைல்கள் (கார்கள்) (எண்கள்)	16,500	25,000	57,000	128
15.	ரயில் என்ஜின்கள் (எண்கள்)	... 3	175	400	129
16.	டிராக்டர்கள் (20-30 டி. பி. எச். பி) (எண்கள்) ...	...	...	3,000	...
17.	சிமின்ட் (லட்சம் டன்கள்)	... 27	43	130	202
18.	ரசாயன உரங்கள்				
	1. நைட்ரஜன் வகை (அமோனியம் சல்பேட் உருவில்) (ஆயிரம் டன்கள்) ...	46	380	1,450	282
	2. பாஸ்பேட் வகை (சூப்பர் பாஸ்பேட் உருவில்) (ஆயிரம் டன்கள்) ...	55	120	720	500
19.	கந்தக அமிலம் (ஆயிரம் டன்கள்)	... 99	170	470	176
20.	சோடா ஆஷ் ,,	... 45	80	230	188
21.	காஸ்டிக் சோடா (ஆயிரம் டன்கள்)	... 11	36	135	275
22.	சுத்திகரித்த பெட்ரோலியம் (லட்சம் டன்கள்) ...	...	36	43	19
23.	மின்சார டிரான்ஸ்பார்மர்கள்—33 கே. வி. யும் கீழேயும் (ஆயிரம் கே. வி. ஏ)	... 179	540	1,360	151
24.	மின்சார கேபிள்கள் (ஏ. ஸி. எஸ். ஆர். கண்டக்டர்கள்) (டன்கள்)	... 1,420	9,000	18,000	100
25.	மின்சார மோட்டார்கள் (ஆயிரம் எச். பி.)	... 99	240	600	150
25.	பருத்தி ஜவுளி (லட்சம் கெஜங்கள்)	46,180	68,500	85,000	24
27.	சர்க்கரை (லட்சம் டன்கள்)	... 11	17	23	35
28.	காகிதமும் காகித அட்டையும் (ஆயிரம் டன்கள்) ...	114	200	350	75
29.	சைக்கிள்கள் (முறையான தொழில்களில் மாத்திரம்) (ஆயிரங்கள்) ...	101	550	1,000	82
30.	தையல் இயந்திரங்கள் ,, ,,	... 33	110	220	100
31.	மின்சார விசிறிகள் (ஆயிரங்கள்)	... 194	275	600	118
V.	போக்குவரத்து, செய்தித் தொடர்பு				
	(அ) * ரயில்வே :				
	1. பிரயாணி ரயில்-மைல்கள் (லட்சங்கள்) ...	950	1,080	1,240	15
	2. சாமான்கள் (லட்சம் டன்கள்)	... 910	1,200	1,810*	51
	(ஆ) ரஸ்தாக்கள் :				
	1. தேசிய ரஸ்தாக்கள் (ஆயிரம் மைல்கள்) ...	12·3	12·9	13·8	7
	2. தள ரஸ்தாக்கள் ,, ,,	... 97·0	107·0	125·0	17

* 1960-61 வாக்கில் ரயில்வேக்கள் தாங்கவேண்டிய மொத்தச் சரக்குகளின் மதிப்பீடு இது. ஆனால் ரயில்வே அபிவிருத்திக்காக இப்போது ஒதுக்கப்பட்டுள்ள வசதிகளின்படி, ரோலிங்ஸ்டாக் 10 சதவிகிதமும் லைன் சக்தியில் 5 சதவிகிதமும் பற்றாக்குறையாகலாம்.

1	2	3	4	5	6
(இ) கப்பல் போக்குவரத்து :					
1. * கடலோர, அண்டைப் போக்குவரத்து (லட்சம் மொத்தம் பதிவான அல்லது ஜி. ஆர். டன்கள்)	...	2·2	3·2	4·3	34
2. வெளிநாடுகளுக்கு† ,, ,, ,,	...	1·7	2·8	4·7	68
(ஈ) துறைமுகங்கள் :					
சரக்குப் புழக்க சக்தி (லட்சம் டன்கள்)	...	200	250	325	30
(உ) தபால்-தந்தி :					
1. தபாலாபீஸ்கள் (ஆயிரங்கள்)	...	36	55	75	36
2. தந்தி ஆபீஸ்கள் ,,	...	3·6	4·9	6·3	28
3. டெலிபோன்கள் ,,	...	168	270	450	67
VI. கல்வி					
1. அந்தந்த வயது கோஷ்டிகளில் பள்ளி செல்லும் குழந்தைகளின் சதவிகிதம் :					
(அ) ஆரம்பக் கட்டம் (6–11 வயது கோஷ்டி)	...	42·0	51·0	63·0	...
(ஆ) நடுத்தரக் கட்டம் (11–14 ,,)	...	14·0	19·0	22·5	...
(இ) உயர் செகண்டரிக் கட்டம் (14–17 ,,)	...	6·4	9·4	12·0	...
2. ஆரம்ப (ஆதார) பள்ளிகள் (லட்சங்கள்)	...	2·23	2·93	3·50	19
3. ஆரம்ப (நடுத்தர), செகண்டரிப் பள்ளிகளில் ஆசிரியர்கள் (லட்சங்கள்)	...	7·4	10·3	13·4	30
4. ஆசிரியர் பயிற்சி நிலையங்கள்	...	835	1,136	1,412	24
5. ஆசிரியர் பயிற்சி நிலையங்களில் சேர்க்கப்படுவோர் (ஆயிரங்கள்)	...	75·6	103·5	134·2	30
VII. சுகாதாரம்					
1. வைத்திய ஸ்தாபனங்கள் (ஆயிரங்கள்)	...	8·6	10·0	12·6	26
2. ஆஸ்பத்திரிப் படுக்கைகள் ,,	...	113	125	155	24
3. டாக்டர்கள் ,,	...	59	70	82·5	18
4. நர்ஸுகள் ,,	...	17	22	31	41
5. மருத்துவத் தாதிகள் ,,	...	18	26	32	23
6. நர்ஸுத் தாயிகளும் மற்றத் தாயிகளும் ,,	...	4	6	41	583
7. சுகாதார உதவியாளர்கள், சானிட்டரி இன்ஸ்பெக்டர்கள் (ஆயிரங்கள்)	...	3·5	4	7	75

டாங்கர்கள் உட்பட

† அவ்வப்போது வெவ்வேறு மார்க்கங்களில் செல்லும் சரக்குக் கப்பல்கள் (டிராம்ப் டன்கள்) உட்பட

இ. ஐ—4

ஆதாரத் தொழில்களைக் குறிப்பிடத்தக்க அளவு முன்னேற்றுவதற்கு இத்திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. தலா 10 லட்சம் டன் எஃகுக் கட்டிகளை உற்பத்தி செய்யக்கூடிய மூன்று எஃகு ஆலைகள் ஏற்படுத்தப்படும். கனரக இணைப்புத் தயாரிப்பு ஆலைகளையும், வார்ப்படசாலைகளையும் நிறுவுவதற்கு ஆரம்ப முயற்சி மேற்கொள்ளப்படும். புதிதாக மூன்று ரசாயன உரத் தொழிற்சாலைகள் அமைக்கப்படும்; சிந்திரி ரசாயன உரத் தொழிற்சாலையின் உற்பத்தி சக்தி விஸ்தரிக்கப்படும். 43 லட்சம் டன்னாக இருக்கும் சிமிண்டு உற்பத்தி 130 லட்சம் டன்னாக அதிகரிக்கப்படும். 380 லட்சம் டன்னாக இருக்கும் நிலக்கரி உற்பத்தி 600 லட்சம் டன்னாக உயர்த்தப்படும். ரயில்வே என்ஜின்களின் உற்பத்தி இப்போது 175 ஆக இருப்பது இரண்டாவது திட்ட இறுதியில் 400 ஆக அதிகரிக்கப்படும். விவசாய உற்பத்திகளை 18 சதவிகிதம் அதிகரிக்கத் தற்காலிகமாக உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இந்த அளவை மேலும் அதிகரிக்கும் நோக்கத்துடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஆலோசனை நடந்துவருகிறது. உணவு தானிய உற்பத்தியை 650 லட்சம் டன்னிலிருந்து 750 லட்சம் டன்னாக (அதாவது 15 சதவிகிதம்) அதிகரிக்கத் தற்காலிகமாக உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்காக அதிகப்படியாகச் சுமார் 210 லட்சம் ஏக்கர் நிலத்துக்குப் பாசன வசதி அளிக்கப்படும். இவற்றில் பெரிய, நடுத்தர நீர்ப்பாசனச் சாதனங்கள் மூலம் 120 லட்சம் ஏக்கரும்; சிறிய பாசனச் சாதனங்கள் மூலம் 90 லட்சம் ஏக்கரும் பலன் பெறும். 34 லட்சம் கிலோ வாட்டாக இருக்கும் மின்சார உற்பத்தி சக்தி 69 லட்சம் கிலோ வாட்டாக அதிகரிக்கப்படும். சமூக வசதிகளும் மிதமாக விஸ்தரிக்கப்படும். இரண்டாவது திட்ட இறுதிக்குள் 6-11 வயது கோஷ்டியைச் சேர்ந்த குழந்தைகளில் 63 சதவிகித்தினருக்கும்; 11-14 வயது கோஷ்டியைச் சேர்ந்த குழந்தைகளில் 22·5 சதவிகிதத்தினருக்கும் அதிகப்படியாகக் கல்வி வசதி அளிக்கப்படும். வைத்திய வசதிகளை விஸ்தரிப்பதற்காக டாக்டர்கள், நர்ஸுகள் முதலியோரின் தொகை கணிசமாக அதிகரிக்கப்படும். இரண்டாவது திட்டகாலத்தில்

அரசாங்கச் சார்புள்ள ஸ்தாபனங்கள் சுமார் 13 லட்சம் வீடுகளைக் கட்டிக்கொடுக்கக்கூடும்.

தேசிய வருமான அமைப்பில் மாறுதல்

இரண்டாவது திட்டகால இறுதியில், இந்தியப் பொருளாதாரத்தில் தேசிய வருமான அமைப்பு பின்வருமாறு மாறக் கூடும் :

தொழில்கள் மூலம் நிகர தேசிய உற்பத்தி

(1952—53 விலைவாசிப்படி ரூ. கோடிகள்)

	1950-51	1955-56	1960-61	சதவிகிதம் உற்பத்தி அதிகரிப்பு 1951-56	1956-61
1. விவசாயம், அதன் சார்புத் துறைகள்	4,450	5,230	6,170	18	18
2. கனிவளம்	80	95	150	19	58
3. பாக்டரிகள்	590	840	1,380	43	64
4. சிறு தொழில்கள்	740	840	1,085	14	30
5. கட்டடம் போன்ற நிர்மாண வேலைகள்	180	220	295	22	34
6. வர்த்தகம், போக்குவரத்து, செய்தித் தொடர்பு	1,650	1,875	2,300	14	23
7. சொந்தப் பிரவிருத்திகளும், அரசாங்க நிர்வாகம் உட்பட சர்வீஸ்களும்	1,420	1,700	2,100	20	23
8. மொத்த தேசிய உற்பத்தி	9,110	10,800	13,480	18	25
9. சராசரி நபர் வருமானம் (ரூ.)	253	281	331	11	18

அடுத்த ஐந்து ஆண்டுகளில் தேசிய வருமானம் (செல்வ உற்பத்தி) சுமார் 25 சதவிகிதம் அதிகரிக்கக்கூடும் என்று மேற்கண்ட அட்டவணையிலிருந்து தெரிகிறது. ஆயினும் சராசரிப் பண்ட உபயோகம் 21 சதவிகிதம்தான் அதிகரிக்கும். உள்நாட்டுச் செல்வ உற்பத்தியில் கணிசமான பகுதியைச் சேமித்து முதலீடு செய்ய வேண்டியிருப்பதால்தான், பண்ட உபயோகம் இந்த அளவில் மாத்திரம் அதிகரிக்கும்.

நிதி வசதிகள்

இரண்டாவது திட்டத்தில் அரசாங்கத் துறைக்கு வேண்டிய நிதியைப் பின்வரும் வழிகளில் திரட்ட உத்தேசிக்கப் படுகிறது:

			(ரூ. கோடிகள்)
1.	நடப்பு ரெவின்யூவில் மிச்சம்	....	800
	(அ) 1955-56 வரி நிலவரப்படி	....	350
	(ஆ) அதிகப்படி வரி விதிப்பு	....	450
2.	பொதுஜனக் கடன்கள்	....	1,200
	(அ) மார்க்கட் கடன்கள்	....	700
	(ஆ) சிறு சேமிப்புகள்	....	500
3.	மற்ற பட்ஜெட் ஆஸ்பதங்கள்	....	400
	(அ) அபிவிருத்தித் திட்டத்துக்கு ரயில்வேயின் நிதி	....	150
	(ஆ) பிராவிடண்ட் நிதிகளும் மற்ற டிப்பாசிட் இனங்களும்	....	250
4.	வெளிநாடுகளில் திரட்டும் நிதி	....	800
5.	பற்றுக்குறை நிதிமுறை (அதிகக் கரன்ஸி அச்சடித்தல்)	....	1,200
6.	துண்டுவிழும் தொகை (இதைச் சரிக்கட்ட அதிகப்படி உள்நாட்டு வசதிகளைத் திரட்ட வேண்டும்)	....	400
	மொத்தம்	....	4,800

திட்டச் செலவில் சுமார் பாதியை உள்நாட்டு ஆஸ்பதங்களிலிருந்து பெறுவதற்கு உத்தேசிக்கப்படுகிறது என்பதை அட்டவணை காட்டுகிறது. அதாவது வரிவிதிப்பு, கடன் வசூல், மற்ற வருமானங்கள் என்ற பட்ஜட் ரீதியான ஆஸ்பதங்கள் மூலம் பாதி நிதி திரட்டப்படும். பாக்கியில் ரூ. 1,200 கோடி பற்றுக்குறை நிதிமுறை (அதிகக் கரன்ஸி நோட்டுகளை அச்சிடுவதன்) மூலம் திரட்டப்படும். இது தவிர, ரூ. 800 கோடி வெளிநாட்டு வருமானமாகக் கிடைக்க வேண்டும். இவையெல்லாம் போக இறுதியில் ரூ. 400 கோடி துண்டு விழுகிறது. அதிக வரிவிதிப்பின் மூலமும், அரசாங்கத் தொழில்களில் கிடைக்கும் லாபத்தின் மூலமும் இந்தப் பற்றுக்குறையைச் சரிக்கட்ட வேண்டும்.

நடப்புச் செலவு

அரசாங்கத் துறைக்கான மொத்தச் செலவுரூ.4,800கோடியில் 'நடப்புச் செலவு' ரூ. 1,000 கோடியாக இருக்கும். கல்வி, சுகாதாரம், விஞ்ஞான ஆராய்ச்சி, தேசிய விஸ்தரிப்புத் திட்டம் முதலிய இனங்களுக்கு ஆகும் செலவே நடப்புச் செலவு. இது போக 'முதலீட்டுச் செலவின்' அளவு ரூ. 3,800 கோடியாகும். மத்திய சர்க்காரும் ராஜ்ய சர்க்காரும் நடப்பு ரெவின்யூவிலிருந்து மொத்தம் சுமார் ரூ. 950 கோடி திரட்டக் கூடும். அதாவது 1955-56 வரி நிலவரப்படி ரூ. 350 கோடியும்; அதிகப்படி வரிவிதிப்பின் மூலம் ரூ. 450 கோடியும், ரயில்வே வருமானத்தின் மூலம் ரூ. 150 கோடியும், ஆக மொத்தம் ரூ. 950 கோடி திரட்டப்படலாம். இது தவிர, மேற்கொண்டு வரி விதிப்பதன் மூலமும், அரசாங்கத் தொழில்களின் லாபத்திலிருந்தும் ரூ. 400 கோடி கிடைப்பதாக வைத்துக் கொள்வோம். ரூ. 950 கோடியுடன் இந்த ரூ. 400 கோடியைச் சேர்த்தால் மொத்தம் ரூ. 1,350 கோடி கிடைக்கலாம். இதில், திட்டத்தின் நடப்புச் செலவுக்கு ரூ. 1,000 கோடி போக, முதலீட்டுச் செலவுக்கு சுமார் ரூ. 350 கோடி கிடைக்கலாம்.

அரசாங்கச் சேமிப்பு

இரண்டாவது திட்ட காலத்தில் அரசாங்க முதலீட்டுச் செலவுக்கு ரூ. 3,800 கோடியும், தனியார் முதலீட்டுக்கு ரூ. 2,400 கோடியும், ஆக மொத்தம் ரூ. 6,200 கோடி தேவைப்படும். இதில் வெளிநாட்டு பணப் பட்டுவாடா நிலைமையில் ஏற்படக்கூடிய பற்றுக்குறையைச் சரிக்கட்டுவதற்கு சுமார் ரூ. 1,100 கோடி போய்விடும். (அதாவது அந்நியச் செலாவணித் தேவையில் ரூ. 1,100 கோடி துண்டு விழுவதைச் சரிக்கட்ட வேண்டியிருக்கும்). இது போக ரூ. 5,100 கோடியை உள்நாட்டுச் சேமிப்புகளிலிருந்தே பெறவேண்டியிருக்கும். தற்போது நாட்டின் தேசிய வருமானத்தில் சுமார் 7 சதவிகிதம் சேமிக்கப்படுகிறது. இரண்டாவது திட்ட இறுதியில் இந்தச் சேமிப்பு அளவு 10 சதவிகிதமாக அதிகரிக்க வேண்டியிருக்கும். அதாவது இரண்டாவது திட்ட காலத்தில் தேசிய

வருமானம் 25 சதவிகிதம் அதிகரிக்கும்போது, அவ்வாறு அதிகரிக்கும் செல்வத்தில் கால் அல்லது ஐந்தில் ஒரு பங்கை முதலீடு செய்ய வேண்டியிருக்கும். அதிகப்படி தேசிய வருமானத்தில் பெரும்பகுதி குறைந்த வருமானக்காரர்களுக்குப் போய்விடும். ஆகவே, மேற்குறித்த அளவு சேமிப்பைத் திரட்டுவது மிகச் சிரமமான காரியம். அதனால்தான் செலவைக் குறைத்துச் சேமிப்பைத் திரட்டுவதற்கான யோசனைகள் சிலவற்றைத் திட்டக் கமிஷன் தெரிவித்திருக்கிறது. அத்தியாவசியமற்ற பண்டங்களை வாங்க வேண்டாமென்று ஜனங்களைக் கேட்டுக்கொள்வது; உசிதமானபடி வரி விகிதங்களை மாற்றுவது; தகுந்த கன்ட்ரோல்களை விதிப்பது முதலியவை இந்த யோசனைகள் ஆகும்.

இரண்டாவது திட்டத்தில், ஆதாரத் தொழில்களில் ஏராளமான முதலீடு செய்வதற்கு உத்தேசிக்கப்படுகிறது. இதற்கு ஏராளமான அந்நியச் செலாவணி தேவைப்படும். தனியார் துறை, அரசாங்கத் துறை இரண்டிலும் அபிவிருத்தித் திட்டங்களுக்காக சுமார் ரூ. 2,150 கோடி பெறுமான இயந்திரங்கள், வாகனங்கள், இரும்பு, எஃகு, மற்ற உலோகங்கள் ஆகியவை தேவைப்படும். இந்த இறக்குமதிச் செலவில் ரூ. 1,050 கோடியை நமது ஏற்றுமதி வருமானங்கள் மூலம் சரிக்கட்டிவிடலாம். அது போக அந்நியச் செலாவணி வசதியில் ரூ. 1,100 கோடி துண்டு விழும். இந்தியாவின் கணக்கில் சேர்ந்துள்ள ஸ்டர்லிங் மிச்சத்திலிருந்து ரூ. 200 கோடியை எடுத்து இந்த பற்றுக்குறையில் ஒருபகுதியைச் சரிக்கட்டலாம். தவிர, அந்நியத் தனியார்களின் விடுமுதலாக ரூ. 100 கோடி வரலாம். முதல் திட்ட காலத்தில் இந்தியாவுக்கு அளிக்கப்பட்ட அந்நிய நிதி உதவியில் ரூ. 94 கோடி மிச்சம் இருக்கிறது. இதை இரண்டாவது திட்டத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம். அதோடு பிலாய், துர்காபூர் எஃகு ஆலைகளுக்காக ரூ. 76 கோடி பெறுமான அந்நியக் கடன் உதவி கிடைக்கும். பிறகும், அந்நிய நிதி வசதியில் ரூ. 630 கோடி துண்டு விழும். இதைச் சரிக்கட்டுவதற்கு வேறு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அந்நிய நிதி வசதியும் உள்நாட்டு நிதி வசதியும் இணைப்பானவை. இவற்றுள் ஒன்றில் துண்டு விழுந்தால் இன்னொன்றைக் கொண்டு சமாளிக்க வேண்டும்.

அத்தியாயம் 4

வேலை வசதி

தேச அபிவிருத்திப் பிரச்னையின் ஒரு அம்சமே வேலையின்மைப் பிரச்னை என்பதை இப்போது எல்லோரும் உணர்ந்திருக்கிறார்கள். நாட்டின் ஆதார வசதிகள் அனைத்தையும் அபிவிருத்தி செய்தால்தான் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்க முடியும்.

இந்தியாவில் வேலையில்லாத் திண்டாட்டம் மூன்று வகைப்படும்: (1) நகரங்களிலும் கிராமங்களிலும் ஏற்கெனவே வேலையற்றவர்கள் இருந்து வருகிறார்கள். (2) ஆண்டுதோறும் வேலை நாடுவோரின் தொகை சுமார் 20 லட்சம் வீதம் அதிகரித்து வருகிறது. (3) நகர, கிராமாந்தரப் பிரதேசங்களில் விவசாயத்திலும் குடிசைத் தொழில்களிலும் ஈடுபட்டுள்ளவர்களின் குறைநேர வேலைப் பிரச்னை வேறு இருக்கிறது. அதாவது இவர்களுக்கு முழுநேர வேலையில்லை.

தேவையின் அளவு

இரண்டாவது திட்ட காலத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தை "அடியோடு ஒழிப்பது" என்றால் எவ்வளவு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தவேண்டும் என்பதைப் பின் வரும் அட்டவணையில் காணலாம்:

(லட்சங்கள்)

		நகரப் பகுதிகளில்	கிராமப் பகுதிகளில்	மொத்தம்
வேலைநாடும் புதியவர்களுக்கு	....	38	62	100
ஏற்கெனவே வேலையற்றோருக்கு	....	25	28	53
மொத்தம்	....	63	90	153

ஆகவே இரண்டாவது திட்ட காலத்தில் சுமார் ஒன்றரைக் கோடிப் பேருக்கு முழுநேர வேலை தேவைப்படும். இவர்களில் படித்தவர்கள் 20 லட்சம் பேர். அதாவது, ஏற்கெனவே

5⅓ லட்சம் பேர் படித்து வேலையில்லாமல் இருக்கிறார்கள்; இரண்டாவது திட்ட காலத்தில் மேலும் 14.5 லட்சம் பேர் படித்தவர்களுக்கு வேலை தேவைப்படும்.

பரிகாரம்

இப்பிரச்னையை இரண்டாவது ஐந்து வருஷத் திட்டம் எந்த அளவுக்குத் தீர்த்துவைக்கும்?

அரசாங்கத் துறையிலுள்ள ஆதாரத் தொழில்களில் ஏராளமான விடுமுதல்கள் போடப்படும். சுகாதாரம், கல்வி, ஆராய்ச்சி, சமூக க்ஷேமநலன், சமூகப் பந்தோபஸ்து ஏற்பாடுகள் முதலிய துறைகளை அபிவிருத்தி செய்வதற்கு வேறு கணிசமான நிதி செலவிடப்படும். இந்த ஏற்பாடுகள் காரணமாக வேலை வசதிகள் அதிகரிக்கும்; மக்களின் வாங்கும் சக்தி (பண வசதி) அதிகரிக்கும்; அதன் விளைவாக அதிகமான நுகர்பொருட்கள் தேவைப்படும். நுகர்பொருள் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகக் குடிசைத் தொழில்கள் வளர்க்கப் படும். அதிகமான ஆள்பலத்தையும் குறைவான மூலதனத்தையும் உபயோகித்துப் பண்டங்களை உற்பத்தி செய்ய வல்லவை இத்தொழில்கள். குடிசைத் தொழில்களுக்கும் சிறு தொழில்களுக்கும் கடன் உதவி, மார்க்கட்டிங் வசதி, தொழில் நுணுக்க ஆலோசனை, குறைந்த கட்டணத்தில் மின்சாரம் முதலியவற்றை அளித்துச் சர்க்கார் ஒத்தாசை செய்யும். இத் தொழில்களைக் கூட்டுறவு முறையில் அமைப்பதற்கும் அரசாங்கம் உதவி புரியும்.

புதிய வேலை வாய்ப்புகள்

வேலையில்லாத் திண்டாட்டத்தை 'அடியோடு ஒழிப்பதற்காக' 153 லட்சம் வேலை வாய்ப்புகள் தேவைப்படும். இரண்டாவது திட்ட காலத்தில் இப்பிரச்னை அடியோடு தீர்ந்துவிடாது. இரண்டாவது திட்டம், மொத்தத்தில் எவ்வளவு முழுநேர வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தும் என்பதைப் பின்வரும் அட்டவணையில் காணலாம்:

அதிகப்படி வேலை வசதியின் மதிப்பீடு

(லட்சங்கள்)

1.	கட்டடம் போன்ற நிர்மாண வேலைகள்	....	21·00
2.	நீர்ப்பாசனமும் விசையும்	....	0·51
3.	ரயில்வே	....	2·53
4.	மற்றப் போக்குவரத்து, செய்தித் தொடர்பு சாதனங்கள்	....	1·80
5.	தொழில்கள், சுரங்கங்கள்	....	7·50
6.	குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள்	....	4·50
7.	வனவளம், மீன்வளம், தேசிய விஸ்தரிப்பும் அதுபோன்ற திட்டங்களும்		4·13
8.	கல்வி	....	3·10
9.	சுகாதாரம்	....	1·16
10.	மற்றச் சமூக வசதிகள்	....	1·42
11.	அரசாங்க சர்வீஸ்கள்	....	4·34
	ஷ இனங்களின் மொத்தம்	....	51·99
12.	வர்த்தகம் முதலிய 'மற்ற' இனங்கள் (ஷ மொத்தத்தில் 52%)	....	27·04
	ஆகமொத்தம்	....	79·03

அதாவது சுமார் 80 லட்சம்

அதாவது விவசாயம் நீங்கலாக உள்ள துறைகளில் சுமார் 80 லட்சம் பேருக்கு முழுநேர வேலை கிடைக்கும். இது தவிர, தரிசு நில மீட்சி, நீர்ப்பாசன வசதிகள், மலைத் தோட்ட அபிவிருத்தி, காய்-கனித் தோட்ட அபிவிருத்தி முதலிய துறைகளில் மேலும் 16 லட்சம் பேருக்கு முழுநேர வேலை கிடைக்கும். அதோடு கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள், நீர்ப்பாசன வசதிகள் ஆகியவற்றின் மூலம், குறைநேர வேலையுள்ளவர்களுக்கு அதிக நேர வேலை கிடைக்கும்.

படித்த வேலையற்றோர்

படித்த வேலையற்றோர் பிரச்னை வேறு இருக்கிறது. அரசாங்கத் துறையிலும் தனியார் துறையிலும் சுமார் 12 லட்சம் பேருக்குப் புதிதாக உத்தியோகங்கள் கிடைக்கலாம். வயதாகி ஓய்வு பெறுவோர் மூலம் 2·4 லட்சம் உத்தியோகங்கள் காலியாகக்கூடும். சிறு தொழில்கள், கூட்டுறவு சாமான் (லாரி) போக்குவரத்து, வேலை முகாம்கள், மனமாற்றப் பயிற்சி முகாம்கள் முதலியவற்றை ரூ. 130 கோடி செலவில்

அமைத்து 2·4 லட்சம் படித்தவர்களுக்கு வேலை அளிக்கலாம் என்று திட்டக் கமிஷனின் ஆராய்ச்சிக் குழு சிபாரிசு செய்திருக்கிறது. இத்தகைய விசேஷத் திட்டங்களால் படித்தவர்களுக்கு எந்த அளவு நன்மை அளிக்கலாம் என்பதை நிர்ணயிக்க 1956-57-ல் பரீட்சார்த்த முயற்சி தொடங்கப்படும். படித்தவர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தவிர்ப்பதற்காகக் கல்வி முறையை மாற்றுவது, தொழில் நுணுக்கப் பயிற்சி அளிப்பது, ஜீவனோபாய ஆலோசனைகளைக் கூறுவது முதலிய நீண்ட கால ஏற்பாடுகளையும் திட்டக் கமிஷன் சிபாரிசு செய்திருக்கிறது.

பொருளாதார ரீதியில் பின்தங்கி நிற்கும் பிரதேசங்களின் அலாதிப் பிரச்னை வேறு இருக்கிறது. இப்பிரதேசங்களுக்காகச் சில விசேஷ ஏற்பாடுகளை இரண்டாவது திட்டம் வலியுறுத்தியுள்ளது.

அவகாசம் வேண்டும்

நாட்டின் ஆதார வசதிகளை முழு அளவுக்குப் பயன்படுத்த இரண்டாவது திட்டம் உத்தேசித்துள்ள போதிலும், வேலையின்மைப் பிரச்னை அடியோடு தீர்ந்து விடாது. அடுத்து வரும் திட்ட காலங்களில் நாட்டை மேன்மேலும் அபிவிருத்தி செய்வதன் மூலமே, எல்லோருக்கும் வேலை கிடைக்கும் நிலைமையைத் தோற்றுவிக்கலாம்.

அத்தியாயம் 5

நிர்வாக ஏற்பாடுகளும் ஸ்தாபன அமைப்பும்

இரண்டாவது திட்டம் நிறைவேறி வரும்போது, கொள்கை சம்பந்தமான பிரச்னைகள் அதிகமாக எழமாட்டா; நிர்வாகம், ஸ்தாபன அமைப்பு சம்பந்தமான பிரச்னைகளே அதிகமாக எழும்.

இரண்டாவது திட்ட காலத்தில் நிர்வாகம் சம்பந்தமாகச் செய்ய வேண்டிய முக்கிய ஏற்பாடுகள் வருமாறு:

1. நேர்மையான நிர்வாகம் நடப்பதற்கு வழி செய்தல்.
2. நிர்வாகம், தொழில்நுணுக்க வேலைகள் சம்பந்தமாகத் தனித்தனிச் சிப்பந்தி வர்க்கங்களை (கேடர்கள்) அமைத்தல். ஆக்கமான சேவை செய்வதற்குச் சந்தர்ப்பங்களையும், தூண்டுதல்களையும் ஏற்படுத்துதல்.
3. செய்ய வேண்டிய காரியங்களைக் கருத்தில் கொண்டு, சிப்பந்தித் தேவைகளை இடையறாது கணக்கிடுதல். எல்லாத் துறைகளிலும் பெரிய அளவில் பயிற்சித் திட்டங்களை மேற்கொள்ளுதல். அரசாங்க ஸ்தாபனங்கள், தனியார் ஸ்தாபனங்கள், தொழிற்சாலைகள், மற்ற நிலையங்கள் ஆகியவற்றில் ஏற்கெனவே உள்ள பயிற்சி வசதிகளையும், அனுஷ்டானப் பயிற்சி (அப்ரண்டீஸ்) வசதிகளையும், சர்வீஸ் காலப் பயிற்சி வசதிகளையும் பூரணமாகப் பயன்படுத்துதல். (வேலையில் இருக்கும்போதே பயிற்சி பெறுவதுதான் சர்வீஸ் காலப் பயிற்சி. மொ. ர்.)
4. வேகமாகவும் திறமையாகவும் சிக்கனமாகவும் வேலை செய்வதற்கு ஏற்ற முறைகளை வகுத்தல்; இடையறாத மேற்பார்வைக்கு வழி செய்தல்; வேலை முறை

களையும் பலன்களையும் அவ்வப்போது புறக்கண் ணோட்டத்துடன் எடைபோடுதல்.

5. விவசாயம், தேசிய விஸ்தரிப்பு, சமுதாய அபிவிருத் தித் திட்டப் பிரதேசங்கள், கிராமக் கைத்தொழில் கள், சிறு தொழில்கள் ஆகியவற்றில் உள்ள சிறு உற்பத்தியாளர்களுக்குத் தொழில் நுணுக்க உதவி யும் மற்ற உதவிகளும் கிடைக்கச் செய்தல்.

6. அரசாங்கத்தின் தொழில் - வர்த்தக ஸ்தாபனங்கள், போக்குவரத்து சர்வீஸ்கள், நதி அணைத் திட்டங் கள் முதலியவற்றைத் திறமையாக நிர்வகிப்பதற்கு ஏற்ற ஸ்தாபன அமைப்பை உருவாக்குதல்.

7. விவசாயம், சமூக வசதிகள் முதலிய துறைகளில் அரசாங்கச் செலவுக்கு அதிகபட்சப் பலன்கள் கிடைப்பதற்காக ஸ்தலவாசிகள், பொதுஜனங் களின் ஒத்துழைப்பைப் பெறுதல்.

8. கூட்டுறவுப் பொருளாதாரத் துறையைப் பலப் படுத்துதல். இதற்காக நிர்வாக, தொழில்நுணுக் கச் சிப்பந்திகளைக் கொடுத்து உதவலாம். கூட்டுறவு நிதிச் சங்கங்கள், மார்க்கட்டிங் (விற்பனை) சங்கங் கள், மற்றக் கூட்டுறவு ஸ்தாபனங்கள் ஆகியவற்றை ஏற்படுத்தலாம்.

நிர்வாக ஏற்பாடுகள் அனைத்தையும் இந்த ஜாபிதா சம் பூரணமாகக் குறிப்பிடவில்லை. நிர்வாக ஏற்பாடுகளைச் செய்யும் போது பொருளாதாரத்தின் பல்வேறு துறைகள் சம்பந்த மான கொள்கைகளையும் வேலைத் திட்டங்களையும் இணைப் பாக வகுக்க வேண்டும். இரண்டாவது திட்டத்தின் குறிக் கோள்களையும் லட்சிய அளவுகளையும் கருத்தில் கொண்டு இதைச் செய்ய வேண்டும்.

லஞ்ச ஊழல் ஒழிப்பு

லஞ்ச ஊழல்கள் காரணமாகப் பரிகரிக்க முடியாத தீங்கு கள் விளைகின்றன. அதோடு அரசாங்க நிர்வாகத்தில் பொது

ஜனங்களுக்கு நம்பிக்கை குறைந்து விடுகிறது. ஆகவே, நிர்வாகத்திலும் பொது வாழ்விலும் இருக்கக்கூடிய சகல ஊழல்களையும் ஒழிப்பதற்கு இடைவிடாமல் போராட வேண்டும். இத்தீமையை வேரறுப்பதற்கான வழிமுறைகளை அடிக்கடி மறு பரிசீலனை செய்து செம்மையாக்கிக் கொள்ளவேண்டும். எல்லா ராஜ்யங்களிலும், முக்கியமான அரசாங்கத் தொழில்களிலும் நிர்வாக உஷார்ப் பிரிவுகளை ஏற்படுத்த வேண்டும். லஞ்ச ஊழலின் மூலகாரணங்களை நீக்குவதுதான் இப்பிரிவுகளின் பிரதான நோக்கம்.

சிக்கனமும் திறமையும்

இரண்டாவது திட்டகாலத்தில் தேச நிர்மாண வேலைகளுக்காக அரசாங்கத்தின் ஒவ்வொரு இலாகாவும் கணிசமான நிதிகளைச் செலவிட வேண்டியிருக்கும். ஆகவே, பணம் விரயமாகாதபடி எல்லாச் சிப்பந்திகளும் திறமையாக வேலை செய்வது மிகமிக அவசியம். செலவைக் கட்டுப்படுத்தவும், ஸ்தாபனத்துக்குள்ளேயே திறமையைத் தணிக்கை செய்யவும் ஒவ்வொரு நிர்வாக ஸ்தாபனத்திலும் தகுந்த வழிமுறையை ஏற்படுத்தவேண்டும். அபிவிருத்தித் திட்டச் செலவுகளைச் சிக்கனப்படுத்துவதற்காக ஒரு கமிட்டியைத் தேசிய அபிவிருத்திக் கவுன்சில் சமீபத்தில் நியமித்திருக்கிறது. "திட்ட அபிவிருத்தி வேலைகள் பற்றிய கமிட்டி" என்பது அதன் பெயர். இக்கமிட்டியின் விசேஷ அலுவல்கள் வருமாறு:

(1) மத்திய சர்க்காரையும் ராஜ்யங்களையும் சேர்ந்த முக்கியமான அபிவிருத்தி வேலைகளை நேரில் சென்று பார்வையிடுவதும், மற்ற வழிகளில் விசாரிப்பதும். பொறுக்கியெடுத்த விசேஷக் கோஷ்டியினர் மூலம் இவ்வாறு விசாரிக்கப்படும்.

(2) சிக்கனம் பிடிக்கவும், விரயத்தைத் தடுக்கவும், அபிவிருத்தி வேலைகள் திறமையாக நடப்பதற்கும் ஏற்ற அமைப்பு முறைகளையும், வழிமுறைகளையும், தரங்

களையும், தொழில்நுணுக்க முறைகளையும் வகுப்பதற்காக ஆராய்ச்சி நடத்துதல்.

(3) குறிப்பிட்ட அபிவிருத்தி வேலைகளிலும், அவற்றை நடத்தும் ஸ்தாபனங்களிலும் திறமையை இடைவிடாமல் தணிக்கை செய்வதற்குத் தகுந்த ஸ்தாபனத்தை ஏற்படுத்துதல்.

(4) இக்கமிட்டியிடம் சமர்ப்பிக்கப்படும் யாதாஸ்துகளில் உள்ள யோசனைகளை அமல்நடத்தச் செய்தல். கமிட்டியின் ஆராய்ச்சிகள், விசாரணைகளின் விளைவுகளை அறிவித்தல்.

(5) இரண்டாவது ஐந்து வருஷத் திட்டத்தைச் சிக்கனமாகவும், திறமையாகவும் நிறைவேற்றுவதற்காகத் தேசிய அபிவிருத்திக் கவுன்சில் கூறக்கூடிய வேறு காரியங்களைச் செய்தல்.

சிப்பந்தி வர்க்கங்கள்

க்ஷேமநல ராஜாங்க அமைப்பு காரணமாக அதிகரித்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக, நிர்வாக சர்வீஸ்கள் இப்போதைவிட அதிகமான பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டியிருக்கும். அதனால் ஏற்கெனவே உள்ள நிர்வாகச் சிப்பந்தி வர்க்கங்களை (கேடர்களை) விஸ்தரிக்க வேண்டுமென்றும்; அவசியமானால் புதிய சிப்பந்தி வர்க்கங்களை நிரந்தர அடிப்படையில் ஏற்படுத்த வேண்டுமென்றும் திட்டக்கமிஷன் சிபாரிசு செய்திருக்கிறது. ராஜ்யங்களில் தொழில்நுணுக்கச் சிப்பந்திகள் போதிய அளவில் இல்லை. அதனால் ராஜ்யச் சிப்பந்தி வர்க்கங்களுக்கு உதவியாக அகில இந்திய சர்வீஸ்களிலிருந்து சிப்பந்திகளைப் பெறலாம்; அல்லது மத்திய சர்க்காரும் இஷ்டப்படும் ராஜ்யங்களும் சேர்ந்து சிப்பந்தி வர்க்கங்களைக் கூட்டாக அமைக்கலாம்; அல்லது ராஜ்யங்கள் பிரதேசவாரிக் கோஷ்டியாகச் சேர்ந்து ஏற்பாடு செய்துகொள்ளலாம். தவிர, அரசாங்கத் துறையின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காகத் தொழில் நிர்வாகச் சிப்பந்திகள் சர்வீஸ் ஒன்றை ஏற்படுத்தத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

பயிற்சி வசதி

ஜட வசதிகளையும், ஆள்பலத்தையும் சரியானபடி இணைத்துப் பயன்படுத்தவேண்டும். திட்டமிட்டு முன்னேறுவதற்கு இது ஜீவாதாரமானது. அபிவிருத்தி வேலைகள் தடைபடாமல் இருப்பதற்காக எல்லாவகைத் தொழில்நுணுக்கச் சிப்பந்திகளும் போதிய அளவில் கிடைக்கவேண்டும். முதல் திட்ட காலத்தில் என்ஜினீயர்கள், மெக்கானிக்குகள் முதலியோர் போதிய அளவில் கிடைக்கவில்லை. அதனால் இரண்டாவது திட்டத்தில் தொழில்நுணுக்கப் பயிற்சிக்காக ரூ. 50 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்போது 128 ஆக இருக்கும் தொழில்நுணுக்கப் பயிற்சி ஸ்தாபனங்கள் 155 ஆக 1960-61-ல் அதிகரிக்கப்படும். ஆண்டுதோறும் கிடைக்கும் என்ஜினீரிங் பட்டதாரிகள் தொகை 3,600-லிருந்து 4,500 ஆகவும், டிப்ளமாதாரர்களின் தொகை 4,900-லிருந்து 6,500 ஆகவும் அதிகரிக்கப்படும். தவிர தொழில் வினைஞர்கள், மெக்கானிக்குகள், ஆப்பரேட்டிவ் சிப்பந்திகள் ஆகியோரையும்; வன அபிவிருத்தி, பூசாரப் பாதுகாப்பு, மீன்வளம், கூட்டுறவுத் துறை, கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள், சுகாதாரம் - துப்புரவு, விவசாயம், தேசிய விஸ்தரிப்பு, சமுதாய அபிவிருத்தி முதலிய துறைகளுக்கு வேண்டிய சிப்பந்திகளையும் பயில்விப்பதற்கு விசேஷ ஸ்தாபனங்கள் அமைக்கப்படும்.

உயர்ந்த ரகத் தொழில்நுணுக்கச் சிப்பந்திகளுக்குப் பயிற்சி அளிக்க அதிக நிதியும் அவகாசமும் தேவைப்படும். அதனால் ஏற்கெனவே உள்ள பயிற்சி ஸ்தாபனங்களை விஸ்தரிப்பதில்தான் விசேஷ கவனம் செலுத்தவேண்டுமென்று சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. பயிற்சி ஸ்தாபனங்கள் இல்லாத ராஜ்யங்களுடன் மற்ற ராஜ்யங்கள் தங்கள் பயிற்சி வசதிகளைப் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

ஜில்லா அபிவிருத்தி நிர்வாகம்

நிர்வாகக் கட்டுக்கோப்பின் அச்சாணியாக இருந்து வருவது ஜில்லாவே. இப்போது அபிவிருத்தி வேலைகள்தான் ஜில்லா நிர்வாகத்தின் அதிமுக்கியமான பகுதியாகக் கருதப்படுகின்றன. ஆகவே புதிய சமுதாய அமைப்பை உருவாக்கும்

முக்கிய சாதனமாக ஜில்லா நிர்வாக அமைப்பு விளங்க வேண்டும்.

விறுவிறுப்பான பிரதிநிதித்துவ ஸ்தாபனம் ஒன்றைக் கிராமந்தோறும் ஏற்படுத்தவேண்டும். ஜில்லாவிலுள்ள பல் வேறு அபிவிருத்தி இலாகாக்களை இணைப்பாக இயங்கச் செய்ய வேண்டும். இந்த இரு நோக்கங்களுக்கும் உகந்த முறையில் ஜில்லா நிர்வாகத்தைச் சீர்திருத்தி அமைக்கவேண்டும். சட்டம் - ஒழுங்கைப் பராமரிப்பது, நீதி பரிபாலனம், ரெவின்யூ நிர்வாகம் ஆகியவை சம்பந்தமாகக் கிராமப் பஞ்சாயத்துகளிடம் அதிகமான பொறுப்பை ஒப்படைப்பதற்கு யோசனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

ஜில்லா அபிவிருத்திக் கவுன்சில்கள், வட்டார அபிவிருத்திக் கமிட்டிகள் ஆகியவற்றைப் புதிய அடிப்படையில் அமைப்பதற்கும் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்துகள், கூட்டுறவு சங்கங்கள், சேவா ஸ்தாபனங்கள் முதலியவற்றுக்கு இந்த அபிவிருத்திக் கமிட்டியிலும் கவுன்சிலிலும் பிரதிநிதித்துவம் அளிக்கப்படும்.

பஞ்சாயத்துகள்

இரண்டாவது திட்டத்தில் கிராமப் பஞ்சாயத்துகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் உண்டு. திட்டமிடுதல், அபிவிருத்தி, நிலச் சீர்திருத்தம், நில நிர்வாகம் முதலிய காரியங்களுக்கு ஆதார உறுப்புகளாகக் கிராமப் பஞ்சாயத்துகள் இருக்க வேண்டும். ஸ்தல அபிவிருத்தி வேலைகளை நடத்தும் பொறுப்பும் அவற்றிடம் ஒப்படைக்கப்படவேண்டும்.

சரியான 'யூனிட்டு'களாகக் கிராமங்களை அமைத்தால் தான் விறுவிறுப்பான பஞ்சாயத்துகளை ஏற்படுத்த வசதியாக இருக்கும். இதற்காகக் கிராம எல்லை வரம்புகளை மாற்றுவது அவசியம். அதாவது, தலா சுமார் ஆயிரம் ஜனத்தொகையைக் கொண்ட 'யூனிட்டு'களாகக் கிராமங்களை இணைக்கலாம்.

சமுதாய அபிவிருத்தி, தேசிய விஸ்தரிப்புத் திட்டங்களை நிறைவேற்றுவதிலும் பஞ்சாயத்துகள் அதிகமாகப் பயன் படுத்தப்படும்.

நிலவரியில் 15 அல்லது 20 சதவிகிதத்தைக் கிராமப் பஞ்சாயத்துகளுக்குக் கொடுக்கலாம் என்று திட்டக் கமிஷன் சிபாரிசு செய்திருக்கிறது. நிலவரியிலிருந்து மேலும் சுமார் 15 சதவிகிதத்தைப் பஞ்சாயத்துகளுக்குக் கொடுத்து, அதே அளவு தொகையைப் பஞ்சாயத்துகளும் திரட்டவேண்டும் என்று ஏற்பாடு செய்யலாம். அதாவது, நிலவரியிலிருந்து இருவகை மானியங்களைப் பஞ்சாயத்துகளுக்கு அளிக்கக் கமிஷன் சிபாரிசு செய்திருக்கிறது.

பொதுஜன ஒத்துழைப்பு

இரண்டாவது திட்ட காலத்தில் அபிவிருத்தி வேலைகளில் பொதுஜனங்கள் கலந்துகொண்டு ஒத்துழைப்பதற்கு அதிகமான சந்தர்ப்பங்கள் கிடைக்கும். ஸ்தல அபிவிருத்தி வேலைகளுக்காகத் திட்டத்தில் ரூ. 15 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. தவிர, பொதுஜன ஒத்துழைப்பைத் திரட்டும் ஏற்பாடுகளுக்காக வேறு ரூ. 5 கோடி கிடைக்கும். ராஜ்யத் திட்டத்தை ஜில்லாத் திட்டங்களாகவும், தாலுகாத் திட்டங்களாகவும், கிராமத் திட்டங்களாகவும் பிரித்து, மக்களின் ஒத்துழைப்பைப் பெறவேண்டும் என்று திட்டக் கமிஷன் கூறியிருக்கிறது. இதற்காக ஜில்லா, தாலுகா, கிராம அபிவிருத்திக் கவுன்சில்களை அமைக்க வேண்டும். ஸ்தல அபிவிருத்தி வேலைகள், கிராமப் புனர்நிர்மாண வேலைகள் ஆகியவற்றை நிறைவேற்றுவதற்காகக் கிராம கோஷ்டிகள், பாரத சேவா சமாஜம் போன்ற சேவா ஸ்தாபனங்கள்; சமூக ஊழியர்கள், டாக்டர்கள், வக்கீல்கள் போன்றவர்களின் சங்கங்கள்; சர்வகலாசாலைகள், மற்றக் கல்வி ஸ்தாபனங்கள் இளைஞர் ஸ்தாபனங்கள் முதலியவற்றின் ஒத்துழைப்பை நாடிப் பெறவேண்டும். அதோடு, சிறு சேமிப்பு இயக்கத்துக்குப் பணம் கொடுத்து, திட்டத்தின் வெற்றிக்கு உதவுமாறு ஒவ்வொரு பிரஜையையும் கேட்கவேண்டும்.

திட்டத்துக்கு விளம்பரம்

திட்டத்தின் நோக்கங்களை மக்களிடையே பரப்புவதற்காக மத்திய சர்க்கார் ரூ. 7 கோடியும், ராஜ்ய சர்க்கார்கள்

ரூ. 6 கோடியும் செலவிடும். தகவல் அறிவிப்பு நிலையங்களை (இன்பர்மேஷன் சென்டர்கள்) நிறுவுதல், ஜனரஞ்சிதமான புத்தகங்களையும் பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் பிர சுரித்தல், பிலிம்கள், காட்சி - கேள்விச் சாதனங்கள், சமுதாய ரேடியோ செட்டுகள் முதலிய பல்வேறு வழிகளில் மக்களுக் குத் திட்டம் பற்றிய விவரங்கள் விளக்கப்படும். சுமார் 72,000 கிராமங்களுக்குச் சமுதாய ரேடியோ செட்டுகள் வினி யோகிக்கப்படும். திட்டம் சம்பந்தமான நூல்கள் ஆங்கிலத் திலும், ஹிந்தியிலும், பிரதேச பாஷைகளிலும் பிரசுரிக்கப் படும். தவிர, ஆங்கிலத்திலும் ஹிந்தியிலும் "யோஜனா" ("திட்டம்") என்ற பெயருடன் புதிய சஞ்சிகை ஒன்று ஆரம் பிக்கப்படும்.

அத்தியாயம் 6

விவசாயம்

முதல் திட்ட காலத்தில் உணவு தானியங்கள், கச்சாப் பொருள்கள் ஆகியவற்றின் உற்பத்தி பெரிதும் அதிகரித்தது. ஆனால் இது போதாது. அதிகரிக்கும் ஜனத்தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தியும் பெருகவேண்டும். வளரும் தொழில்களுக்கு அதிக மூலப்பொருள்கள் தேவைப்படும். பருவகாலக் கோளாறுகளைச் சமாளிப்பதற்காகப் போதிய விவசாயப் பொருள்கள் கையிருப்பில் இருக்கவேண்டும். ஆகவே விவசாய உற்பத்தி இடையருமல் பெருக வேண்டும். ஆயினும் கோதுமை, நெல் போன்ற தானியங்களுக்கு மிக அதிக முக்கியத்துவம் அளிப்பது இனி அவசியமில்லை. இவற்றுடன் வேறு பலவகை விவசாயப் பொருள்களைப் பரவலாக அபிவிருத்தி செய்யவேண்டும்.

இரண்டாவது திட்டத்தில் விவசாய அபிவிருத்திக்காக ரூ. 341 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. தேசிய விஸ்தரிப்பு; சமுதாய அபிவிருத்தி முதலிய திட்டங்களில் உள்ள விவசாய அபிவிருத்திச் செலவுகள் இத்தொகையில் சேரவில்லை. இரண்டாவது திட்ட காலத்தில் முக்கிய விவசாயப் பண்டங்களுக்கு லட்சிய உற்பத்தி அளவுகள் வருமாறு :

பண்டம்	யூனிட்	1955-56-ல் உத்தேச உற்பத்தி மதிப்பீடு	அதிகப்படி உற்பத்திக்கு லட்சிய அளவுகள்	1960-61-ல் உத்தேச உற்பத்தி மதிப்பீடு	அதிகரிப்பு சதவிகிதம்
1	2	3	4	5	6
உணவு தானியங்கள்	லட்சம் டன்கள்	650	100	750	15
எண்ணெய் வித்துக்கள்....	,,	55	15	70	27
கரும்பு (வெல்லம்)	,,	58	13	71	22
சணல்	லட்சம் பேல்கள்	40	10	50	25

1	2	3	4	5	6
பருத்தி	லட்சம் பேல்கள்	42	13	55	31
தேங்காய் (எண்ணெய்)....	லட்சம் டன்கள்	1·3	0·8	2·1	·62
பாக்கு	லட்சம் மணங்கு	22·0	5·0	27·0	23
அரக்கு	,,	12·0	4·0	16·0	33
புகையிலை	லட்சம் டன்கள்	2·5	...	2·5	...
கருமிளகு	ஆயிரம் டன்கள்	26·0	6·0	32·00	23
முந்திரி	,,	60·0	20·0	80·0	33
தேயிலை	லட்சம் ராத்தல்கள்	6,440	560	7,000	9

இந்த லட்சிய உற்பத்தி அளவுகளின் குறியீட்டு எண்கள் (இண்டக்ஸ்) கீழே தரப்பட்டுள்ளன. (1949-50 ஆதார வருஷம்):

		1950-51	1955-56	1960-61
உணவு தானியங்கள்	....	91	111	129
எண்ணெய் வித்துக்கள்	....	99	108	137
கரும்பு (வெல்லம்)	....	114	118	144
பருத்தி	....	106	162	213
சணல்	....	109	136	194
மலைத்தோட்ட மகசூல்கள் உட்பட மற்ற மகசூல்கள்	....	105	125	136
உணவு தானியங்கள் அல்லாத விவசாயப் பண்டங்கள்	....	106	122	148
எல்லாப் பண்டங்களும் சேர்ந்து	....	96	115	135

பணவீக்க ஆபத்தைத் தடுப்பதற்காகவும், விவசாயப் பண்ட ஏற்றுமதிகள் மூலம் கூடுமான அளவு அந்நியச் செலாவணியைச் சம்பாதிப்பதற்காகவும், இந்த லட்சிய உற்பத்தி அளவுகளை இன்னமும் உயர்த்த வேண்டியிருக்கும். ஒவ்வொரு ராஜ்யத்திலும் தீவிரமாக விவசாய அபிவிருத்தி வேலைகளை நடத்தி உற்பத்தியைப் பெருக்க வேண்டும். இப்போதைய உற்பத்திப் பெருக்கத் திட்டப்படி, வயதுவந்த சராசரி ஒருவர் உபயோகிக்கும் உணவு தானியங்கள் 17·2 அவுன்ஸிலிருந்து 18·3 அவுன்ஸாகத் திட்ட இறுதியில் அதிகரிக்கும். பின்கண்ட வழிகளில் விவசாய உற்பத்தி பெருக்கப்படும்:

		(லட்சம் டன்கள்)
பெரிய பாசன வேலைகள்	....	24
சிறிய பாசன வேலைகள்	....	18
ரசாயன உரங்களும் இயற்கை உரங்களும்	....	25
திருந்திய வித்துக்கள்	....	10
தரிசு நில மீட்சியும், நில அபிவிருத்தியும்	....	8
விவசாய முறைகளில் பொதுவான அபிவிருத்திகள்	....	15
மொத்தம்	....	100

அதிகப்படியாக 210 லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப் பாசன வசதி அளிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. இதில் பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்கள் மூலம் 120 லட்சம் ஏக்கரும், சிறிய பாசன வேலைகள் மூலம் 90 லட்சம் ஏக்கரும் பலன்பெறும்.

1955-ல் 6,10,000 டன் நைட்ரஜன் ரசாயன உரங்கள் சப்ளை செய்யப்பட்டன. 1960-ல் இவை 18 லட்சம் டன்னாக அதிகரிக்கப்படும். சாக்கடை உரம், நகரக் கழிவு (கம்போஸ்ட்) உரம், தழை உரம், பிண்ணாக்குகள், மற்ற இயற்கை உரங்கள் முதலியவற்றைப் பயன்படுத்துவதற்கும் ஊக்கம் அளிக்கப்படும்.

93,000 ஏக்கர் நிலங்களில் 3,000 விதைப் பண்ணைகளை ஏற்படுத்த ராஜ்யங்கள் திட்டமிட்டுள்ளன. தேசிய விஸ்தரிப்புத் திட்ட வட்டாரம் ஒவ்வொன்றிலும், ஒரு விதைப் பண்ணையையும் ஒரு விதைக் களஞ்சியத்தையும் அமைக்க உத்தேசிக்கப்படுகிறது. கூட்டுறவு விதைக் களஞ்சியங்களை ஏற்படுத்துவதற்கும் பல ராஜ்யங்கள் திட்டம் வகுத்துள்ளன.

சுமார் 15 லட்சம் ஏக்கர் தரிசு நிலத்தைப் பண்படுத்த உத்தேசிக்கப்படுகிறது. தவிர, மத்திய டிராக்டர் ஸ்தாபனமும், ராஜ்ய டிராக்டர் ஸ்தாபனங்களும், தனிப்பட்ட விவசாயிகளும், மற்ற ஸ்தாபனங்களும் 20 லட்சம் ஏக்கர் நிலத்தைத் திருத்தி அபிவிருத்தி செய்யக்கூடும். பூசாரத்தைப் பாதுகாக்கவும், தண்ணீரைச் செட்டாக உபயோகிக்கவும் வசதியாக, கரை அமைத்துப் பயிரிடும் முறை கையாளப்படும். பயிர்ப் பாதுகாப்புக்கான, இப்போதைய நிலையங்கள் விஸ்தரிக்கப்படும்; புதிதாக ஐந்து நிலையங்கள் நிறுவப்படும். சிறந்த

விவசாயக் கருவிகளை தயாரிக்கவும், உபயோகிக்கவும் ஏற்பாடு கள் செய்யப்படும்.

ஏற்கெனவே உள்ள 50,000 ஏக்கர் பழமரத்தோப்புகளைச் சீரமைக்கவும்; புதிதாக 2 லட்சம் ஏக்கர் நிலத்தில் தோப்பு களை அமைக்கவும் ராஜ்யத் திட்டங்களில் வழி செய்யப்பட் டிருக்கிறது. விதை, செடிப் பண்ணைகளை அமைக்க உதவு வது; காய்கனிகளை டப்பிகளில் பக்குவப்படுத்தும் தொழிற் சாலைகளுக்கு உதவுவது; குளிர்பதன சாதனங்களை நிறுவுவது முதலிய வழிகளில் காய்கனிகளை உற்பத்தி செய்யவும் பக்கு வப்படுத்தவும் ஊக்கம் அளிக்கப்படும். உருளைக்கிழங்கு ஆதார வித்துக்களை அதிகமாக உற்பத்தி செய்யவும்; காய் கனி ஏற்றுமதிகளை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

ஆராய்ச்சி

விவசாய ஆராய்ச்சிகளுக்காக இரண்டாவது திட்டத்தில் ரூ. 14 கோடி. ஒதுக்கப்பட்டிருக்கிறது. ராஜ்யத் திட்டங்களில் ஏராளமான ஆராய்ச்சி ஏற்பாடுகள் உள்ளன. அதோடு, இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகம், மத்திய உருளைக்கிழங்கு ஆராய்ச்சிக் கழகம், மத்திய அரிசி ஆராய்ச்சிக் கழகம், கரும்பு வளர்ப்புக் கழகம்; பல்வேறு பண்டங்களுக்கான மத்தியக் கமிட்டிகள் ஆகியவையும் தங்கள் தங்கள் துறைகளில் ஆராய்ச்சி நடத்தத் திட்டமிட்டுள்ளன. விவசாயத்தின் பொரு ளாதார அம்சங்களை ஆராய்வதற்காக இரண்டு "விவசாய - பொருளாதார ஆராய்ச்சி நிலையங்கள்" புதிதாக ஸ்தாபிக்கப் படும்.

விவசாயக் கல்வி

தற்போது இந்தியாவில் 28 விவசாயக் கல்லூரிகள் இருக் கின்றன. பீஹார், ராஜஸ்தான், திருவாங்கூர் - கொச்சி ராஜ் யங்களில் சமீபத்தில் நிறுவப்பட்ட விவசாயக் கல்லூரிகளும் இதில் அடக்கம். தவிர, மத்தியப் பிரதேசத்தில் இரு கல்லூரி கள் புதிதாக அமைக்கப்பட்டு வருகின்றன. இரண்டாவது திட்ட காலத்தில் தேவைப்படும் விவசாயப் பட்டதாரிகள் அனைவருக்கும் பயிற்சி அளிக்க இக்கல்லூரிகள் போதுமான

வையே என்று நம்பப்படுகிறது. கிராம சேவகர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக 25 ஆதார விவசாயப் பள்ளிகளும்; 21 விஸ்தரிப்புப் பயிற்சி நிலையங்களும்; 16 பயிற்சி நிலையங்களில் ஆதார விவசாயப் பிரிவுகளும் புதிதாக ஏற்படுத்தப்படும். இவை தவிர, ஏற்கெனவே 54 ஆதார விவசாயப் பள்ளிகளும் 44 விஸ்தரிப்பு நிலையங்களும் இருந்து வருகின்றன.

நிலச்சீர்திருத்தம்

விவசாய அபிவிருத்திக்கு மிகவும் அவசியமானது நிலச் சீர்திருத்தம். முதல் திட்ட காலத்தில் பல ராஜ்யங்களில் ஜமீன்தார்கள் போன்ற நடுவாந்தரர்கள் ஒழிக்கப்பட்டு விட்டனர்; சாகுபடியாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது; மேல்வாரங்கள் குறைக்கப்பட்டன. ஆனால் குடிவாரக் காரர்களுக்கு நில உடைமை - உரிமை அளிப்பதில் அவ்வள வாக முன்னேற்றம் ஏற்படவில்லை.

வருங்கால நிலக் கொள்முதல்களுக்குப் பல ராஜ்யங்களில் வரம்பு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஏற்கெனவே உள்ள நில உடைமைகளுக்கு வரம்பு நிர்ணயிப்பது சம்பந்தமாக ஒரு சில ராஜ்யங்களில்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இரண்டாவது திட்ட காலத்தில் எல்லா ராஜ்யங்களிலும் நில உடைமைகளுக்கு வரம்பு கட்ட வேண்டுமென்று சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. "ஒரு குடும்ப அளவைப்" போல் மூன்று மடங்கு நிலத்தை உயர்ந்த பட்சவரம்பாக நிர்ணயிக்கலாம் என்று யோசனை கூறப்பட்டிருக்கிறது. (1) வேளாண்மை வேலைக்குப் போதுமான நிலப்பரப்பாக இருக்கவேண்டும்; (2) குறிப்பிட்ட அளவு சராசரி வருமானம் அளிப்பதாக இருக்கவேண்டும் - என்ற இரு அடிப்படைகளை ஆதாரமாகக் கொண்டு ஒரு குடும்ப நில அளவை நிர்ணயிக்கவேண்டும். ஒவ்வொரு ராஜ்யமும் ஸ்தல நிலைமை, பூமியின் தரம், பாசன வசதி ஆகியவற்றை அனுசரித்து குடும்ப நில அளவை வரையறுக்கலாம். இந்த அளவை நிர்ணயிப்பதில் அனுஷ்டான ரீதியான சிக்கல்கள் ஏற்படக்கூடும். ஆகவே, இவ்விஷயம் பற்றி மேற்கொண்டு ஆராய்வதற்காக நிபுணர் கமிட்டி ஒன்றை அமைப்பது உசிதம். வரம்புக்கு அதிகமாக உள்ள நிலங்களை

அரசாங்கம் எடுத்துக்கொண்டு, நிலச்சுவான்களுக்கு நஷ்டஈடு கொடுக்கும். இவ்விதம் கிடைக்கும் உபரி நிலங்களை, வெளியேற்றப்பட்ட சாகுபடியாளர்கள், கட்டுபடியாகாத அளவு சிறு நில உடைமைகளை வைத்திருக்கும் குடியானவர்கள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் முதலியவர்களுக்கு வினியோகிக்க ஏற்பாடு செய்யப்படும்.

துண்டு நிலங்களை ஒன்றுபடுத்துவது சம்பந்தமாக முதல் திட்ட காலத்தில் சொற்ப முன்னேற்றமே ஏற்பட்டது. எல்லா ராஜ்யங்களும் இவ்வேலையைப் பூர்த்திசெய்ய வேண்டும். சரியானபடி நிலத்தை நிர்வகிப்பதற்காகச் சட்டம் இயற்றவேண்டும். பொறுக்கியெடுத்த தேசிய விஸ்தரிப்புப் பிரதேசங்களிலும் சமுதாய அபிவிருத்திப் பிரதேசங்களிலும் இச்சட்டத்தை முதலில் அமல் நடத்தலாம்.

கூட்டுறவுத் துறை

கிராமப் பொருளாதாரத்தைச் சீரமைப்பதற்குக் கூட்டுறவு முறை பெரிதும் பயன்படுத்தப்படும். கிராம நிர்வாகம் முழுவதையும் கூட்டுறவு முறையில் நடத்துவதுதான் இறுதிக் குறிக்கோளாகும். இந்தக் குறிக்கோள் நிறைவேறினால் விவசாய உற்பத்தி வேலைகள், கிராமத் தொழில்கள், கிராம வர்த்தகம் முதலிய எல்லாக் காரியங்களும் கூட்டுறவு சங்கங்கள் மூலமே நடைபெறும். இரண்டாவது திட்ட காலத்தில் கூட்டுறவுக் கடன் வசதி, மார்க்கட்டிங் வசதி ஆகியவையும் விஸ்தரிக்கப்படும். கடன் சங்கங்களுக்கும், மற்றச் சங்கங்களுக்கும் இடையே இணைப்பு ஏற்படுத்தப்படும். அதனால் ஒரே சங்கத்தின் மூலமாகக் கடன் உதவி, நுகர்பொருள்கள் சப்ளை, விவசாயப் பண்டங்களின் விற்பனை முதலிய பல்வேறு அனுகூலங்களைக் கிராமவாசிகள் பெறலாம். தொழில் கூட்டுறவு சங்கங்கள், ஜாகைக் கூட்டுறவு சங்கங்கள், தொழிலாளர் கூட்டுறவு சங்கங்கள் முதலிய பலவகைக் கூட்டுறவு ஸ்தாபனங்களை ஏற்படுத்தச் சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. இரண்டாவது திட்ட காலத்தில் 10,400 பெரிய கடன் சங்கங்களையும், 1,800 பிரைமரி மார்க்கட்டிங் சங்கங்களையும் ஏற்படுத்த உத்தேசிக்கப்படுகிறது. மத்திய கிட்டங்கி கார்ப்பரேஷனும், ராஜ்ய கார்ப்ப

ரேஷன்களும் 350 கிட்டங்கிகளை நிர்மாணிக்கும். தவிர, மார்க்கூட்டிங் சங்கங்களும் பெரிய கடன் சங்கங்களும் 5,500 பண்டகசாலைகளை ஏற்படுத்தும்.

சமுதாய அபிவிருத்தி

முதல் திட்ட காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட சமுதாய அபிவிருத்தித் திட்டம் கணிசமான பலன்களை அளித்திருக்கிறது. ஆயினும் இத்திட்டத்தின்கீழ் செய்ய வேண்டிய சில முக்கியமான காரியங்கள் பாக்கியிருக்கின்றன. இரண்டாவது திட்ட காலத்தில் இக்காரியங்களை நிறைவேற்ற முயற்சி செய்யப்படும். தவிர, பஞ்சாயத்துகள், கூட்டுறவு சங்கங்கள், கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள் முதலியவற்றின் அபிவிருத்தியிலும்; மாதர், இளைஞர், ஆதிவாசிகள் ஆகியோரின் க்ஷேமநலத்திலும் அதிகக் கவனம் செலுத்தப்படும்.

இரண்டாவது திட்ட காலத்தில் நாடு முழுவதிலும் தேசிய விஸ்தரிப்புத் திட்டம் பரவிவிடும். தேசிய விஸ்தரிப்பு வட்டாரங்களில் சுமார் 40 சதவிகித வட்டாரங்கள், சமுதாய அபிவிருத்தித் திட்டத்துக்கு மாற்றப்படும். தேசிய விஸ்தரிப்புத் திட்டத்துக்காக ரூ. 200 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

கால்நடைப் பராமரிப்பு

கால்நடைப் பராமரிப்புக்கும் பால்பண்ணைத் தொழிலுக்கும் இரண்டாவது திட்டத்தில் மிகுந்த முக்கியத்துவம் உண்டு. "ஆதார கிராமத் திட்டத்தை" 1,258 கிராமங்களுக்கு விஸ்தரிக்கவும்; 245 செயற்கைக் கருத்தரிப்பு நிலையங்கள், 254 விஸ்தரிப்பு நிலையங்கள், 1,900 கால்நடை வைத்திய சாலைகள் ஆகியவற்றை அமைக்கவும் உத்தேசிக்கப்படுகிறது. கோமாரி நோயை ஒழிப்பதற்காக நாடெங்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

பால்சப்ளையை அதிகரிப்பதற்காக 36 நகரப் பால்பண்ணைகளையும், பாலேடு தயாரிக்கும் கூட்டுறவு நிலையங்கள் 12ஐயும், 7 பால் பொடி இயந்திரசாலைகளையும் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. பால் மாடுகளின் தரத்தை உயர்த்துவதற்காக ஜாதிக் கால்நடை வளர்ப்பு நிலையங்கள் பல அமைக்கப்

படும். ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மீன்வள அபிவிருத்தி ஆகியவற்றுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கால் நடைப் பராமரிப்பு சம்பந்தமாக ஆராய்ச்சி நடத்தவும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

வனவளம்

வன அபிவிருத்திக்கு ரூ. 27 கோடியும், பூசாரப் பாது காப்புக்கு ரூ 20 கோடியும் இரண்டாவது திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவற்றுக்கு முதல் திட்டத்தில், ரூ. 13 கோடிதான் ஒதுக்கப்பட்டிருந்தது. வனவளம் சம்பந்தமாகப் பின்கண்ட காரியங்கள் நிறைவேற்றப்படும்: (1) தரம் குறைந்தவையும், தனியாரிடமிருந்து சர்க்கார் மேற்கொண்டவையுமான 3,80,000 ஏக்கர் காடுகள் சீரமைக்கப்படும். (2) வாய்க் கால் கரைகள், ரஸ்தா ஓரங்கள், கிராமத் தரிசு நிலங்கள் ஆகியவற்றில் மரங்களை நடுதல். (3) 50,000 ஏக்கர் காட்டு நிலங்களில் வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்த தேக்கு முதலிய மரங்கள் நடப்படும். 13,000 ஏக்கர் நிலத்தில் வாட்டில், யூகலிப்டஸ் மரங்களும்; சுமார் 2,000 ஏக்கர் நிலத்தில் ஒளஷத மரங்களும் நடப்படும். (4) 50,000 ஏக்கர் நிலத்தில் தீப்பெட்டிக்கான மரங்களை நடுதல். (5) 7,400 மைல் நீள காட்டு ரஸ்தாக்களை அமைத்தல் அல்லது செப்பனிடுதல். (6) வெட்டு மரங்களைப் பக்குவப்படுத்தும் தொழிற்சாலைகளை ஏற்படுத்துதல். (7) வன வளங்கள் சம்பந்தமாகச் சர்வே நடத்துதல்.

டேராடூன், கோயமுத்தூர், பெங்களூர் வன ஆராய்ச்சிக் கழகங்களில் பல ஆராய்ச்சி வேலைகள் நடத்தப்படும். இணைப்பான வன அபிவிருத்திக்கும் நிர்வாகத்துக்கும் ஏற்பாடு செய்தல், வனவளம் சம்பந்தமான புள்ளிவிவரங்களைச் சரிவரத் தயாரித்தல்; மரங்களையும் மற்ற வனப் பண்டங்களையும் தரப்படுத்துதல், மார்க்கட் நிலவரத்தை ஆராய்தல் முதலிய காரியங்களைக் கவனிப்பதற்காக வனக் கமிஷன் ஒன்றை நியமிப்பதற்கும் உத்தேசிக்கப்படுகிறது.

பூசாரப் பாதுகாப்பு

மண் அரிப்பினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களைச் சேர்ந்த 30 லட்சம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்

களில் பூசாரப் பாதுகாப்பு வேலைகள் நடத்தப்படும். மணல் மேடுகள் பரவுவதைத் தடுத்தல், வனங்களை வளர்த்தல், காட்டுத் தீயைக் கட்டுப்படுத்துதல், சுற்றிலும் கரையை அமைத்துப் பயிரிடுதல் முதலியவை இவ்வேலைகளில் சில.

விவசாயத் தொழிலாளர்கள்

இரண்டாவது திட்ட காலத்தில் விவசாயத் தொழிலாளர் பிரச்னையில் உரிய கவனம் செலுத்தப்படும். கிராமாந்தரக் குடும்பங்களில் சுமார் 30 சதவிகிதம் விவசாயத் தொழிலாளரின் குடும்பங்கள் என்று மதிப்பிடப்படுகிறது. புதிதாகப் பண்படுத்தப்பட்ட நிலங்கள், பூதான நிலங்கள், உயர்ந்த பட்ச வரம்பு நிர்ணயித்தபின் மிஞ்சுகிற நிலங்கள் முதலியவற்றை இத்தொழிலாளர்களுக்கு விநியோகிக்கச் சிபாரிசு செய்யப்படுகிறது. இவர்களுக்கு உதவியாகக் கூட்டுறவுத் தொழிலாளர் சங்கங்களும், பல்வேறு குடிசைத் தொழில்களும் அமைக்கப்படும்.

விவசாயத் தொழிலாளர்களுக்கு மனைக்கட்டுகளை வழங்குவதற்காக பல ராஜ்யங்களில் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. இவர்களுக்கு இலவச மனைக்கட்டுகளை வழங்குவது கிராம சமுதாயத்தின் பொறுப்பு என்று திட்டக் கமிஷன் குறிப்பிட்டிருக்கிறது. விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிப்பதற்காகச் சட்டம் இயற்ற வேண்டும் என்றும் சிபாரிசு செய்யப் பட்டிருக்கிறது.

அத்தியாயம் 7

நீர்ப்பாசனமும் விசையும்

நீர்வளமும், மின்சார வளமும் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு ஜீவாதாரமானவை. இந்த வளங்களைக் கணக்கிடும் வேலை நடந்து கொண்டிருக்கிறது. ஆயினும், ஒரு விஷயம் மாத்திரம் நிச்சியமாகத் தெரிகிறது. இருக்கிற நீர் வளம், மின்சார உற்பத்தி வசதி ஆகியவற்றில் ஒரு அற்பப் பகுதியைத்தான் நாம் பயன்படுத்தி வருகிறோம் என்பதே அவ்விஷயம்.

நீர்ப்பாசனம்

1950-51-ல் மொத்தம் 515 லட்சம் ஏக்கர் நிலங்களே பாசன வசதி பெற்றிருந்தன. இது மொத்தப் பயிர்நிலத்தில் 16 சதவிகிதமாகும். முதல் திட்ட காலத்தில் நிறைவேற்றப் பட்ட பெரிய, சிறிய பாசன வேலைகளின் மூலம் அதிகப்படியாக 163 லட்சம் ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைத்தது.

முதல் திட்ட காலத்தில் முற்றுப்பெறாத நீர்ப்பாசன வேலைகள் இரண்டாவது திட்ட காலத்தில் தொடர்ந்து நிறைவேற்றப்படும். தவிர, 195 புதிய நீர்ப்பாசனத் திட்டங்களும் ஆரம்பிக்கப்படும். இந்தப் புதிய திட்டங்களில் பெரும்பாலானவை நடுத்தரப் பாசன வேலைகளும் சிறிய பாசன வேலைகளும் ஆகும். ஆகவே இவ்வேலைகளால் துரிதமாகப் பலன் கிடைக்கும். இரண்டாவது திட்ட காலத்தில் சுமார் 210 லட்சம் ஏக்கர் நிலங்களுக்குப் புதிதாகப் பாசன வசதி கிடைக்கக்கூடும். (முதல் திட்ட காலத்தில் பூர்த்தியாகாத பாசனத் திட்டங்களால் இனிப் பலன்பெறக்கூடிய நிலங்களும் இதில் அடக்கம்). மொத்தப் பயிர்நிலத்தில் 20 சதவிகிதம் 1955-56-ல் பாசன வசதி பெற்றிருந்தது. இது 1960-61-ல் 27 சதவிகிதமாக அதிகரிக்கும்.

இரண்டாவது திட்டத்தில் நீர்ப்பாசன வேலைகளுக்காக ரூ. 416 கோடி ஒதுக்கப்பட்டிருகிறது. இது தவிர, 3,581 குழாய்க் கிணறுகளை அமைப்பதற்கு வேறு ரூ. 20 கோடி செலவிடப்படும். இந்தக் குழாய்க் கிணறுகளால் 9,16,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

மின்சார விசை

1951 மார்ச் மாத நிலைமைப்படி இந்நாட்டு மின்சார நிலையங்களின் மொத்த உற்பத்தி சக்தி 23 லட்சம் கிலோவாட். முதல் திட்ட காலத்தில் இந்தச் சக்தியில் 11 லட்சம் கிலோ வாட் அதிகரித்தது. முதல் திட்ட காலத்தில் புதிதாக 3,700 டவுன்களுக்கும் கிராமங்களுக்கும் மின்சார வசதி விஸ்தரிக்கப்பட்டது. இவற்றைச் சேர்த்து, மின்சார வசதி பெற்ற ஊர்களின் மொத்தத் தொகை 7,400. சராசரி நபரின் மின்சார உபயோகம் 1950-51-ல் 14 யூனிட்டாக இருந்தது. அது 1955-56-ல் 25 யூனிட்டாக அதிகரித்திருக்கிறது.

இரண்டாவது திட்ட காலத்தில் மின்சார நிலையங்களின் மொத்த உற்பத்தி சக்தி 34 லட்சம் கிலோவாட்டிருந்து 69 லட்சம் கிலோவாட்டாக அதிகரிக்கப்படும். அரசாங்கத் துறையிலும் தனியார் துறையிலும் உள்ள ஜலாதார மின்சார நிலையங்கள், தெர்மல் நிலையங்கள் ஆகியவை அனைத்திலும் மின்சார உற்பத்தி பெருக்கப்படும்.

இதற்காக அரசாங்கத் துறையில் ரூ. 427 கோடியும், தனியார் துறையில் ரூ. 42 கோடியும் செலவிடப்படும். மின்சார வசதி பெற்ற டவுன்கள், கிராமங்களின் தொகை 18,000 ஆக அதிகரிக்கும். சராசரி நபர் உபயோகிக்கும் மின்சார அளவு 50 யூனிட்டாக அதிகரிக்கும்.

வெள்ளக் கட்டுப்பாடு

நாட்டின் சில பகுதிகளில் அடிக்கடி வெள்ளப் பிரவாகத்தால் பெருத்த சேதம் ஏற்படுகிறது. அதனால் நீர்ப்பாசன, மின்சாரத் திட்டங்களுடன் வெள்ளத் தடுப்பு வேலைகளும் சேர்க்கப்பட்டுள்ளன. வெள்ளத்தடுப்பு ஏற்பாடுகளை இணைப்பாக அமல் நடத்தவும், ராஜ்யங்களின் திட்டங்களை ஆராய்வதற்

காகவும் 1954-ல் மத்திய வெள்ளக் கட்டுப்பாடு போர்டு ஒன்று அமைக்கப்பட்டது. வெள்ளக் கட்டுப்பாட்டுக்கு விரிவான திட்டம் வகுப்பது சம்பந்தமாகப் புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. அதற்கிடையே, அவசரமான வெள்ளத் தடுப்பு வேலைகள் மாத்திரம் நிறைவேற்றப்படும். இதற்காக ரூ. 60 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

போதுஜன ஒத்துழைப்பு

நீர்ப்பாசன வேலைகளிலும் வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளிலும் பொதுஜனங்கள் பங்கு கொண்டு ஒத்துழைப்பதற்கு எவ்வளவோ வாய்ப்பு இருக்கிறது. முதல் திட்ட காலத்தில் இவ்வாறு மக்களின் ஒத்துழைப்பு ஓரளவு கிடைத்தது. இரண்டாவது திட்ட காலத்தில் பொதுஜனங்கள் அதிகமாக ஒத்துழைப்பதற்கு வசதியாக, சிறிய - நடுத்தரப் பாசன வேலைகள் பல சேர்க்கப்பட்டுள்ளன.

நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு ஏராளமான நிதியைச் செலவிட வேண்டியிருக்கிறது. இந்தச் செலவில் ஒரு பகுதியைச் சரிக்கட்டுவதற்காக, பாசன வசதி பெறும் நிலங்களுக்கு அபிவிருத்தி வரி விதிக்க வேண்டும் என்ற முந்திய யோசனை திட்டக் கமிஷன் ஊர்ஜிதம் செய்துள்ளது.

அத்தியாயம் 8

தொழில்களும் சுரங்கங்களும்

முதலாவது திட்ட காலத்தில் தொழில்துறையில் பிரமாதமான முன்னேற்றம் ஏற்பட்டது. 1950-ல் 105-ஆக இருந்த தொழில் உற்பத்திக் குறியீட்டு எண் (இண்டக்ஸ்) 1951-ல் 117·2-ஆகவும், 1952-ல் 128·9-ஆகவும், 1953-ல் 135·3-ஆகவும், 1954-ல் 146·6-ஆகவும், 1955-ல் 161·5-ஆகவும் அதிகரித்துக் கொண்டே சென்றது. (ஆதார வருஷம் 1946. அதாவது, அவ்வருஷ உற்பத்திப் புள்ளி 100). அரசாங்கத் துறையில் தொழில்களுக்கு முதலில் உத்தேசிக்கப்பட்டதை விட 40 சதவிகிதம் குறைவாகவே முதலீடு செய்யப்பட்டது. ஆயினும், அரசாங்கத் துறையில் பல பெரிய தொழிற்சாலைகள் ஸ்தாபிக்கப்பட்டன.

தனியார் துறையில், முதல் திட்ட காலத்தில் புதிய தொழிற்சாலைகளை அமைக்கவும், இயந்திரங்களை மாற்றவும் புதுப்பிக்கவும், மொத்தம் ரூ. 463 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டது. ஆனால் நடைமுறையில் மொத்தம் ரூ. 340 கோடி தான் முதலீடு செய்யப்பட்டதாக இப்போது மதிப்பிடப்படுகிறது.

முதல் திட்ட காலத்துக்கு நிர்ணயிக்கப்பட்ட லட்சிய அளவுகளையும் விட அதிகமான பருத்தி ஜவுளிகளும், சர்க்கரையும், தாவர எண்ணெய்களும் உற்பத்தி செய்யப்பட்டன. சிமிண்ட், காகிதம், சோடா ஆஷ், காஸ்டிக் சோடா, மற்ற ரசாயனப் பொருள்கள், ரேயான், சைக்கிள், வேறு சில தொழில்கள் ஆகியவற்றில் ஏறக்குறைய லட்சிய அளவுப்படி உற்பத்தி கைகூடிற்று. தனியார் துறையில் அலுமினியம், நைட்ரஜன் ரசாயன உரங்கள் ஆகியவை லட்சிய அளவுகளை விடக் குறைவாகவே உற்பத்தி செய்யப்பட்டன. உள்நாட்டுக் கிராக்கி இல்லாமையால் டீஸல் என்ஜின்கள், பம்புகள், ரேடியோக்கள், பாட்டரி, மின்சார விளக்கு, ஹரிக்கேன் விளக்கு

முதலிய சாதாரண என்ஜினீரிங் தொழில்களில் லட்சிய அளவைவிட உற்பத்தி குறைந்தது.

தொழிற்சாலை இயந்திரங்களை நிர்மாணிக்கும் வேலையில், முதல் திட்ட காலத்தில் அருமையான அனுபவம் கிட்டியது. இரண்டாவது திட்ட காலத்தில் ஆதாரத் தொழில்களையும் கனரகத் தொழில்களையும் நிறுவுவதற்கு இந்த அனுபவத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆதாரத் தொழில்கள் தான் இரண்டாவது திட்டத்தில் நடுநாயகமாக விளங்குகின்றன. இந்திய சர்க்காரின் புதிய தொழில் கொள்கைத் தீர்மானம் பற்றி முன்னொரு அத்தியாயத்தில் பிரஸ்தாபித்தோம். அரசாங்கத் தொழில் துறையை வளர்க்க வேண்டும் என்றும்; கூட்டுறவுத் துறையை உருவாக்கி விஸ்தரிக்க வேண்டும் என்றும் இத்தீர்மானம் வலியுறுத்துகிறது. நாட்டைத் துரிதமாகத் தொழில்மயமாக்குவதற்கும் கனரகத் தொழில்கள், இயந்திர நிர்மாணத் தொழில்கள் ஆகியவற்றை விருத்தி செய்வதற்கும் இந்தத் தீர்மானம் விசேஷ முக்கியத்துவம் அளிக்கிறது. இரண்டாவது திட்ட காலத்தில் ஆதாரத் தொழில்கள் பெரும்பாலும் அரசாங்கத் துறையிலேயே நிறுவப்படும். நுகர்பொருள்களை உற்பத்தி செய்வதற்குக் கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும் பிரதானமாகப் பயன்படுத்தப்படும். அதோடு இப்போதைய தொழிற்சாலைகளில் முடங்கிக் கிடக்கும் உற்பத்தி சக்தியும் இதற்குப் பயன்படுத்தப்படும். உற்பத்தியாளர் - பண்டத் தொழில்களும் சாதாரண என்ஜினீரிங் தொழில்களும், மற்றத் தொழில்களும் அநேகமாய் தனியார் துறையிலேயே இருந்து வரும்.

அரசாங்கத் துறை

இரும்பும் எஃகும்: அரசாங்கத் துறைத் தொழில்களில் இரும்புக்கும் எஃகுக்கும்தான் முதல் ஸ்தானம். ரூர்கேலா (ஒரிஸா), பிலாய் (மத்தியப் பிரதேசம்), துர்காபூர் (மேற்கு வங்காளம்) என்ற இடங்களில் மூன்று புதிய எஃகு ஆலைகள் நிர்மாணிக்கப்படும். ஒவ்வொரு ஆலையும் வருஷத்துக்குப் பத்து லட்சம் டன் எஃகுக் கட்டிகளை உற்பத்தி செய்யலாம். ரூர்கேலா ஆலைக்கு ரூ. 128 கோடியும், பிலாய் ஆலைக்கு ரூ. 110

கோடியும், துர்காபூர் ஆலைக்கு ரூ. 115 கோடியும் செலவாகும். இவற்றில் ஒரு ஆலையில் எஃகு மாத்திரமன்றி, 3,50,000 டூன் தேனிரும்பும் உற்பத்தி செய்யப்படும். மைசூர் இரும்பு-எஃகுத் தொழிற்சாலையின் உற்பத்தி சக்தி ஒரு லட்சம் டன்னாக அதிகரிக்கப்படும். இதற்காக ரூ. 6 கோடியும், மூன்று புதிய எஃகு ஆலைகளை நிறுவ ரூ. 350 கோடியும் திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் ரூ. 75 கோடிக்கு வெளிநாட்டாரின் கடனுதவி கிடைக்கும். முதலீட்டில் பங்கு கொள்வது, இயந்திரங்களின் விலையைப் பின்னால் வாங்கிக் கொள்வது என்பன போன்ற வழிகளில் வெளிநாட்டார் உதவுவர்.

கனரக என்ஜினீரிங் தொழில் : ரயில்வே தளவாடங்களைத் தயாரிப்பதற்காகச் சித்தரஞ்சன் தொழிற்சாலையில் கனரக எஃகு வார்ப்படசாலை ஒன்று அமைக்கப்படும். மற்றும், தேசியத் தொழில் அபிவிருத்திக் கார்ப்பரேஷன் கட்டுப்பாட்டில் மூன்று வார்ப்படசாலைகளும், எஃகு இணைப்பு நிர்மாண ஆலைகளும், எஃகுக் கட்டுக்கோப்பு நிர்மாண ஆலைகளும் ஸ்தாபிக்கப்படும்.

கனரக மின்சார தளவாடங்கள் : கனரக மின்சார தளவாடங்களை உற்பத்தி செய்வதற்காக ஒரு பிரிட்டிஷ் கம்பெனியுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டிருக்கிறது. இந்தத் தொழிற்சாலையில் மொத்தம் சுமார் ரூ. 25 கோடி விடுமுதல் போடவேண்டியிருக்கலாம். கனரக டிரான்ஸ்பார்மர்கள், தொழிற்சாலைகளுக்கான விசை மோட்டார்கள், இழுப்பு (டிராக்ஷன்) மோட்டார்கள், ஸ்விட்ச் கியர்கள் முதலியவை இத்தொழிற்சாலையில் 1960-61-க்கு முன்னால் தயாரிக்கப்படும்.

இயந்திரக் கருவிகள் : ஹிந்துஸ்தான் இயந்திரக் கருவித் தொழிற்சாலையின் உற்பத்தியை அதிகரிக்க உத்தேசிக்கப்படுகிறது. பெரிய லேத்துகள், மில்லிங் இயந்திரங்கள், டிரில்லிங் இயந்திரங்கள் ஆகியவற்றையும் இவ்வாலை உற்பத்தி செய்யத் தொடங்கும்.

ரயில் என்ஜின்கள், கப்பல்கள், ரயில் பெட்டிகள் : வருஷத்துக்கு 300 ரயில் என்ஜின்களை உற்பத்தி செய்ய வசதியாகச் சித்தரஞ்சன் தொழிற்சாலை விஸ்தரிக்கப்படும். ஆறு பழைய

ரகக் கப்பல்கள் அல்லது நான்கு புதிய ரகக் கப்பல்களை நிர்மாணிக்கும் விதத்தில் விசாகப்பட்டினம் கப்பல் கட்டும் தளம் விஸ்தரிக்கப்படும். அங்கு புதிய ரேவு துறை ஒன்றும் நிர்மாணிக்கப்படும். விசாகைத் தளம் தவிர, இரண்டாவது கப்பல் நிர்மாணத் தளம் ஒன்றும் ஸ்தாபிக்கப்படும். பெரம்பூர் ரயில் பெட்டித் தொழிற்சாலை 1957 முதல், வருஷத்துக்கு 350 ரயில் பெட்டிகளைத் தயாரிக்கக்கூடும். மீட்டர் கேஜ் ரயில் பெட்டிகளைத் தயாரிக்க மற்றொரு தொழிற்சாலை ஏற்படுத்தப்படும்.

பழுப்பு நிலக்கரி: தென் ஆற்காடு ஜில்லா, நெய்வேலியில் பழுப்பு நிலக்கரிச் சுரங்கத் திட்டம் நிறைவேற்றப்படும். வருஷத்துக்கு 35 லட்சம் டன் வீதம் பழுப்பு நிலக்கரியைத் தோண்டியெடுக்க உத்தேசிக்கப்படுகிறது. மின்சார உற்பத்தி, கரிக் கட்டிகளைத் தயாரிப்பது, ரசாயன உர உற்பத்தி ஆகியவற்றுக்கும் அங்கு ஆலைகள் ஸ்தாபிக்கப்படும்.

ரசாயன உரங்கள்: நெய்வேலி, நங்கல், ரூர்கேலா என்ற இடங்களில் மூன்று ரசாயன உரத் தொழிற்சாலைகள் புதிதாக நிறுவப்படும்.

மற்றத் தொழில்கள்: ஏற்கெனவே உள்ள டி.டி.டி. மருந்துத் தொழிற்சாலை, ஆன்டிபயாட்டிக் மருந்துத் தொழிற்சாலை, ஹிந்துஸ்தான் கேபிள் தொழிற்சாலை, தேசிய கருவி பாக்டரி, இந்திய டெலிபோன் தொழிற்சாலை ஆகியவை விஸ்தரிக்கப்படும். திருவாங்கூர்-கொச்சியில் (இரண்டாவது) டி.டி.டி. தொழிற்சாலை ஒன்று நிறுவப்படும். இப்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் வெள்ளிச் சுத்திகரிப்பு ஆலையில் இரண்டாவது திட்ட காலத்தில் உற்பத்தி தொடங்கும். செக்யூரிட்டி காகிதம் பாண்டுக் காகிதம் ஆகியவற்றில் நாடு சுயநிறைவு பெறுவதற்காகச் செக்யூரிட்டி காகித ஆலை ஒன்று அமைக்கப்படும்.

ராஜ்ய சர்க்கார்களும் பல தொழிற்சாலைகளை ஸ்தாபிக்கும். தேசிய தொழில் அபிவிருத்திக் கார்ப்பரேஷன் வேறு பிரம்மாண்டத் தொழில் திட்டங்களை வகுத்திருக்கிறது.

தனியார் துறை: தொழில்களை அபிவிருத்தி செய்வதில் தனியார் துறைக்கும் முக்கிய பங்கு உண்டு. டாட்டா இரும்பு-எஃகுக் கம்பெனி, இந்திய இரும்பு-எஃகுக் கம்பெனி ஆகிய

வற்றின் உற்பத்தி சக்தியை 12·5 லட்சம் டன்னிலிருந்து 23 லட்சம் டன்னாக அதிகரிக்க உத்தேசிக்கப்படுகிறது, மற்றும் அலுமினியம், அயமாங்கனீஸ், சிமிண்ட், ஆட்டமோபைல்கள் (மோட்டார் கார்கள்), சைக்கிள்கள், தையல் இயந்திரங்கள், ரசாயனப் பொருள்கள், காகிதம், காகித அட்டை, சர்க்கரை, தாவர எண்ணெய்கள், மில் ஜவுளி, மருந்துகள், இயந்திரங்கள் முதலியவற்றின் உற்பத்தியும் கணிசமாக அதிகரிக்கப்படும்.

நாடெங்கும் அரசாங்கத் துறை, தனியார் துறை ஆகியவற்றில் முக்கிய தொழில்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள லட்சிய உற்பத்தி அளவுகள் வருமாறு :

சில பெரிய தொழில்களுக்கு அகில இந்திய லட்சிய உற்பத்தி அளவுகள்

		1955-56		1960—61 (ல. அளவு)	
தொழில்	யூனிட்	உற்பத்தி சக்தியின் மதிப்பீடு	உற்பத்தியின் மதிப்பீடு	உற்பத்தி சக்தி	உற்பத்தி
1	2	3	4	5	6
1. இரும்பும் எஃகும்:					
(அ) பூர்த்தியான எஃகு (பிரதான உற்பத்தியாளர்)	ஆயிரம் டன்கள்	1,300	1,300	4,680	4,300
(ஆ) வார்ப்பட ஆலைகளுக்குத் தேனிரும்பு	,,	380	380	980	750
2. எஃகுக் கட்டுமானங்கள்	டன்கள்	2,26,000	1,80,000	5,00,000	5,00,000
3. கனரக வார்ப்பட, இணைப்பு வேலை ஆலைகள்: (அ) எஃகு வார்ப்படம்	,,	...	....	15,000	15,000
(ஆ) எஃகு இணைப்பு ஆலைகள்	,,	...	....	12,000	12,000
(இ) வார்ப்பட இரும்பு ஆலைகள்	,,	...	...	10,000	10,000

1	2	3	4	5	6
4. அயமூங்கனீஸ்	டன்கள்	28,000	தகவல்இல்லை	1,71,800	1,60,000
5. அலுமினியம்	,,	7,500	7,500	30,000	25,000
6. ரயில் என்ஜின்கள்	எண்கள்	170	175	400	400
7. மோட்டார் கார்கள் (ஆட்டமோ பைல்கள்)	,,	38,000	25,000	38,000	57,000
8. கனரக ரசாயனங்கள்:					
(அ) கந்தக அமிலம்	ஆயிரம் டன்கள்	242	170	500	470
(ஆ) சோடா ஆஷ்	டன்கள்	90,000	80,000	2,53,000	2,30,000*
(இ) காஸ்டிக் சோடா	,,	44,300	36,000	1,50,400	1,35,400*
9. ரசாயன உரங்கள்:					
(அ) நிலை நைட்ரஜன் ரகம்	,,	85,000	77,000	3,82,000	2,90,000
(ஆ) பாஸ்பேட் உரங்கள் (P_2O_5)	டன்கள்	35,000	20,000	1,20,000	1,20,000
10. கப்பல் கட்டுதல்	ஜி. ஆர். டன்கள்	50,000 (1951-56)	....	....	90,000 (1956-61)
11. சிமிண்ட்	ஆயிரம் டன்கள்	4,930	4,280	16,000	13,000
12. ரிப்ராக்டரிகள்	டன்கள்	4,44,000	2,80,000	10,00,000	8,00,000
13. பெட்ரோலிய சுத்திகரிப்பு (பக்குவம் செய்யப்பட்ட குரூட் ஆயில் அளவில்)	லட்சம் டன்கள்	36·25	36	43·1	43
14. காகிதம், காகித அட்டை	ஆயிரம் டன்கள்	210	200	450	350
15. நியூஸ்பிரின்ட்	டன்கள்	30,000	4,200	60,000	60,000
16. ரேயான்:					
(அ) ரேயான் பிலமன்ட்	லட்சம் ராத்தல்கள்	220	150	680	680
(ஆ) ஸ்டேப்பிள் பைபர்	,,	160	132	320	320

* மொத்த உற்பத்தியைக் குறிக்கிறது. இந்த உற்பத்தியில் ஒரு பகுதி ஆலைக்குள்ளேயே வேறு பொருள்களாக மாற்றப்படும். ஆகவே விற்பனைக்கு 1,85,000 டன் சோடா ஆஷும், 1,06,600 டன் காஸ்டிக் சோடாவும்தான் கிடைக்கும்.

1	2	3	4	5	6
(இ) ரசாயனக் கூழ்	ஆயிரம் டன்கள்	....	....	30	30
17. டீஸல்/என் ஜின் கள் (50 எச். பி.க் குக் கீழ்)	எச்.பி.	2,00,000	1,00,000	2,20,000	2,05,000
18. சைக்கிள்கள்	ஆயிரங்கள்	760	550	895	1,000†
19. மின்சார மோட் டார்கள் (200எச். பி.க்குக்கீழ்)	எச்.பி.	2,92,000	2,40,000	6,00,000	6,00,000
20. ஏ. ஸி. எஸ். ஆர். கண்டக்டர்கள்	டன்கள்	15,370	9,000	20,400	18,000

கனிவளம்

நிலக்கரி: இரண்டாவது திட்டத்தில் தொழில்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதால், சுரங்கங்களை அபிவிருத்தி செய்வது அத்தியாவசியமாகும். எரிபொருளாகவும், இரும்பு எஃகு முதலிய தொழில்களில் ஒரு மூலப்பொருளாகவும் நிலக்கரி பயன்படுகிறது. அதனால் சுரங்க அபிவிருத்தியில் நிலக்கரிக்குத்தான் முதல் ஸ்தானம். தற்போது 380 லட்சம் டன்னாக இருக்கும் நிலக்கரி உற்பத்தி, 1960-61-ல் ஆறுகோடி டன்னாக அதிகரிக்கப்படும். ஏற்கெனவே உள்ள சுரங்கங்களில் அதிக நிலக்கரியை வெட்டுவதன் மூலமும், புதிய சுரங்கங்களைப் பயன்படுத்துவதன் மூலமும் உற்பத்தி இவ்வாறு பெருக்கப்படும். அதிகப்படி உற்பத்தியில் அரசாங்கத் துறையின் பங்கு 120 லட்சம் டன்னாகவும், தனியார் துறையின் பங்கு ஒரு கோடி டன்னாகவும் இருக்கும்.

கோக்கிங் நிலக்கரியைப் பேணிப் பாதுகாப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும். எஃகு ஆலைகள் போன்ற அத்தியாவசியத் தொழில்களுக்குச் சுத்திகரித்த கோக்கிங் கரியைச் சப்ளை செய்வதற்காகப் புதிதாகச் சில சுத்திகரிப்பு நிலையங்கள் நிறுவப்படும். ரயில்வே போன்ற அத்தியாவசியமற்ற துறைகளில் கோக்கிங் நிலக்கரிக்குப் பதில் வேறு ரக நிலக்கரியை உபயோகிப்பதற்குப் படிப்படியாக ஏற்பாடு செய்யப்படும். கோக்கிங்

† பரவல் தொழில் முறையில் சுமார் 2,50,000 சைக்கிள்கள் உற்பத்தியாகும். ஆகவே, மொத்த உற்பத்தி 12,50,000 ஆக இருக்கும்.

நிலக்கரி போதிய அளவில் இல்லாததால்தான் அதைச் சிக்கனமாக உபயோகிக்க வேண்டியிருக்கிறது.

மற்றக் கனிகள்: வேறு சில கனி வகைகளுக்கு, (இரண்டாவது திட்ட இறுதி வருஷத்துக்கான) லட்சிய உற்பத்தி அளவுகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு:

		(லட்சம் டன்கள்)
இரும்புக் கனி	....	125
மாங்கனீஸ் கனி	....	20
சுண்ணாம்புக்கல்	....	233
ஜிப்ஸம்	....	197
பாக்ஸைட்	...	1·75

இதுவரை நிலக்கரியும், எண்ணெயும் (பெட்ரோலியம்) மாத்திரமே அரசாங்கத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருந்தன. ஆனால் புதிய தொழில் கொள்கைத் தீர்மானப்படி வேறு பல முக்கியமான கனிப் பொருள்களும் அரசாங்கத் துறை ஜாபிதாவில் சேர்க்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம், அரசாங்கத் துறையில் வைரம், செம்பு ஆகியவற்றை முதலில் வெட்டியெடுப்பதற்குத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

கனிஜ எண்ணெய்: நாட்டின் எண்ணெய் வளங்களைப் பயன்படுத்துவது இரண்டாம் திட்டத்தின் பிரம்மாண்ட பணிகளில் ஒன்று. பல்வேறு பிரதேசங்களில் எண்ணெய் ஊற்றுக்களைக் கண்டுபிடிப்பதற்கான ஆராய்ச்சிகள் நடத்தப்படும். ஜ்வாலமுகி, காம்பே பகுதிகளில் பரீட்சார்த்தக் குடைச்சல் (டிரில்லிங்) வேலை நடத்தப்படும். எண்ணெய்த் தொழிலுக்கு வேண்டிய தொழில்நுணுக்க வாதிகளுக்கு இந்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பயிற்சி அளிக்கப்படும். எண்ணெய்வள ஆராய்ச்சிக்கும், பயிற்சி வசதிகளுக்கும் தற்காலிகமாக ரூ. 11·5 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவை சம்பந்தமான புதிய திட்டங்களைச் சர்க்கார் அங்கீகரித்த பிறகு மேலும் நிதிகள் அளிக்கப்படும்.

அத்தியாயம் 9

கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும்

வேலை வாய்ப்புகளைக் கணிசமாக அதிகரிக்க வேண்டும் என்பது இரண்டாம் ஐந்து வருஷத் திட்டத்தின் தலையாய குறிக்கோள்களில் ஒன்றாகும். சிறு தொழில்களும் குடிசைத் தொழில்களும் அதிகமான வேலைவாய்ப்புகளை அளிக்க வல்லவை. அவை கருவிகளைவிட ஆள்பலத்தை அதிகமாக உபயோகிக்கின்றன. ஒரே அளவு முதலீட்டுக்கு, பாக்டரிகளை விட இந்தத் தொழில்களில் அதிகப் பேருக்கு வேலை கிடைக்கும். தவிர, மக்களில் ஏழை வகுப்பினருக்கு இவை வருமானம் அளிக்கின்றன. அதனால் நகரங்களைப் போலக் கிராமங்களின் பொருளாதாரமும் சமசீராக அபிவிருத்தி அடையும். இக்காரணங்களால்தான் சிறு தொழில்களுக்கும் கிராமத் தொழில்களுக்கும் இரண்டாவது திட்டத்தில் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

கிராமத் தொழில்களும், சிறு தொழில்களும் புதுவளர்ச்சியின்றி நமது பொருளாதாரத்தின் கூம்பிய உறுப்புகளாகவே இருந்துவரும் என்று நினைக்கக்கூடாது. கிராமப் பொருளாதாரம் வளர வளர, கிராமத் தொழில்களின் செய்முறைகளும் திருந்தும்; நுணுக்கமான பண்டங்களை அவை தயாரிக்கத் தொடங்கும். பரவலான, முற்போக்குத் தொழில் துறையாகச் சிறு தொழில்கள் விளங்கும். ஒருபுறம் விவசாயத்துடனும், இன்னொரு புறம் பெருந்தொழில்களுடனும் தொடர்பு கொண்டு இச்சிறு தொழில்கள் இயங்கி வரும்.

சிறு தொழில்கள், கிராமத் தொழில்கள் சம்பந்தமாக முதல்திட்ட காலத்தில் இரு முக்கிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன: (1) கைத்தறித் தொழில், கதர்-மற்றக் கிராமத் தொழில்கள், கைநுட்பத் தொழில்கள், சிறு தொழில்கள், பட்டுத் தொழில், கயிற்றுத் தொழில் ஆகியவற்றை அபிவிருத்தி செய்வதற்காகத் தனித்தனி அகில இந்திய போர்டுகள்

அமைக்கப்பட்டன. (2) சர்க்காருக்கு வேண்டிய பண்டங்களில் சிலவற்றைச் சிறு தொழில்கள், கிராமத் தொழில்கள் ஆகியவற்றிலிருந்தே பெறவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. இந்த நடவடிக்கைகளின் விளைவாகக் கைத்தறி, கத்தர் முதலிய பல தொழில்களில் உற்பத்தியும், வேலை வசதியும் அதிகரித்தன.

கார்வே கமிட்டி

'கிராமத் தொழில்கள், சிறு தொழில்கள், சம்பந்தமான கமிட்டி' ஒன்றை (கார்வே கமிட்டி) திட்டக் கமிஷன் 1955 ஜூன் மாதத்தில் நியமித்தது. இத்தொழில்களை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய வசதிகள் சம்பந்தமாக ஒரு திட்டத்தைக் கமிட்டி தயாரித்தது. அதோடு, இந்தத் தொழில்கள் வெற்றிகரமாக இயங்குவதற்காகப் பல யோசனைகளையும் கார்வே கமிட்டி தெரிவித்தது. இத்தொழில்களுக்குச் சிலவகைப் பண்டங்களின் உற்பத்தியை ஏகபோகமாக ஒதுக்குதல்; இவற்றுடன் போட்டியிடக்கூடிய பெருந்தொழில்களுக்கு 'செஸ்' வரி விதிப்பது; சிறு தொழில் பண்டங்களின் உற்பத்திக்கு மானியமும், விற்பனைக்கு 'ரிபேட்டும்' (கமிஷன்) அளிப்பது; தொழில் நுணுக்க, நிதி, மார்க்கட்டிங் வசதிகளை அளிப்பது ஆகியவை இந்த யோசனைகளில் சில.

சிறு தொழில்கள், கிராமத் தொழில்கள் சம்பந்தமாக இந்திய சர்க்காரின் நிலையைப் புதிய தொழில் கொள்கைத் தீர்மானம் தெளிவுபடுத்தியுள்ளது. பெருந் தொழில்களின் உற்பத்தியைக் கட்டுப்படுத்துவது, வரி விதிப்பில் சலுகை காட்டுவது, நேரடியான மானியங்கள் அளிப்பது முதலிய வழிகளில் சிறு தொழில்களுக்கும், கிராமத் தொழில்களுக்கும் (அவசியமான சமயங்களில்) தொடர்ந்து பாதுகாப்பு அளிக்கலாம் என்று இத்தீர்மானம் கூறுகிறது. ஆயினும் சுயபலத்துடன் செயலாற்றுவதற்கு வேண்டிய ஜீவசக்தியை இந்தப் பரவல் முறைத் தொழில்கள் பெறுவதற்கு அரசாங்கம் வழிசெய்ய வேண்டும் என்பதைத் தீர்மானம் சுட்டிக்காட்டியிருக்கிறது. ஒரே துறையைச் சேர்ந்த பெருந்தொழில்களுக்கும் சிறு தொழில்களுக்கும்

'பொது உற்பத்தித் திட்டங்களை' வகுக்க வேண்டும். பெருந் தொழில்களுடன் போட்டியிடும் சக்தியைச் சிறு உற்பத்தி யாளர்கள் விருத்தி செய்துகொள்ள அரசாங்கம் முழு மூச் சுடன் உதவிபுரியும். சிறு உற்பத்தியாளர்கள் தொழில் கூட்டுறவு சங்கங்களை அமைத்துக்கொள்ள ஊக்கம் அளிக் கப்படும். குறிப்பாக, மூலப்பொருள்களை வாங்கவும், உற்பத்தி யான பண்டங்களை விற்கவும் இத்தகைய சங்கங்களை அமைக்க வேண்டும்.

நிதி வசதி

சிறு தொழில்கள், கிராமத் தொழில்களுக்காக இரண் டாவது திட்டத்தில் ரூ. 200 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. நடப்பு முதலீட்டுக்குச் சாதாரண பாங்குகள் அளிக்கக்கூடிய கடனுதவி நீங்கலாக இந்த நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ரூ. 200 கோடி எவ்வாறு பயன்படுத்தப்படும் என்ற தற்காலிக மதிப்பீடு வருமாறு :

தொழில்		(ரூ. கோடிகள்)
1. கைத்தறித் தொழில் :		
பருத்தி நெசவு	....	56·0
பட்டு நெசவு	...	1·5
கம்பள நெசவு	....	2·0
		59·5
2. கதர் :		
கம்பள நூற்பும் நெசவும்	...	1·9
புரவல் முறையில் பஞ்சு நூற்பும் கதர் நெசவும்	...	14·8
		16·7
3. கிராமத் தொழில்கள் :		
கைக்குத்தல் அரிசி	...	5·0
தாவர எண்ணெய் (செக்கு)	...	6·7
தோல் ஜோடுகளும் தோல் பதனிடுதலும் (கிராமாந்தரப் பிரிவு)	...	5·0
வெல்லமும் கண்டசாரியும்	...	7·0
குடிசைத் தொழில் தீப்பெட்டி	...	1·1
மற்றக் கிராமத் தொழில்கள்	...	14·0
		38·8

			(ரூ. கோடிகள்)
4.	கைநுட்பத் தொழில்கள்	...	9·0
5.	சிறு தொழில்கள்	...	55·0
6.	மற்றத் தொழில்கள் :		
	பட்டுத் தொழில்	...	5·0
	கயிறு பின்னுதலும் நெய்தலும்	...	1·7
7.	பொதுவான ஏற்பாடுகள் :		
	நிர்வாகம், ஆராய்ச்சி முதலியவை	...	15·0
	மொத்தம்	...	200·0

அம்பர் சர்க்கா திட்டம் சம்பந்தமான செலவு இதில் சேரவில்லை. அம்பர் சர்க்கா பற்றி இப்போது நடக்கும் பரிசோதனைகள் பூர்த்தியானபின் அதற்கு வேண்டிய நிதி ஒதுக்கப்படும்.

புதிய ஏற்பாடுகள் :

கைத்தறியும் கதரும் : கார்வே கமிட்டியின் கருத்துப்படி, கைத்தறித் தொழில் 1960-61 வாக்கில் சுமார் 170 கோடி கெஜம் துணியை உற்பத்தி செய்யவேண்டியிருக்கும். சரியான அமைப்புமுறை ஏற்பாடுகள், சும்மா கிடக்கும் தறிகளை உபயோகிப்பது, வருஷத்தில் இப்போதைவிட அதிகமான நாட்களுக்குத் தறிகள் வேலை செய்வது, தறிகளின் உற்பத்தி சக்தியை அதிகரிப்பது முதலிய காரியங்களைச் செய்தால்தான் துணி உற்பத்தியை இந்த அளவுக்கு அதிகரிக்க முடியும். கதர்த் தொழிலில் இப்போதைய ஒற்றைக் கதிர் சர்க்கா நூலை விட அம்பர் சர்க்கா நூலை இனி அதிகமாக உபயோகிக்க வேண்டியிருக்கும். அம்பர் சர்க்காவின் தொழில் நுணுக்க, பொருளாதார அம்சங்கள் ஆராயப்பட்டு வருகின்றன.

கிராமத் தொழில்கள் : கிராமத் தொழில்களை அபிவிருத்தி செய்யப் பல முக்கியமான யோசனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக புதிதாக விசை ரைஸ் மில்கள் ஏற்படுவதைத் தடை செய்வதன் மூலம் கைக்குத்தல் அரிசித் தொழிலுக்கு ஆதரவு அளிக்க வேண்டும். இப்போதைய கிராமச் செக்குகளுக்குப் பதிலாக வர்தா ரகச் செக்குகளை ஏற்படுத்தித் தாவர எண்ணெய்களின் உற்பத்தியை அதிகரிக்க

வேண்டும். தோல் ஜோடுகள், பதனிட்ட தோல்கள் ஆகியவற்றைத் தயாரிக்கும் பெரிய ஆலைகளை விஸ்தரிக்காமல் தடுத்துக் குடிசைத் தொழில்களுக்கும் சிறு தொழில்களுக்கும் ஊக்கம் அளிக்க வேண்டும். புதிய தளவாடங்களையும் செயல் முறைகளையும் புகுத்தி, வெல்லம், கண்டசாரி தொழிலைத் திருத்தி அமைக்க வேண்டும். தீப்பெட்டிகள் சம்பந்தமாக அதிகரிக்கும் தேவையில் பெரும் பகுதியைச் சிறுதொழில்கள், குடிசைத் தொழில்கள் மூலமாகவே பூர்த்தி செய்யவேண்டும். தேனீ வளர்ப்பு, பனை வெல்லம், காகிதம், சோப்பு, மண்பாண்டங்கள் முதலிய கிராமத் தொழில்களை அபிவிருத்திசெய்யவேண்டும்.

கைநுட்பத் தொழில்கள்: உலோகப் பண்டங்கள், விளையாட்டுச் சாமான்கள், பனைபோலைப் பொருள்கள், கல்லிலும் பளிங்கிலும் சிற்ப வேலைகள், அரக்கு வேலைகள் முதலியவற்றுக்காகப் பல்வேறு ராஜ்யங்களில் பயிற்சி-உற்பத்திக் கூட்டு நிலையங்களை நிறுவ உத்தேசிக்கப்படுகிறது. குறிப்பிட்ட கை நுட்பத் தொழில்களை வளர்ப்பதற்காகத் தனித்தனியான திட்டங்களும் உள்ளன. எம்போரியங்கள், விற்பனை டிப்போக்கள் முதலியவற்றை அமைப்பது; சர்வதேசச் சந்தைகளிலும், பொருட்காட்சிகளிலும் கலந்துகொள்வது முதலிய மார்க்கட்டிங் வசதிகளும் செய்துதரப்படும்.

சிறு தொழில்கள்: ரூ. 5 லட்சத்துக்குக் குறைவான மூலதனத்தையும், 50 அல்லது அதற்குக் குறைவான சிப்பந்திகளையும், மின்சார விசையையும் உபயோகிக்கும் தொழில்களைச் "சிறு தொழில்கள்" என்று சிறு தொழில் போர்டு குறிப்பிட்டிருக்கிறது. இந்தச் சிறு தொழில்களை அபிவிருத்தி செய்வதற்காக விரிவான திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. தேசிய சிறு தொழில்கள் கார்ப்பரேஷனின் நான்கு கிளைகளைப் பம்பாய், கல்கத்தா, சென்னை, டில்லி நகரங்களில் ஸ்தாபிக்க உத்தேசிக்கப்படுகிறது. இப்போது நான்காக இருக்கும் தொழில் சர்வீஸ் கழகங்கள் 20 ஆக அதிகரிக்கப்படும். இதன் மூலம் எல்லா ராஜ்யங்களிலும் சர்வீஸ் வசதி ஏற்படும். இயந்திரங்களை வாடகை-கொள்முதல் முறையில் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்படும். சிறு தொழில் பண்டங்களை விற்பனை செய்வதற்கும் வசதிகள் அளிக்கப்படும்.

தொழில் எஸ்டேட்டுகள் : நாட்டில் தொழில் எஸ்டேட்டுகள் பலவற்றை ஏற்படுத்துவதற்காகத் திட்டத்தில் ரூ. 10 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. நல்ல இடம், மின்சார வசதி, தண்ணீர், காஸ், நீராவி, அழுத்த வாயு, ரயில்வே ஸைடிங்கு முதலிய வசதிகள் எல்லாம் இந்த எஸ்டேட்டிலுள்ள தொழில்கள் அனைத்துக்கும் கிடைக்கும். திறமையாகவும், அனுவசியச் செலவில்லாமலும் பண்டங்களை உற்பத்தி செய்து, சிறு தொழில்கள் முன்னேறுவதற்கு இந்த எஸ்டேட்டுகள் உதவும்.

கயிறு : மத்திய கயிறு ஆராய்ச்சிக் கழகம் ஒன்று அமைக்கப்படும். கூட்டுறவு முறையில் கயிற்றுப் பண்டங்களைத் தயாரிக்கவும் விற்பதற்கும் ஏற்பாடு செய்யப்படும்.

அமைப்பு முறைகள்

கிராமத் தொழில்களையும் சிறு தொழில்களையும் வளர்ப்பதற்கு அவசியமான அமைப்புமுறை ஏற்பாடுகளைத் திட்டக் கமிஷன் குறிப்பிட்டிருக்கிறது. அதாவது ராஜ்யத் தொழில் இலாகாக்களையும் அவற்றின் கிளைக் காரியாலயங்களையும் பலப்படுத்த வேண்டுமென்றும்; ஸ்தலச் சிப்பந்திகளுக்கும் கைத் தொழில் வினைஞர்களுக்கும் பயிற்சி வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென்றும் கமிஷன் தெரிவித்திருக்கிறது. கிராமத் தொழில்கள், சிறு தொழில்களுக்காக மத்திய அரசாங்கத்தில் ஒரு தனி மந்திரி-இலாகாவை ஏற்படுத்த வேண்டுமென்று கார்வே கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறது. பல்வேறு அகில இந்திய போர்டுகளின் தலைவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட இணைப்புக் கமிட்டி ஒன்றை அமைக்கவேண்டும் என்றும் அது யோசனை கூறியிருக்கிறது.

அத்தியாயம் 10

போக்குவரத்தும் செய்தித் தொடர்பும்

திட்டமிட்ட முறையில் இந்தியா முன்னேறுவதற்கு இணைப்பான போக்குவரத்து வசதிகள் அத்தியாவசியமானவை. யுத்த கால நெருக்கடியினால் சீர்குலைந்துபோன போக்குவரத்து சாதனங்களைச் சீரமைப்பதில்தான் முதலாவது ஐந்து வருஷத் திட்டம் முக்கிய கவனம் செலுத்தியது. தவிர, முதல் திட்ட கால இறுதியில் தொழில், விவசாய உற்பத்திப் பெருக்கினால் போக்குவரத்து சாதனங்களின் பொறுப்பு பெரிதும் அதிகரித்துள்ளது. ஆகவே பல்வேறு போக்குவரத்து வசதிகளை இணைப்பான முறையில் கணிசமாக விஸ்தரிப்பதற்கு இரண்டாவது ஐந்து வருஷத் திட்டம் முற்படுகிறது. இதற்காக ரூ. 1,385 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் ரயில்வேக்களுக்கு ரூ. 900 கோடியும்; ரஸ்தாக்கள், ரஸ்தாப் போக்குவரத்து சாதனங்கள், உல்லாசப் பிரயாண வசதிகள் ஆகியவற்றுக்கு ரூ. 266 கோடியும்; கப்பல்கள், துறைமுகங்கள், தீபஸ்தம்பங்கள், உள்நாட்டு ஜலவழிப் போக்குவரத்து ஆகியவற்றுக்கு ரூ. 100 கோடியும்; சிவில் விமானப் போக்குவரத்துக்கு ரூ. 43 கோடியும்; செய்தித் தொடர்புகள், ரேடியோ ஒலிபரப்பு ஆகியவற்றுக்கு ரூ. 76 கோடியும் செலவிடப்படும்.

ரயில்வே

நாட்டின் மிகப்பெரிய தேசியத் தொழிலாக ரயில்வேக்கள் விளங்குகின்றன. அவை ரூ. 970 கோடி மூலதனமும், 35,000 மைல் நீள இருப்புப் பாதையையும் கொண்டவை. இரண்டாவது திட்ட காலத்தில் மிக அதிகமான பண்டங்களையும் பிரயாணிகளையும் ரயில்வேக்கள் ஏற்றிச் செல்லவேண்டியிருக்கும். இதற்கு வசதியாக ரயில்வேயின் ஸ்தாவர, சஞ்சார சாதனங்களைச் சீரமைத்து நவீனமயமாக்கவேண்டும். 1955-

56-ல் ரயில்வேக்கள் 12 கோடி டன் பண்டங்களை ஏற்றிச் சென்றன. இரண்டாவது திட்ட உற்பத்திப் பெருக்கங்கள் காரணமாக 1960-61-ல் ரயில்வேக்கள் 18·1 கோடி டன் பண்டங்களை ஏற்றிச் செல்ல வேண்டியிருக்கும். ரயில்வே அபிவிருத்திக்கு இப்போது ஒதுக்கப்பட்டுள்ள நிதி வசதிகள் இவ்வளவு பெரிய பொறுப்பை நிறைவேற்றுவதற்குப் போத மாட்டா. அதாவது திட்டத்தில் உத்தேசித்துள்ளதைவிட ரோலிங் ஸ்டாக்கை (என்ஜின்கள், ரயில் பெட்டிகள், வாகன்கள்) 10 சதவிகிதமும் லைன் சக்தியை 5 சதவிகிதமும் அதிகரிக்க வேண்டியிருக்கலாம். பிரயாணி சர்வீஸ்களை ஐந்து வருஷ காலத்தில் 15 சதவிகிதம் அதிகரிக்க உத்தேசிக்கப்படுகிறது. இரும்பு-எஃகு, நிலக்கரித் தொழில்களை விஸ்தரிப்பது சம்பந்தமாகவும் வேறு அத்தியாவசிய காரியங்களுக்கும் தேவைப்படுகிற பகுதிகளில் 842 மைல் நீளத்துக்குப் புதிய ரயில் பாதைகள் போடப்படும். தவிர, நைந்துபோன 8,000 மைல் நீள ரயில் பாதைகள் புதுப்பிக்கப்படும். 1,607 மைல் நீளத்துக்கு இரட்டைப் பாதைகள் போடப்படும். 265 மைல் மீட்டர் கேஜ் பாதைகள் பிராட்கேஜாக மாற்றப்படும். 826 மைல் நீளத்துக்கு மின்சார ரயில் பாதை விஸ்தரிக்கப்படும். 1,293 மைல் நீளப் பாதையில் டீஸல் ரயில்கள் விடப்படும். இரண்டாவது திட்ட காலத்தில் 2,258 என்ஜின்களும், 1,07,247 வாகன்களும் (நாலு சக்கர வாகன் கணக்கில்); 11,364 ரயில் பெட்டிகளும் வாங்கப்படும். இவற்றில் நைந்து போன ரோலிங் ஸ்டாக்குக்குப் பர்த்தியாக 1,352 என்ஜின்களும், 23,852 வாகன்களும், 6,447 ரயில் பெட்டிகளும் உபயோகிக்கப்படும்.

இப்போதைய ஓர்க்ஷாப்புகள், ரன்னிங் ஷெட்டுகள் பலவற்றைச் சீரமைத்து விஸ்தரிக்கவும், புதிய ஓர்க்ஷாப்புகளை அமைக்கவும் திட்டத்தில் வசதி செய்யப்பட்டிருக்கிறது. மீட்டர் கேஜ் ரயில் பெட்டிகளைத் தயாரிப்பதற்கு ஒரு புதிய தொழிற்சாலை நிறுவப்படும். பெஞ்சுகள் முதலிய சாதனங்களை ரயில் பெட்டிகளில் பொருத்துவதற்கான பிரிவு ஒன்று பெரம்பூர் தொழிற்சாலையில் ஏற்படுத்தப்படும்.

சித்தரஞ்சன், "டெல்கோ" தொழிற்சாலைகளில் இப்போது வருஷத்துக்கு 175 ரயில் என்ஜின்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த உற்பத்தி அளவு 400 என்ஜின்களாக அதிகரிக்கப்படும். ரோலிங் ஸ்டாக், ஸ்டோர்கள் சம்பந்தமாக நாடு சுயநிறைவு பெறுவதற்கு, முயற்சி செய்யப்படும். வருஷத்திர்கு 1,260ஆக இருக்கும் ரயில் பெட்டி உற்பத்தி 1,800ஆக உயர்த்தப்படும்.

ரயில்வேயை உபயோகிப்பவர்களுக்கு, குறிப்பாக மூன்றும் வகுப்புப் பிரயாணிகளுக்கு, அதிக செளகரியங்கள் செய்து தரப்படும்.

ரஸ்தாக்கள்

1950-51-ல் இந்தியாவில் 97,000 மைல் நீள தள ரஸ்தாக்களும் 1,47,000 மைல் நீள சாதாரண ரஸ்தாக்களும் இருந்தன. முதல் திட்ட காலத்தில் சுமார் 10,000 மைல் நீள தள ரஸ்தாக்களும் 20,000 மைல் நீள சாதாரண ரஸ்தாக்களும் புதிதாகப் போடப்பட்டன. அதோடு 10,000 மைல் நீள சாதாரண ரஸ்தாக்கள் உயர்ந்த ரஸ்தாக்களாக மாற்றப்பட்டன. இரண்டாவது திட்ட காலத்தில் ராஜ்ய, மத்திய ரஸ்தா அபிவிருத்தி வேலைகளுக்காக ரூ. 246 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது தவிர, மத்திய ரஸ்தா நிதியிலிருந்து வேறு ரூ. 25 கோடி செலவிடப்படும். இதன் மூலம் "நாகபுரித் திட்டம்" நிர்ணயித்த அளவுக்கு ரஸ்தாக்களை விஸ்தரித்துவிடலாம் என்று மதிப்பிடப்படுகிறது.

தேசிய ரஸ்தாக்கள் சம்பந்தப்பட்டவரை, முதல் திட்ட காலத்தில் தொடங்கப்பட்ட வேலைகள் தொடர்ந்து நிறைவேற்றப்படும். அதோடு 600 மைல் நீள தேசிய ரஸ்தாக்களும் 60 பெரிய பாலங்களும் நிர்மாணிக்கப்படும். 1,700 மைல் நீள தேசிய ரஸ்தாக்கள் அபிவிருத்தி செய்யப்படும். 3,000 மைல் நீள ரஸ்தாக்கள் அகலப்படுத்தப்படும். தேசிய ரஸ்தாக்கள் தவிர, வேறு சில முக்கிய ரஸ்தாக்களையும் மத்திய சர்க்கார் அமைத்து வருகிறது. பல ராஜ்யங்களிடையே செல்லும் ரஸ்தாக்கள், பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த ரஸ்தாக்கள், ஆகியவற்றை அமைப்பதற்காக 1954-ல்

ஆரம்பிக்கப்பட்ட விசேஷ வேலை தொடர்ந்து நிறைவேற்றப்படும்.

• இரண்டாவது திட்ட காலத்தில் 18,000 மைல் நீள தரை ரஸ்தாக்களை அமைக்க ராஜ்ய சர்க்கார்கள் திட்டமிட்டுள்ளன.

ராஜ்யங்களில் தேசியமயமாக்கப்பட்ட ரஸ்தா (பஸ்) போக்குவரத்து சர்வீஸ்களுக்காக ரூ. 13·5 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டங்களில் ரயில்வேக்களும் பங்கெடுத்துக்கொள்ள வசதியாக ரயில்வே நிதியிலிருந்து ரூ. 10 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. டில்லி பஸ் போக்குவரத்து சர்வீஸுக்காக ரூ. 3 கோடி செலவிடப்படும்.

சாமான் போக்குவரத்து (லாரி) சர்வீஸ் முழுவதும், பிரயாணி (பஸ்) சர்வீஸ்களில் சுமார் முக்கால் பங்கும் தனியார்கள் வசமே இருந்து வருகின்றன. இரண்டாவது திட்ட காலத்தில் சாமான் போக்குவரத்து சர்வீஸைத் தேசியமயமாக்கக் கூடாது என்று திட்டக் கமிஷன் சிபாரிசு செய்திருக்கிறது. பிரயாணிகள் சர்வீஸையும் படிப்படியாகத்தான் தேசிய மயமாக்கலாம் என்று கமிஷன் குறிப்பிட்டிருக்கிறது. தனிப்பட்ட மோட்டார் சொந்தக்காரர்களுக்குப் பெர்மிட் வழங்குவது சம்பந்தமான நிபந்தனைகளைத் தளர்த்த வேண்டுமென்றும், மோட்டார் வாகனங்களுக்கு இரட்டை வரி விதிப்பதைத் தவிர்க்க வேண்டுமென்றும் கமிஷன் யோசனை கூறியிருக்கிறது.

உல்லாசப் பிரயாணம்

உல்லாசப் பிரயாண வசதிகள் அதிகரிக்கப்படும். முக்கியமான உல்லாசப் பிரயாண ஸ்தலங்களில் தங்குமிட வசதி, போக்குவரத்து சாதனங்கள், பொழுதுபோக்கு வசதிகள் முதலியவை ஏற்படுத்தப்படும்.

கப்பல்கள்

முதல் திட்ட காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட கப்பல்களில் சில இன்னும் உபயோகத்திற்கு வரவில்லை. எனினும், அத்திட்டத்தில் குறிப்பிட்ட லட்சிய அளவுக்கு (6 லட்சம் ஜி. ஆர். டன்கள்) கப்பல்கள் நிர்மாணிக்கப்பட்டு விட்டன.

இரண்டாவது திட்ட காலத்தில் மேலும் 3 லட்சம் ஜி. ஆர். டன் (மொத்தம் பதிவான டன்கள்) கப்பல்கள் கட்டப்படும். நைந்துபோன பழைய கப்பல்களுக்குப் பதிலாக வேறு 90,000 ஜி. ஆர். டன் கப்பல்கள் நிர்மாணிக்கப்படும். கப்பல் பலத்தை அதிகரிப்பதற்காக இரண்டாவது திட்ட காலத்தில் ரூ. 55 கோடி செலவிடப்படும். கிழக்கத்திக் கப்பல் கார்ப்பரேஷனிலும் புதிதாக ஏற்படவிருக்கும் மற்ருெரு கார்ப்பரேஷனிலும் முதலீடு செய்வதற்காக இதிலிருந்து ரூ. 20 கோடி பயன்படுத்தப்படும். தனிப்பட்ட கம்பெனிகள் கப்பல்களை வாங்குவதற்கு மிச்ச நிதியிலிருந்து உதவி அளிக்கப்படும். கடலோர வர்த்தகம் முழுவதையும் இந்தியக் கப்பல்கள் மூலமே நடத்தவும்; வெளிநாட்டு வர்த்தகத்தில் இந்தியக் கப்பல்களின் பங்கை அதிகரிக்கவும் வழிசெய்ய வேண்டும். இதுவே இரண்டாவது திட்டத்தின் இறுதிக் குறிக்கோள்.

துறைமுகங்கள்

துறைமுகங்கள் சம்பந்தமாக முதல் திட்ட காலத்தில் ஆரம்பமான வேலைகள் தொடர்ந்து நிறைவேற்றப்படும். ரேவுதுறைகளைச் சீரமைத்து அவற்றில் நவீன தளவாடங்களைப் பொருத்த ஏற்பாடு செய்யப்படும். நாட்டின் பொருளாதார, தொழில் அபிவிருத்திகள் காரணமாக எழக்கூடிய தேவையைத் துறைமுகங்கள் பூர்த்தி செய்ய இதன் மூலம் வழியேற்படும். பெரிய துறைமுகங்களின் அபிவிருத்திக்காக இரண்டாவது திட்டத்தில் ரூ. 40 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. கடலோர ராஜ்யங்களில் உள்ள சிறிய துறைமுகங்களும் அபிவிருத்தி செய்யப்படும். பிரதீப், மங்களூர், மால்பே முதலிய இடங்களில் சகல பருவத் துறைமுகங்களை அமைப்பது சம்பந்தமாக ஆராய்ச்சிகள் நடத்தப்படும். தூத்துக்குடித் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படும். சேது சமுத்திரத் திட்டம் சம்பந்தமான பூர்வாங்க வேலை ஆரம்பமாகும். சிறிய துறைமுகங்களுக்காக ரூ. 5 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே உள்ள தீபஸ்தம்பங்களை நவீன மயமாக்கவும், புதிய தீபஸ்தம்பங்களை அமைக்கவும் திட்டத்தில் நிதி வசதி செய்யப்பட்டிருக்கிறது.

உள்நாட்டு ஜலவழிப் போக்குவரத்து

உள்நாட்டு ஜலவழிப் போக்குவரத்தை அபிவிருத்தி செய்வதற்காகத் திட்டத்தில் ரூ. 3 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து பக்கிங்ஹாம் கால்வாயின் அபிவிருத்திக்காக ரூ. 115 லட்சமும்; மேற்குக் கடற்கரைக் கால்வாய்களுக்காக ரூ. 43 லட்சமும் செலவிடப்படும். மிச்ச நிதியும், ராஜ்ய சர்க்கார்கள் ஒதுக்கும் வேறு நிதிகளும், கங்கை-பிரம்மபுத்ரா போர்டு வகுக்கும் திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்படும்.

சிவில் விமானப் போக்குவரத்து

சிவில் விமானப் போக்குவரத்துக்காக ரூ. 12.5 கோடியும், விமானக் கார்ப்பரேஷன்களுக்காக ரூ. 30·5 கோடியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாவது திட்ட காலத்தில் எட்டு விமான நிலையங்களும் கிளைடர் நிலையங்களும் நிர்மாணிக்கப்படும். பல விமான நிலையங்களில் ரன்வேகள், டாக்சிப் பாதைகள், ஏப்ரன்கள், ஹாங்கர்கள், ரேடியோத் தொடர்பு சாதனங்கள், விமான ரூட் வசதிகள், தளவாடங்கள் முதலியவை அமைக்கப்படும். புதிய விமானங்களை வாங்கவும், விமானப் போக்குவரத்து வசதிகளை அபிவிருத்தி செய்யவும் விமானக் கார்ப்பரேஷன்கள் திட்டமிட்டுள்ளன.

செய்தித் தொடர்பு வசதிகள்

செய்தித் தொடர்பு வசதிகளை அதிகரிப்பதற்கு பல ஏற்பாடுகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. 20,000 தபால் ஆபீஸ்களும், 1,400 தந்தி ஆபீஸ்களும், 1,200 பொது டெலிபோன் ஆபீஸ்களும் நிறுவப்படும். 1,80,000 புதிய டெலிபோன்கள் அமைக்கப்படும். டிரங்க் டெலிபோன் வசதிகள் விஸ்தரிக்கப்படும். பம்பாய்-டில்லி-கல்கத்தா டிரங்க் மார்க்கத்திலும்; டில்லி-அமிர்தசரஸ் மார்க்கத்திலும்; அம்பாலா-சிம்லா மார்க்கத்திலும்; தாணா-புனா மார்க்கத்திலும் பாதாள கேபிள் போடும் வேலை மேற்கொள்ளப்படும்.

ரேடியோ ஒலிபரப்பு

ரேடியோ ஒலிபரப்பு சம்பந்தமாக முதல் திட்டக் குறிக்கோள்கள் பெரும்பாலும் நிறைவேறி விட்டன. ஒவ்வொரு

பாஷைக்கும் குறைந்தது ஒரு ஒலிபரப்பு நிலையமாவது ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தவிர, எல்லாப் பிரதேசங்களுக்கும் ரேடியோ கேட்கும் வசதி கிடைப்பதற்கு வழிசெய்யப்பட்டிருக்கிறது.

ஆகவே இரண்டாவது திட்ட காலத்தில் புதிய ஒலிபரப்பு நிலையங்களை ஏற்படுத்தும் நோக்கம் இல்லை. இப்போது உள்ள ஒலிபரப்பு வசதிகளை விஸ்தரிப்பதற்கே நடவடிக்கை எடுக்கப்படும். சில நிலையங்களில் சிற்றலை டிரான்ஸ்மிட்டர்கள் ஸ்தாபிக்கப்படும். தேசிய ஒலிபரப்பு நிகழ்ச்சிகள் பெரிதும் விரும்பப்படுவதால், அவற்றை அஞ்சல் செய்ய வசதியாக டில்லியில் 100 கிலோவாட் சிற்றலை டிரான்ஸ்மிட்டர் ஒன்றும், 100 கிலோவாட் நடு அலை டிரான்ஸ்மிட்டர் ஒன்றும் நிறுவப்படும். கல்கத்தா, பம்பாய், சென்னை நிலையங்களில் 50 கிலோவாட் சிற்றலை டிரான்ஸ்மிட்டர்கள் அமைக்கப்படும்; அதன் விளைவாக இந்நிலையங்களின் ஒலிபரப்புகளை நாடெங்கும் கேட்கலாம். வெளிநாட்டு ஒலிபரப்பு சர்வீஸை விஸ்தரிப்பதற்காக டில்லியில் இரு 100-கிலோவாட் டிரான்ஸ்மிட்டர்கள் ஸ்தாபிக்கப்படும்.

டெலிவிஷன் சாதனத்தை அமைக்கும் ஆரம்ப முயற்சி இரண்டாவது திட்ட காலத்தில் மேற்கொள்ளப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. கிராமங்களுக்கு ரேடியோ கேட்கும் வசதியை அளிப்பதற்காகச் சமுதாய ரேடியோ செட்டுகள் வினியோகிக்கப்படும். ஆயிரமும் அதற்கு மேலும் ஜனத்தொகையைக் கொண்ட கிராமங்களுக்கு இவை முதலில் வினியோகிக்கப்படும்.

அத்தியாயம் 11

கல்வியும் விஞ்ஞான ஆராய்ச்சியும்

நிதி வசதி

கல்வி வசதிகளை விஸ்தரிப்பதற்காக முதல் திட்டத்தில் ரூ. 169 கோடி ஒதுக்கப்பட்டது; இரண்டாவது திட்டத்தில் ரூ. 307 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்நிதி எவ்வாறு செலவிடப்படுகிறது என்ற விவரத்தைக் கீழே காணலாம்:

	(ரூ. கோடிகள்) முதல் திட்டம்	இரண்டாவது திட்டம்
ஆரம்பக் கல்வி	93	89
செகண்டரிக் கல்வி	22	51
சர்வகலாசாலைக் கல்வி	15	57
தொழில்நுணுக்கக் கல்வியும் தொழில் கல்வியும்	23	48
சமூகக் கல்வி	5	5
நிர்வாகம், நானாவிதச் செலவுகள்	11	57
மொத்தம்	169	307

முதல் திட்ட காலத்தை விட இரண்டாவது திட்டத்தில் கல்விக்காகச் சுமார் இருமடங்கு பணம் செலவிடப்படும் என்பதை அட்டவணை காட்டுகிறது.

ஆரம்பக் கல்வி

6 முதல் 11 வரையுள்ள வயது கோஷ்டியைச் சேர்ந்த குழந்தைகளில் 63 சதவிகிதத்தினருக்கும்; 11-14 வயது கோஷ்டிக் குழந்தைகளில் 23 சதவிகிதத்தினருக்கும் 1960-61 இறுதிக்குள் கல்வி வசதி கிடைக்கும். இதற்காக 53,000 ஆரம்பப் பள்ளிகளும்; 3,500 நடுத்தரப் பள்ளிகளும் புதிதாக நிறுவப்படும். இவற்றில் 28,400 பள்ளிகள் ஆதாரப் பள்ளிகளாக இருக்கும்.

செகண்டரிக் கல்வி

செகண்டரிக் கல்வியைச் சீரமைக்கும் வேலை இரண்டாவது திட்ட காலத்தில் தொடர்ந்து நிறைவேற்றப்படும்.

1955-56-ல் 256 ஆக இருந்த பல - பயிற்சிப் பள்ளிகள் 1960-61-ல் 1,187 ஆக அதிகரிக்கப்படும். 1,200 சாதாரணப் பள்ளிகள் உயர்தர செகண்டரிப் பள்ளிகளாக மாற்றப்படும். 1955-56-ல் 23 லட்சமாக இருந்த செகண்டரிப் பள்ளி மாணவர்களின்தொகை 1960-61 வாக்கில் 31 லட்சமாக அதிகரிக்கக் கூடும்.

விவசாயக் கல்வி

கிராமாந்தரப் பிரதேசங்களில் 200 செகண்டரிப் பள்ளிகளில் விவசாயப் பயிற்சிப் பிரிவுகள் ஏற்படுத்தப்படும். செகண்டரிக் கல்வி முடிந்ததும் தொழில்களிலோ சொந்தப் பிரவிருத்திகளிலோ ஈடுபட மாணவர்களுக்கு வசதி அளிப்பதற்காக 90 ஜூனியர் தொழில் நுணுக்கப் பள்ளிகள் நிறுவப்படும்.

சர்வகலாசாலைக் கல்வி

சர்வகலாசாலைக் கல்விக்குத் திட்டத்தில் ரூ. 57 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. சர்வகலாசாலைக் கல்வியின் தரத்தை உயர்த்தவும்; தொழில் நுணுக்க, விஞ்ஞானப் பயிற்சிகளுக்கு அதிக வசதியை ஏற்படுத்தவும் இந்நிதி பிரதானமாகப் பயன்படுத்தப்படும்.

தொழில் நுணுக்கக் கல்வி

நாட்டின் மேற்கு, வடக்கு, தெற்குப் பிராந்தியங்களில் உயர்தரத் தொழில்நுணுக்கப் பயிற்சிக் கழகங்கள் மூன்று நிறுவப்படும். தொழிற்சாலைகளின் ஒத்துழைப்புடன் போர்மன்களுக்கு (மேஸ்திரிகள்) பயிற்சி அளிப்பதற்கான திட்டம் ஒன்று அமல் நடத்தப்படும். தொழில்நுணுக்கக் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக, தொழில்நுணுக்க ஆசிரியர்களுக்கு நினைவூட்டுப் பயிற்சி போன்ற மறுபயிற்சிகள் அளிக்கப்படும். அச்சுத் தொழில்நுணுக்க மத்திய கழகம் ஒன்று நிறுவப்படும். தான்பாத்தில் உள்ள " இந்திய சுரங்க - அனுஷ்டான பூகர்ப்பப் பள்ளி " விஸ்தரிக்கப்படும். சுரங்க என்ஜினீரிங்கும் அதைச் சார்ந்த பயிற்சிகளும் அங்கு ஏற்படுத்தப்படும். என்ஜினீரிங் பட்டப்படிப்பு, டிப்ளமாப் படிப்பு ஸ்தாபனங்களின் தொகை 128-லிருந்து 158 ஆக அதிகரிக்கப்படும். மேல் பட்டதாரி, ஆராய்ச்சிப் பிரிவுகளில் 570 பேரும்; முதல்

பட்டப் பிரிவுகளில் 7,550 பேரும்; டிப்ளமாப் பிரிவுகளில் (ஃபோர்மன் பயிற்சி உட்பட) 11,300 பேரும்; ஜூனியர் தொழில்நுணுக்கப் பள்ளிகளில் 5,400 பேரும் ஆண்டுதோறும் சேர்வதற்கு 1960-61-வாக்கில் வசதி செய்யப்படலாம்.

சமூகக் கல்வி

சமூக, பொருளாதார முன்னேற்றத்துக்குச் சமூகக் கல்வி அத்தியாவசியமானது. எழுத்தறிவிப்பு - சமூகக் கல்வி நிலையங்களை நிறுவவும்; சமூகக் கல்வி ஊழியர்கள், அமைப்பாளருக்குப் பயிற்சி அளிக்கவும்; பாமர ரஞ்சிதப் புத்தகங்களை வெளியிடவும்; ஜனதாக் கல்லூரிகளை ஸ்தாபிக்கவும்; நூல் நிலையங்களை ஏற்படுத்தவும் இரண்டாவது திட்டத்தில் வசதி செய்யப்பட்டிருக்கிறது. 'தேசிய ஜீவாதாரக் கல்வி நிலையம்' ஒன்றும் ஸ்தாபிக்கப்படும்.

பத்து கிராமாந்தரக் கல்விக் கழகங்கள் உயர்தரக் கல்வி நிலயங்களாக அபிவிருத்தி செய்யப்படும். மாணவர்களுக்கு இப்போதை விட அதிகமான உபகாரச் சம்பளங்கள் வழங்கப்படும். ஹிந்தியும் பிரதேச பாஷைகளும் போஷித்து வளர்க்கப்படும். கலைகள், புதைபொருள் சாஸ்திரம், மனித சாஸ்திரம் ஆகியவற்றைக் கற்பதற்கு ஊக்கம் அளிக்கப்படும்.

உபாத்தியாயர்களுக்குப் பயிற்சி வசதிகளை அதிகரிக்கவும், சம்பள விகிதங்களை உயர்த்தவும் திட்டம் சிபாரிசு செய்திருக்கிறது. ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்துவதால் ஏற்படக்கூடிய அதிகப்படி செலவில் பாதி வரை தாங்கள் ஏற்றுக்கொள்வதாக மத்திய சர்க்கார் தெரிவித்திருக்கிறார்கள்.

விஞ்ஞான, தொழில்நுணுக்க ஆராய்ச்சி

தேசிய ஆராய்ச்சிசாலைகளையும், ஆராய்ச்சிக் கழகங்களையும் நிறுவுவதில் முதல் திட்டப் விசேஷ கவனம் செலுத்தியது. இரண்டாவது திட்ட காலத்தில் இந்த ஆராய்ச்சி வசதிகள் அபிவிருத்தி செய்யப்படும். தேசிய ஆராய்ச்சிசாலை விஞ்ஞானிகள், சர்வகலா சாலை ஆராய்ச்சியாளர்கள், மற்ற நிலையங்களின் ஆராய்ச்சியாளர்கள் ஆகியோர் இணைப்பாக வேலைசெய்து நாட்டை முன்னேற்றுவதற்கு வசதி செய்யப்படும். இவ்

விஷயத்தில் திட்டக் கமிஷனுக்கு ஆலோசனை கூறுவதற்காக விஞ்ஞானிகளின் குழு ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

விஞ்ஞான - தொழில் ஆராய்ச்சிக் கவுன்சிலின் அபிவிருத்தித் திட்டங்களுக்காக ரூ. 20 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. கவுன்சில் ஏற்கெனவே நடத்தி வரும் காரியங்களுக்காக வேறு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. காற்று விசை, இந்திய மூலிகைகள் ஆகியவை சம்பந்தமாக ஆராய்ச்சி நிலையங்கள் நிறுவப்படும். இரும்புக் கனியை உருக்குவதற்காக கோக்கிங் நிலக்கரிக்குப் பதில் வேறு வகை நிலக்கரியை உபயோகிப்பது சம்பந்தமாக ஆராய்ச்சி செய்யப்படும். மற்ற விஞ்ஞான, தொழில் நுணுக்க, என்ஜினீரிங், உயிர்நூல் விஷயங்கள் குறித்தும் ஆராய்ச்சிகள் நடத்தப்படும்.

அணுசக்தி இலாகாவின் வேலைகளுக்கு வேண்டிய நிதியும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சர்வகலாசாலைகளிலும் மற்ற ஆராய்ச்சி நிலையங்களிலும் விஞ்ஞான, தொழில்நுணுக்க ஆராய்ச்சிகளை நடத்தவும் போதிய நிதியுதவி அளிக்கப்படும். இந்திய விஞ்ஞானக் கழகம், போஸ் ஆராய்ச்சிக் கழகம், தொல்பொருள் கழகம், தாவர நூல் சர்வே ஸ்தாபனம், பிராணி நூல் சர்வே ஸ்தாபனம், பூகர்ப்ப சர்வே ஸ்தாபனம் முதலியவற்றுக்கு இவ்வாறு நிதியுதவி அளிக்கப்படும்.

விஞ்ஞான அறிவைப் பரப்பிவரும் இந்திய விஞ்ஞான காங்கிரஸ் சங்கம், தேசிய விஞ்ஞானக் கழகம் முதலியவற்றுக்கு மானியங்கள் தரப்படும்.

கிராமங்களில் 90 முதல் 100 வரை 'விஞ்ஞான மந்திர்கள்' நிறுவப்படும். விவசாயம், சுகாதாரம், துப்புரவு முதலியவை சம்பந்தமான அபிவிருத்தி ஏற்பாடுகளை நன்கு பயன்படுத்த வசதியாக, கிராமவாசிகளிடையே விஞ்ஞான அறிவை இந்த நிலையங்கள் பரப்பும்.

அளவை, நிறுவை முறைகளைத் தரப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு முதற்படியாக, இரண்டாவது திட்ட காலத்தில் தசாம்ச நாணய முறை அமலுக்குக் கொண்டுவரப்படும்.

அத்தியாயம் 12

சமூக வசதிகள்

பொருளாதார முன்னேற்றத்துக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிப்பவை சமூக வசதிகளே. இரண்டாவது திட்டத்தில், கல்வி நீங்கலாக மற்றச் சமூக வசதிகளுக்கு ரூ. 635 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. முதல் திட்ட நிதியைவிட இது இருமடங்காகும். ஆயினும் தேவையைக் கவனித்தால் இந்த நிதி கூடப் போதாதுதான். ஆகவே இத்துறையில் அரசாங்க முயற்சிக்குப் பக்கபலமாக மக்களும், உத்தியோகசார்பற்ற தலைவர்களும் முயற்சி செய்வது அவசியம்.

சுகாதாரம்

இப்போதைய சுகாதார வசதிகளை எல்லோரும் அனுபவிப்பதற்கும், தேசிய ஆரோக்கியத்தைப் படிப்படியாக உயர்த்தவும் வழி செய்வதுதான் இரண்டாவது திட்டத்தின் பிரதான நோக்கம். முதல் திட்டத்தில் சுகாதார, வசதிகளுக்கு ரூ. 140 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது; இரண்டாவது திட்டத்தில் ரூ. 274 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆஸ்பத்திரி வசதிகளை அதிகரிப்பதற்காக இதிலிருந்து ரூ. 43 கோடி செலவிடப்படும். 1960-61 வாக்கில் இவ்வசதிகள் எவ்வாறு அதிகரிக்கும் என்பதைப் பின்வரும் அட்டவணை காட்டுகிறது:

	1951	1955–56	1951ஐ விட அதிகரிப்பு சதவிகிதம்	1960–61	1955–56ஐ விட அதிகரிப்பு சதவிகிதம்
வைத்திய நிலையங்களின் தொகை	8,600	10,000	16	12,600	26
படுக்கைகளின் தொகை	1,13,000	1,25,000	10	1,55,000	24

கிராமாந்தரப் பகுதிகளில் நோய்த் தடுப்புக்கும் சிகிச்சைக்கும் இணைப்பான வசதிகளை ஏற்படுத்துவதில் போதிய

கவனம் செலுத்தப்படும். இதற்காக ரூ. 23 கோடி செலவில், அபிவிருத்தி வட்டாரங்களில் 3,000 சுகாதார நிலையங்கள் நிறுவப்படும்.

வைத்தியச் சிப்பந்திகளின் பயிற்சி வசதிகள் விஸ்தரிக்கப்படும். 1951-52-ல் 30 ஆக இருந்த வைத்தியக் கல்லூரிகள், 1955-56-ல் 42 ஆக அதிகரித்துள்ளன. ஆனால் இரண்டாவது திட்ட காலத்தில் தேவைப்படும் அளவு டாக்டர்களைப் பயில்விக்க இவை போதா. ஆகவே மேலும் சில வைத்தியக் கல்லூரிகளை அமைக்கவும், இப்போதைய கல்லூரிகளை விஸ்தரிக்கவும் உத்தேசிக்கப்படுகிறது. இதற்காக ரூ. 26.5 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. மக்களுக்குச் சாதாரண சுகாதார வசதிகளை அளிப்பதற்காகத் தேவைப்படும் வைத்தியச் சிப்பந்திகள் பற்றிய விவரம் வருமாறு :

	1950–51	1955–56	1960–61	தேவைப்படுவோரின் தொகை
1	2	3	4	5
டாக்டர்கள் ...	59,000	70,000	82,500	90,000
நர்ஸுகள் (துணை நர்ஸு - மருத்துவத்தாதிகள் உட்பட) ...	17,000	22,000	31,000	80,000
மருத்துவத் தாதிகள் ...	18,000	26,000	32,000	80,000
சுகாதாரப் பார்வையாளர்கள் ...	600	800	2.500	20,000
நர்ஸுத் தாயிகள், மற்றத் தாயிகள்	4,000	6,000	41,000	80,000
சுகாதார உதவியாளர்கள், சானிட்டரி இன்ஸ்பெக்டர்கள்	3,500	4,000	7,000	20,000

டாக்டர்கள் மாத்திரமன்றி நர்ஸுகள் மருத்துவத் தாதிகள், மருந்து தயாரிப்பாளர்கள், சானிட்டரி இன்ஸ்பெக்டர்கள் முதலிய மற்றச் சுகாதாரச் சிப்பந்திகள் சம்பந்தமாகவும் பயிற்சி வசதிகள் அதிகரிக்கப்படும்.

மலேரியா போன்ற தொற்று நோய்களை ஒடுக்குவதிலும், சூழ்நிலைச் சுகாதாரத்தை அபிவிருத்தி செய்வதிலும் விசேஷ கவனம் செலுத்தப்படும். மலேரியாத் தடுப்பு நிலையங்கள் 200 ஏற்படுத்தப்படும். ஒவ்வொரு நிலையமும் பத்து லட்சம் பேருக்குப் பாதுகாப்பு அளிக்கும். 25 வயதுக்குக் குறைந்தவர்களில், க்ஷயரோகத்துக்கு இலக்காகக் கூடியவர்கள் அனைவருக்கும் திட்ட காலத்தில் பி. ஸி. ஜி. ஊசி போடுவது விஸ்தரிக்கப்படும். 200 க்ஷயரோக சிகிச்சை நிலையங்கள் ஏற்படுத்தப்படும். நிலையங்களில் நோயாளிகள் குடியிருந்து சிகிச்சை பெறவும் வசதி செய்யப்படும்.

நகர ஜலசப்ளை, துப்புரவுத் திட்டங்களுக்காக ரூ. 53 கோடியும்; கிராம ஜலசப்ளை திட்டங்களுக்காக ரூ. 28 கோடியும்; கார்ப்பரேஷன்களுக்கு உதவியளிப்பதற்காக ரூ. 10 கோடியும் தற்காலிகமாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

நாட்டு வைத்திய முறைகளுக்கு ஊக்கம் அளிக்கவும்; போஷாக்கு, ஆலைத் தொழிலாளர் ஆரோக்கியம், தாய்-சேய் ஆரோக்கியம், க்ஷயரோகம், சூழ்நிலைச் சுகாதாரம், முதலியவை பற்றி ஆராய்ச்சி நடத்தவும் ஏற்பாடுகள் உள்ளன. குடும்பக் கட்டுப்பாடு திட்டத்துக்காக ரூ. 5 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது திட்ட காலத்தில், நகரங்களில் 300 குடும்பக் கட்டுப்பாடு நிலையங்களும், கிராமங்களில் 2,000 நிலையங்களும் ஏற்படுத்தப்படும்.

ஜாகை வசதி

உலக யுத்தத்தினாலும், தேசப் பிரிவினையாலும் நகரங்களில் ஜாகை நெருக்கடி ஏற்பட்டது. தேச அபிவிருத்தி வேலைகளின் விளைவாக இந் நெருக்கடி முற்றி வருகிறது. முதல் திட்ட காலத்தில் அரசாங்கத் துறையிலும், தனியார் துறையிலும் சுமார் 13 லட்சம் வீடுகள் கட்டப்பெற்றன. இரண்டாவது திட்ட காலத்தில் சுமார் 19 லட்சம் வீடுகளைக் கட்ட வேண்டியிருக்கும்.

நகர, கிராமப் பகுதிகளில் படிப்படியாக ஜாகைகளை அதிகரிப்பதற்கு ஒவ்வொரு ராஜ்யமும் திட்டமிட வேண்டும் என்று யோசனை கூறப்பட்டிருக்கிறது. நகரப் பகுதிகளில்

சேரிகளைச் சீரமைக்கவும்; துப்புரவுத் தொழிலாளர், ஆலைத் தொழிலாளர் ஆகியோருக்கு மானிய உதவியுடன் வீடு கட்டவும் நடவடிக்கை எடுக்கவேண்டும். எல்லா முக்கிய நகரங்களுக்கும் "மாஸ்டர் பிளான்"களைத் தயாரிக்கவேண்டும். நகர, கிராம நிர்மாண அபிவிருத்தி சம்பந்தமாகச் சட்டமியற்ற வேண்டும்.

கிராமாந்தரப் பிரதேசங்களில் உள்ள 540 லட்சம் வீடுகளில் பெரும்பாலானவை புனர்நிர்மாணம் செய்ய வேண்டிய நிலைமையில் உள்ளன. அகன்ற வீதிகள், சாக்கடை வசதி, வீடுகளிடையே காலி இடம் விடுதல், சமுதாயப் பொதுக் கட்டடங்கள், குழந்தைகளுக்கு விளையாட்டு மைதானம் முதலிய வசதிகளை ஏற்படுத்தும் விதத்தில் ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒரு நிர்மாணத் திட்டத்தை வகுக்கவேண்டும். ஸ்தல சாமான்களையே கூடியவரை உபயோகித்து வீடுகட்ட வசதியாகக் கிராமங்களுக்கு ஏற்ற ஜாகை டிசைன்களைத் தயாரிக்க வேண்டும். இதற்காக ராஜ்ய அரசாங்க ஜாகை இலாகாவில் தொழில் நுணுக்கவாதிகளின் சிறிய பிரிவு ஒன்றை ஏற்படுத்தவேண்டும்.

மானிய உதவியுடன் ஆலைத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவது, குறைந்த வருமானக்காரர்களுக்கு ஜாகை நிர்மாண உதவி, சேரிச் சீரமைப்பு, துப்புரவுத் தொழிலாளர் ஜாகை வசதி, மலைத்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஜாகைகள், கிராமாந்தர ஜாகை வசதி, மத்திய வருமானக்காரர் ஜாகை வசதி என்ற திட்டங்களுக்காக ரூ. 120 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

பின்தங்கியோர் க்ஷேமநலம்

பின்தங்கிய மக்கள் பிரிவினர்களின் க்ஷேமநலத்துக்காக முதல் திட்டத்தில் ரூ. 39 கோடி ஒதுக்கப்பட்டது; இரண்டாவது திட்டத்தில் ரூ. 91 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் ஷெட்யூல் ஆதிவாசிகளுக்காக ரூ. 47 கோடியும், ஷெட்யூல் வகுப்புகளுக்காக ரூ. 27·5 கோடியும் மற்றப் பின்தங்கிய வகுப்புகளுக்காக ரூ. 9·7 கோடியும், மாஜி குற்ற பரம்பரையினருக்காக ரூ. 3·9 கோடியும், நிர்வாக ஏற்பாடு

களுக்காக ரூ. 29 கோடியும் செலவிடப்படும். ஆதிவாசிப் பிரதேசங்களில் போக்குவரத்து, வைத்திய, சுகாதார, குடியமைப்பு, கல்வி, ஜலசப்ளை, ஜாகை வசதிகள் ஏற்படுத்தப்படும். ஆதிவாசிகளின் கலாசாரத்தையும் வளமுறைகளையும் ஆதாரமாகக் கொண்டே அவர்கள் சம்பந்தமான க்ஷேமநலத் திட்டங்களை வகுக்க வேண்டும்.

தீண்டாமை ஒழிப்பு, சமூகக் கட்டுப்பாடுகளை ஒழிப்பது, பொருளாதார உதவி அளிப்பது, கல்விச் சலுகைகளை வழங்குவது என்பன போன்ற வழிகளில் பின்தங்கிய வகுப்பினர்களின் நிலை உயர்த்தப்படும். முதல் திட்ட இறுதி வருஷத்தில் பின்தங்கிய வகுப்புகளுக்கு 31,456 உபகாரச் சம்பளங்களைக் கல்வி மந்திரி-இலாகா வழங்கியது. இரண்டாவது திட்ட காலத்தில் இவர்களுக்கு 2,32,000 உபகாரச் சம்பளங்கள் வழங்கப்படும்.

சமூக க்ஷேமநலம்

முதல் திட்ட காலத்தில் மத்திய சமூக க்ஷேமநல போர்டை இந்திய சர்க்கார் நிறுவியது. மாதர்கள், குழந்தைகள், ஊனமுற்றோர், இளங்குற்றவாளிகள் முதலியோரின் க்ஷேமநலத்துக்காகச் சேவா ஸ்தாபனங்களைத் திரட்டுவதற்கே இந்த போர்டு அமைக்கப்பட்டது. மத்திய போர்டும் ராஜ்ய சர்க்கார்களும் சேர்ந்து, ராஜ்ய சமூக க்ஷேமநல போர்டுகளை நிறுவின. இவ்விதம் தேச வியாபகமாக ஸ்தாபன ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதால் இரண்டாவது திட்ட காலத்தில் பெரிய அளவில் க்ஷேமநல வேலைகளை மேற்கொள்ள முடியும்.

சமூக க்ஷேமநல வேலைகளுக்காக இரண்டாவது திட்டத்தில் ரூ. 29 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் மத்திய சர்க்காரின் பங்கு ரூ. 19 கோடி; ராஜ்ய சர்க்கார்களின் பங்கு ரூ. 10 கோடி. க்ஷேமநல விஸ்தரிப்பு வட்டாரங்களை அதிகரித்தல்; மாதர்கள், குழந்தைகள், ஊனமுற்றோருக்குச் சேவை செய்யும் ஸ்தாபனங்களுக்கு உதவி அளித்தல்; இளங் குற்றவாளிகள், பிச்சைக்காரர்கள் முதலியோரைச் சீர்படுத்துதல் என்பன போன்ற பல வேலைகள் நிறைவேற்றப்படும். இளைஞர்களின் க்ஷேமநலத்துக்காகவும்; மன-தேக ஊனமுற்றோ

ருக்காகவும் ரூ. 11 கோடி செலவிடப்படும். தவிர, ஸ்தல அபி விருத்தி வேலைகளுக்காக ரூ. 15 கோடியும், பொதுஜன ஒத் துழைப்புத் திட்டங்களுக்காக ரூ. 5 கோடியும் ஒதுக்கப்பட் டிருக்கிறது.

தொழிலாளர் க்ஷேமமும் பயிற்சியும்

தொழிலாளர் சம்பந்தமான திட்டங்களுக்காக ரூ. 29 கோடி செலவிடப்படும். இதில் மத்திய சர்க்காரின் பங்கு ரூ. 18 கோடி; ராஜ்ய சர்க்கார்களின் பங்கு ரூ. 11 கோடி தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் அதிகமாகத் தேவைப்படுவ ராதலால் தொழிலாளருக்குப் பயிற்சி அளிப்பதில் விசேஷ கவனம் செலுத்தப்படும். தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள், போதகர்கள் ஆகியோருக்குப் பயிற்சி அளிக்க "அப்ரண்டீஸ்" திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. மற்றும் 19,700 தொழிலா ளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். வேலை தேடித்தரும் ஸ்தாபனங்கள் (எக்ஸ்சேஞ்சுகள்) 120, புதிதாக ஏற்படுத்தப் படும்.

சாந்தி பிரஸ், சென்னை-1